செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை


திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும்பணி	க
இறைமையில் இசைந்த வாழ்வு	கஉ
உயிர்மெய்ம் முதல் வேர்ச் சொற்கள்	உசு
தமிழில் எழுதுவோம்	௩உ
ஆப்பிரிக்கச் சுற்றுலா	௪க
தமிழிலக்கியத்தில் மகண்மா	௫க
மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு ......பாராட்டு	௫எ
கழக ஆட்சியாளர் பவளவிழாவுக்கு ஆவியுலகு வாழ் மறைமலையடிகள் குழுவினர்...வாழ்த்துரை	௫அ
செய்திமடலில் ஓர் இனிய காட்சி	௫௯
திரு. ஜி. ஏ. நடேசன் நூற்றுண்டு விழா	சு0
பேராசிரியர் இலக்குவனர் மறைவு	சுஉ
செய்திகளும் குறிப்புகளும்	சு௩

சிலம்பு ௪௮] வள்ளுவர் ஆண்டு உ௦௦௪, ஆவணி (Sep' 73) [பரல் க

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

Vol. XLVIII 1973—74



செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

நாற்பத்தெட்டாம் சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு
௨௦௦௪—௨௦௦௫

The South India Saiva Siddhanta Works

 Publishing Society, Tinnevelly, Ltd.,

Madras-1. Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1,
Kumbakonam Trichirappalli-2

'செந்தமிழ்ச் செல்வி'

உள்ளுறை

அகத்திணை நோக்கில் சங்க நூல்கள்
—ம.ரா.போ. குருசாமி M.A., M.Lit. ௧௧௬
அணில் வரிக்காய்—புலவர் இரா. இளங்குமரன் ௪௧௭
அணையா விளக்கு!—கோவேள் ௭௪
அண்ணுவின் புகழ்—தவயோகி சுத்தானந்த பாரதி ௭௫
அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு அவர்களின் பேரா இயற்கை ௨௯௯
அருளாட்சி ௧௮௦
அருள்மிகு தண்டபாணி அடிகள் ௩௫௩
அறத்தின் முதலாய் அமைந்தருளே ௨௪௩
அனிச்ச அடி - நாடகம் - ஆய்வுரை
—'தமிழண்ணல்'
டாக்டர் இராம பெரியகருப்பன் ௮௧, ௧௪௫
ஆட்சி மொழியாகத் தெலுங்கு ௧௮௮
ஆண்மகப் பேற்றினை உயர்வென்றல்
—வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் ௪௦௧
ஆப்பிரிக்கச் சுற்றுலா
—கவியோகி சுத்தானந்த பாரதியார்
௪௧, ௯௩, ௧௭௬, ௨௧௫, ௨௬௭,
௩௨௬, ௩௭௭, ௪௨௫, ௪௭௫,
௫௩௧, ௫௭௬, ௬௫௨
ஆயிரம் பிறைகண்ட அருந்தமிழ்ப் புலவர் ௧௮௧
ஆராய்ச்சிக்குரியதோர் அரிய கருவி ௫௫௫
இசையின் ஆற்றல் ௨௬௬
இசைத்தட்டில் முருகப் பெருமான் போற்றி ௨௪௪
இசைத் துறையில் அடிமை நிலை
—வீ.ப.கா. சொல்லழகன் க.மு. ௨௧௪
இந்திய நாட்டின் பழங்குடியினர் தமிழரே ௫௩௮
இந்தோ - ஐரோப்பிய இனங்கள், மக்களின் தோற்றம்
—நூலகர் ௫௩௧
இயல் - இசை - நாடக மன்றம் ௧௨௪
இரங்கல்—பேராசிரியர். ஆ. சிவலிங்கனுர் ௧௨
இரங்கல் உரைகள் ௨௧௫

இரங்கற் பாக்கள் ௨௯௭
இலக்கியப் பதிகம் வளர்ச்சி வரலாறு
—திரு. க.ப. அறவாணன் ௫௯௧
இலங்கை உலகத் தமிழ் மாநாட்டுத்......வரவேற்பு ௩௫௬
இளநீர் (ஒரு சொல்லாராய்ச்சி)—பி.எல். சாமி பி.எஸ்ஸி. ௩௨௧
இறைமையில் இசைந்த வாழ்வு
—திரு. மா. சண்முக சுப்பிரமணியம் ௧௨.
உயிர் மெய்ம் முதல் வேர்ச் சொற்கள்
—ஞா. தேவநேயன் ௨௬, ௭௬, ௧௩௩, ௨௩௧, ௩௧௦,
௪௬௪, ௫௧௦, ௫௬௬ ௬௨௫
உரை நடை வளர்ச்சி—வ.சு. ௧௨௩
உலகப் பொது நோக்காளர் கழக நூற்ருண்டு விழா ௨௮௨
எண்ணும் எழுத்தும் ௧௪௦
என் கடன் பணிசெய்து கிடப்பதே ௩௮௧
கட்டுப்பாடின்மையால் வந்த வினை ௪௨௪
''கண்களி மயக்கக் காதலர்''—புலவர் இரா. இளங்குமரன் ௫௫௦
கலைத்தந்தை கருமுத்து தியாகராயச் செட்டியார்
அவர்கள் மறைவு ௬௫௬
கவிதையில் குறிப்புப் பொருள்
—சொ. சிங்காரவேலன் ௩௯௩
கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வித்துவான்
வே. மாணிக்கவாசகம் பிள்ளை மறைவு ௪௯௬
கழக ஆட்சியாளர் பவள விழாவுக்கு ஆவியுலகு
வாழ் மறைமலையடிகள்......வாழ்த்துரை ௫௮
கழகம் ஆற்றிய வரலாற்று நூற் சிறப்புப் பணி ௩௦௫, ௩௬௧, ௪௦௯,
௪௫௭, ௫௦௫, ௬௦௯
கிழவர் இளங்கோ—புலவர் இரா. இளங்குமரன் ௩௩௩
குடல் நோய்கள்
—டாக்டர் முருகவேள் பாலசுந்தரம், இலங்கை ௨௨௭
குருதி அமுத்தம்—இலங்கை முருகவேள் பாலசுந்தரம்,
பி ஓ.எல். (ஆனர்சு) ௧௪௧
குறுந்தொகையும் குடும்ப விளக்கும்
—நெல்லை ந. சொக்கலிங்கம் ௩௮௯
கோவை அறிவியல் கோவேந்தர்
—பாவலன் வீ.ப.கா. சொல்லழகன் ௨௯௮

"சங்க இலக்கியத்தில் இரம் என்ற மரம்"
—பி.எல். சாமி, பி.எஸ்.ஸி. ௫௮௦
சங்க இலக்கியத்தில் சில அரிய மரஞ் செடி கொடிப் பெயர்கள்
—பி.எல். சாமி, பி.எஸ்.ஸி. ௫௧௯
சில இலக்கிய கல்வெட்டுகளில் வழக்குகள்
—பி.எல் சாமி, பி.எஸ்.ஸி. ௧௭௨
சிலப்பதிகார ஆராய்ச்சி - புலவர் இரா. இளங்குமரன் ௩௮௨
சிலப்பதிகாரச் சிறப்பு ௫௫௩
சீகன் பால்குவின் தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி
—நூலகர் ௫௮௬
சீர்திருத்தத் தந்தை பெரியாரின் பெரும் பிரிவு ௨௯௨
சீவன் முத்தி ௨௬௩
செங்குட்டுவனின் மறனிழுக்கா மானம் ௩௮௮
செங்குட்டுவன் ௩௩௭
செய்திகளும் குறிப்புகளும் ௬௩, ௧௨௫, ௧௯௦, ௨௪௮, ௩௦௧, ௩௫௮, ௪௦௭, ௪௫௩, ௫௦௧, ௫௫௭, ௬௦௭, ௬௬௨
செய்தி மடலில் ஓர் இனிய காட்சி
—பேராசிரியர் ஔவை துரைசாமி பிள்ளை ௫௯
சென்னை, தமிழ் இசைச் சங்கம் பண்ணாராய்ச்சியின்
24ஆம் கூட்டம் ௨௯௯
சோவியத் நாட்டு நேரு விருது ௨௪௬
டாக்டர், இலட்சுமணசுவாமி முதலியார் மறைவு ௫௦௦
டாக்டர் ஔவை நடராஜன் அவர்கட்குப் பாராட்டு ௪௦௬
டாக்டர் மெக்ளீனின் சென்னை மாகாண ஆட்சித் துணை நூல் ௬௪௧
தமிழிலக்கியத்தில் மகண்மா—பி.எல். சாமி, பி.எஸ்.ஸி. ௫௧
தமிழில் எழுதுவோம்—கி. இராமலிங்கனார் எம். ஏ.
௩௨, ௧௦௫, ௧௮௧, ௨௦௮, ௨௮௩, ௩௩௮, ௩௬௮, ௪௪௨, ௫௩௯, ௬௦௦, ௬௪௯
தமிழும் மலையாளமும்
—பேரா. க. த. திருநாவுக்கரசு எம்.ஏ., ௪௩௧, ௪௮௪, ௫௨௫
தமிழ்க் கல்சாலை சமற்கிருத கலாசாலையாகும் நிலை ௪௩௬
தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிக்குத் தனித்துறை ௪௯௯
தமிழ்த் தூய்மை—மறைமலையடிகள் ௧௭௫

தமிழ் பயிற்று மொழியாதற்கு எழுப்பும் போலித் தடைகள்
—கூகலூர் புலவர் முனியப்பன் சங-அ
தருணமிதே ங-அக
தாயம்மை அருணாசலம் திருமண வழி ஓர் உவகைச் செய்தி அ0
தாய் மொழியைப் பாதுகாத்தல்—மறைமலையடிகள் ச0
திருக்குறளை ஆங்கிலத்திலே....வரவேண்டாமா ? சுருள
திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி
க, சுரு, கஉக, ககூங, உசக
திருச்சியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்
கிளை திறப்பு ச0ச
திரு. ஆ. இராசகோபால் பிள்ளை பிரிவு சுசுக
திரு. பி.எம். பொன்னுசாமி முதலியார் மறைவு ங00
திரு. மு. அருணாசலத்தின் தமிழ்......வசை புராணம்
—திரு. சி. சிவராமலிங்கம் எம்.ஏ. ஙசள
'திருமுறை'களும் 'திருவருட்பா'வும்
—குருகுலம் அழகரடிகள் கசுக
திருவள்ளுவர் கலைக்கோயில் (நினைவாலயம்) ச0ங
திரு. ஜி.ஏ. நடேசன் நூற்றாண்டு விழா சு0
தொல்காப்பியக் கலைக்களஞ்சியம் ஒரு வேண்டுகோள் ங0ச
'நல்லாசிரியர்' விருது பெற்ற நற்றமிழ்ப் புலவர் தணிகை
உலகநாதன் அவர்கள் ச0க
நல்லிசைப் புலவர் யார் ? ருஉச
நன்றி மறவாமை ஙஉரு
நாம் அஞ்சுமாறே உஉங
நாவலரரம் இலக்குவனர் நமைப் பிரிந்தார்
—நெல்லை ந. சொக்கலிங்கம் எம்.ஏ., சுஉ
நினைப்பிரியாத நிலைமையும் வேண்டும் உஎக
நீகிரோ — திராவிடப் பண்பாடுகள் ருருச
நோக்கு — திருக்குறள்பீடம் குருகுலம் அழகரடிகள் உஙக
பராபரக் கண்ணி — ஓர் ஆய்வு—நா. உசாதேவி எம்.ஏ., உருக
பழந்தமிழரின் சம உடைமை நெறி
—தாயம்மாள் அறவாணன் எம்.ஏ., உஉச
பள்ளித் தமிழாசிரியர்கட்குக் கழக ஆட்சியாளர் வேண்டுகோள் சகூசு

பாப்பரணை (ஒரு சொல் வழக்கு ஆராய்ச்சி)
—பி.எல். சாமி, பி.எஸ்ஸி., ௪௨௦
பாராட்டுப் பெற்ற புலவர் ௧௨௪
பிளெய்னியின் 'தென்னிந்தியா'—'நூலகர்' ௪௯௧
புலிகளை வென்ற காட்டுப் பன்றி—புலவர். பொ.முனியப்பன் ௯௩௮
புலிசைப் பத்து—பேராசிரியர். ஆ. சிவலிங்கனார், ௨௮௦
பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் கலைஞர் அவர்களுக்கு வரவேற்பு ௫௫௯
பேச்சுத் தமிழில் — ஒரு புதிய பண்பு விகுதி
—டாக்டர் சொ. சிங்காரவேலன்
M.A., Dip. Ling., Phd., ௨௭௭
பேராசிரியர் ஆர். சனுர்த்தனம் நாயுடு பெரும் பிரிவு ௨௪௯
பேராசிரியர் இலக்குவனார் மறைவு ௯௨
பேராசிரியர் தி. செல்வக் கேசவராயருக்கும் டாக்டர்
போப்பையருக்குமுள்ள தொடர்பு ௫௯௧
பேராசிரியர் பெரும்பிரிவு [டாக்டர் சி. இலக்குவனார்]
—புலவர் இரா. இளங்குமரன் ௧௧௧, ௧௫௯
மகாத்மா நீ வாழ்க !—யோகி சுத்தானந்த பாரதியார் ௫௦
மதிப்புரை ௩௯௦, ௪௫௯, ௫௯௦
மதுரைத் தமிழிசைச் சங்கத்திற்கு 6 லட்ச ரூபாய் நன்கொடை ௩௫௭
மருந்து ௧௦௪
மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு அவாய்ப் பல்கலைக்
கழகப் பேராசிரியரின் பாராட்டு ௫௭
மனிதன் மனிதனுக வளரும் படிமுறை
—அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கர் பி.இ. ௫௯
முத்தமிழ் தந்த முப்பூ—புலவர் பொ. முனியப்பன் ௧௦௦
"முளவுமா" முள்ளம் பன்றியா?
—இரா. மதிவாணன், M.A., B.Ed., சேலம். ௯௩௨
மைசூர் "கன்னட நாடு" ஆகியது ௧௨௪
மொழி ௨௭௯
யோக நித்திரை (அறிதுயில்) ௩௭௯
வடமொழிக் கலப்பு ஏற்பட்டது எப்படி? ௫௯௯
வடமொழி வேதமும் தமிழ் மறையும்
—என்.கே. வேலன் பி.ஏ. ௩௯௯
வித்துமிடல் வேண்டும்—ஆபிரகாம் அருளப்பன் ௪௧௫

படங்கள்

இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளையவர்கட்கு
ஆயிரம் பிறைக்குமேல் ஆயுள்வளர் விழா ௧௮௮

(1) திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் மீனுட்சி திருமணம் பற்றி இசைச் சொற்பொழிவாற்றுதல்.

(2) கழக ஆட்சியாளர் தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை பரிசுப் பொருள் வழங்குதல்.

(1) திருமுருக கிருபானந்தவாரியார் புனித நீராட்டுதல்.

(2) கழக ஆட்சியாளர் புனித நீராட்டுதல்.

கழகத்தின் திருச்சிக் கிளை நிலையத் திறப்பு விழா
(4—3—1974) ௬௪௩

திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கித் திறந்து வைத்துப் பேசுதல்.

பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் கலைஞர் அவர்களுக்கு
வரவேற்பு ௫௫௯

3 11-1973இல் ஆயிரம் பிறைகண்ட விழாச்
செல்வர் செல்வியர்க்கு ௧௮௯

———

17.9/73

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௮	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, ஆவணி செப்டம்பர் 1973	பரல் ௧

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(சிலம்பு ௪௭, பரல் ௧௧-௪௪௦ ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறள் சொற்பொருள் விளக்கம்

இதனை இயற்றியவர் செந்தமிழ்ப் புலவர் செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளை யாவர். இவர் கல்வி கேள்விகளில் வல்லவராய் முகவை மாவட்டம் பாகனேரியில் பெரிய நிலக்கிழார் ஒருவரிடம் கணக்குப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் இளமையில் பெரும்புலவர் ஒருவரிடம் இலக்கண இலக்கியங்களைப் பாடம் கேட்டதன்பின் பாகனேரியிலுள்ள தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் நூல் நிலையத்திலுள்ள நூல்களைத் தம்முடைய ஓய்வு நேரங்களில் படித்துத் தமது புலமையினைப் பெருக்கி வந்தனர்.

முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்கள் பாகனேரியில் நடந்த பாகனேரி இளைஞர் தமிழ்ச் சங்க விழாவுக்குத் தலைமை தாங்கியபோது புலவர் திரு. இராமசாமிப் பிள்ளை இயற்றிய வரவேற்பிதழ் பண்டிதமணியவர்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தது. கழகத் தலைவர் திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் பொருளுதவியால் பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாகக் கழகவழி அச்சிடப்பெற்ற நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இயற்றிய சிலப்பதிகார உரை நூலுக்குத் திருப்பிள்ளையவர்கள் இயற்றி வழங்கிய 100 வரிகளைக் கொண்ட

உரைச்சிறப்புப்பாயிரம் புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெறுகின்றது. யான் பாகனேரிக்கு இரண்டு மூன்று முறை போயிருந்தபோது புலவர் செ. ரெ. இராமசாமிபிள்ளை யவர்களோடு அளவளாவக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. எனவே, 1949 இல் அவர்களைச் சென்னைக்கு வரவழைத்துக் கழக நூற்பதிப்புத்துறையில் கழகப் பெரும்புலவர் ப. இராமநாத பிள்ளையவர்கட்கு அடுத்த நிலையிலிருந்து புலமைத் தொண் டாற்ற அமர்த்தினேன்.

தமிழ்நாட்டுக்குத் தெய்வத் திருமறையாயும் உலகுக்குப் பொதுமறையாயும் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் விளங் குவது யாவரும் அறிவர். திருக்குறளுக்கு முன்னரே உரை கண்டவர் பலர்; இன்றும் காண்கின்றனர் சிலர்; இனிக் காண் பாரும் பலராகலாம். உரையாசிரியர்களிற் பரிமேலழகர் திருக் குறளுக்கு இயற்றிய உரையே புலவர்களாற் பெரிதும் போற்றப் பெறுகின்றது. இவ்வுரை கொண்டு திருக்குறளின் பொருளை எவரும் எளிதிலே புரிந்துகொள்ள முடிவதில்லை. எனவே, சிலர் திருக்குறளை உரைநடையில் எழுதி வெளியிட்டுள்ளனர். திருக்குறளைப் பின் இரண்டடியில் வைத்து அதன் கருத்தை விளக்கக்கூடிய புராண இதிகாசங்கள் முதலிய இலக்கியங்களி லுள்ள கதையினைப் பின் இரண்டடியில் அமைத்து வெண்பா வாக ஆக்கிய சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் முதுநெறி வெண்பா, இரங்கேச வெண்பா முதலிய நூல்கள் சில வெளிவந்துள்ளன. கவிச்சிங்க நாவலர் செகவீரபாண்டிய ஞர் தாமே 1330 குறட்பாக்களுக்கும் வெண்பா இயற்றி அதற்கு உரை விளக்கமும் எழுதித் திருக்குறள் குமரேச வெண்பா வெனப் பெயரமைத்துத் தாமே அச்சிட்டு வெளிப்படுத்திய செயல் அறிஞர்பெருமக்களால் பெரிதும் போற்றப்படுகின்றது.

திருக்குறள் ஒவ்வோர் அதிகாரத்தின் பொருளையும் உரை நடையில் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் கழகப் புலவர் திரு இராமசாமி பிள்ளை 18 $\times$ 12 செ. மீ. அளவி லுள்ள நூலில் ஒவ்வொரு பக்கத்திலேயே அமையும்படி எழுதி யுள்ளனர். பொருளை விரிக்க வேண்டிய இடத்தில் விரித்தும் சுருக்க வேண்டிய இடத்திற் சுருக்கியும் தொகுத்தெழுதி யிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

திருக்குறள் அறத்துப்பால் தண்டபாணி விருத்தியுரை தனி நூலாக வெளிவந்துள்ளது. அவ் வறத்துப்பால் உரை யினை முடித்துப் பொருட்பாலுக்கு உரையெழுதத் துவங்கிய காலை திரு. தண்டபாணிப் பிள்ளையவர்கள் என்புருக்கி நோயால்

தாக்கப்பட்டுப் பொருட்பாலில் 43 பாக்களுக்கே உரை எழுத முடிந்தது. அந்த அளவில் அவர்கள் காலமாகிவிட்டதால், அந்த 43 பாக்களை மட்டும் உரையுடன் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிட்டு வந்தேன். அதனைத் தொடர்ந்து அதே முறையில் உரை எழுதும் ஆற்றல் உடையவர் திரு இராமசாமி பிள்ளையவர்களாகையால் அவர்களை உரை எழுதச் சொன்னேன். அவர்கள் 424 முதல் 771 ஆவது குறட்பா முடிய உரை எழுதினர். 1957இல் அவருக்குத் திடுமெனப்பக்கவாதநோய்ஏற்பட்டுப் பேச்சுக் குழறலும், உடம்பின் வலப்பக்க முழுமையும் இயங்கா நிலையும் ஏற்படவே ஓரிரு திங்கள் வரை சென்னையிலே தங்கி மருத்துவஞ் செய்தும் நலங் வாய்க்காமையினால் அவர்களுடைய சொந்த ஊருக்கு அனுப்பிவைக்கப்பெற்றனர். மூன்றாண்டு வரை அந்நோய் நீங்கப்பெறாமையால் இறையடி சேர்ந்தனர். அவர்கள் விட்ட இடத்திலிருந்து மேலுமுள்ள குறட்பாக்களுக்கு உரை எழுதி முடித்தற்குத் தகுதியான ஒருவரை நாடுகின்றேன். இறைவன் திருவருளால் எண்ணிய எண்ணம் நிறைவுறும் என்ற திண்ணமுடன் இருக்கின்றேன்.

இங்கே அவர்தாம் கழகவழி ஆற்றிய புலமைத் தொண்டை விளக்குவது இன்றியமையாததாகும். எமகம், திரிபு, மடக்கு, சிலேடை நிறைந்த நூல்களுள் முதன் முதல் எழுதப்பெற்ற நூல் 'சமுத்திர விலாசம்' ஆகும். அதனை இயற்றியவர் எட்டையபுரம் குறுநில மன்னர் அவைக்களப் புலவராகிய கடிகை முத்துப்புலவராவர். அதற்கடுத்து எழுந்தது மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றிய 'சந்திரவிலாசம்' ஆகும். உரை காணுதற்கு அரிதெனச் சொல்லப்பட்ட அவ்விரு நூல்கட்கும் செல்லூர்க்கிழார் தெளிவான உரை எழுதிப் புகழ் பெற்றனர்.

அண்மையில் 'நதிவிலாசம்' என்ற நூல் திருச்சியில் பெரும்புலவராய்த் திகழ்ந்த பொன்னுசாமி பிள்ளையவர்களின் திருமகனார் திரு மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கிய நூல்களுள் இருந்தமையினைக் கண்டு பேருவகையடைந்தேன். அது சேற்றூர்க் குறுநில மன்னர் வடமலைத் திருவநாத சேவகப் பாண்டியர்மீது அவைக்களப்புலவர் கணபதிக் கவிராயரவர்களால் இயற்றப்பெற்றது. 1910இல் சேற்றூர்ப் புலவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் இந் நூற்பாக்களிலுள்ள சிலேடைகளையும் மடக்குகளையும் நன்கு விளக்கிக் குறிப்புரை எழுதிப் பின் இணைப்பாக அமைத்தும் முகவுரை எழுதியுந் தமது விவேகபாநு அச்சகத்தில் பதித்துள்ளனர். அவர் மேலும், சேற்றூர் மன்னர் வழிவழித் தமிழ்நூல்களையும் சைவநூல்களையும்

நன்கு கற்றுப் புலவர்களைப் போற்றி வந்தமை மிகவும் மகிழ்தற்குரியது.

கழகப் புலவர் இராமசாமி பிள்ளை, புகழேந்தியின் நள வெண்பாவுக்கு எழுதிய விளக்கவுரை முதற்பதிப்பாக 1954 நவம்பரில் வெளியிடப்பெற்றது. அடுத்து மூன்று பதிப்புகள் வெளி வந்துள்ளன. அவ்வுரையினைப் பாராட்டிய அறிஞர் சிலருள் சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வராகவிருந்து ஓய்வு பெற்றுள்ள என் பெருமதிப்புக்குரிய அறிஞர் பெருமகனார் பெருமாள் முதலியார் (எம்.ஏ., எல்.டி.) முதன்மையானவர்.

திருக்கோயில்களில் போற்றி சொல்லி மலர் தூவி வழிபடுவதற்குப் புலவர் செல்லூர்க்கிழார் ஆக்கித் தந்த பிள்ளையார், முருகர், உமையம்மை, அம்பலவாணர், கலைமகள், திருமகள் ஆகிய தெய்வங்கட்குரிய மலர் வழிபாட்டு நூல்கள் தணிகைமணி செங்கல்வராய பிள்ளையவர்கள் திருத்தங்களுடன் 1954 இல் வெளியிடப் பெற்றுச் சில திருக்கோயில்களில் பயன்படுத்தப் பெறுகின்றன. பிள்ளையார் வழிபாடு மட்டும் இசைத்தட்டில் பதிவு செய்யப் பெற்று விற்பனைக்கு வந்துள்ளது. அதன் விலை ரூ. 14/- ஆகும். அதனை இசைத்தட்டில் அமைப்பதற்கு இசைப் பெருமாட்டி சீதாமணி சீனிவாசன் அவர்கள் கேட்பவர் உள்ளங்கவர்ந்து பத்தியூட்டும் வகையில் பாடியுள்ளனர். அடுத்து 7—6—1973 இல் இசைப் பெருமாட்டி சேலம் செயலட்சுமியவர்கள் 'உமையம்மை' பற்றிய வழிபாட்டு நூலுக்கு இசையமைத்துப் பாடியது பதிவு செய்யப்பெற்றுள்ளது. இசைத்தட்டு விற்பனைக்கு வர மூன்று திங்கட்கு மேலாகும். அடுத்து 'முருகர் போற்றி நூல்' பதிவு செய்வதற்கு ஏற்பாடாகின்றது.

முதற் குறள் உவமை :

இதன் ஆசிரியர் பல்கலைப்புலவர் இராவ்சாகேப் கு. கோதண்டபாணிபிள்ளை, பி. ஏ. அவர்களாவர். இதன் முதற்பதிப்பு பாரி நிலையத்தார்வழி வெளியிடப்பெற்றது. நூலாசிரியரின் விருப்பத்தின்படி இதன் இரண்டாம் பதிப்பு கழகத்தின் 1247 ஆவது வெளியீடாக 1965 திசம்பர்த் திங்களில் வெளியிடப் பெற்றுள்ளது.

> 'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு'

என்ற முதற் குறள் பாவுக்கு 18 × 12 செ.மீ. அளவில் 216 பக்க அளவில் இதன் ஆசிரியர் உரை விளக்கம் எழுதியிருப்பது அரிதினும் அரிதென அறிஞருலகு பாராட்டுகின்றது.

'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

என்ற ஒளவைப் பிராட்டியார் திருவாக்கிற் கெடுத்துக்காட்டாக இவ்வாராய்ச்சிநூல் அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய குறட் பாவிலுள்ள ஒவ்வொரு சொல்லும் பொருளாழ மிக்கதாய் இருக்கும் என்ற உத்தி கொண்டு ஆராய்வாராயினர்.

''மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்(து)
உணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவர்க்(கு)
ஆய்தொறும் ஊறும் அறிவு''

என்ற உருத்திர சன்ம கண்ணர் என்னும் பெரும்புலவர் அருளிய வெண்பாவின் உட்பொருள் இராவ்சாகேப் திரு பிள்ளையவர்கள் ஆராய்ச்சிக்கு அரண்செய்வதாயிற்று.

இந்நூலின்கண் ஆய்வுக் கருத்துக்கள் உரைத்திறன், இலக்கணத்திறன், உவமத்திறன், இணைப்பு என்ற நான்கு பிரிவுகளில் விரித்து விளக்கப் பெற்றிருக்கின்றன. இக்குறட் பாவிலுள்ள ஒவ்வொரு சொல்லும் எக்கருத்துப்பற்றி அமைக்கப் பெற்றுள்ளது. ஒரு சொல்லுக்கும் அதனை அடுத்து வரும் சொல்லுக்குமுள்ள தொடர்பு எத்தகையது; இக் குறட் பாவின்கண் எடுத்தாளப்பெற்ற சொற்கள் மற்றைக் குறள்களில் எவ்வெப் பொருள்களில் ஒற்றுமை வேற்றுமைகளுடன் அமைக்கப் பெற்றிருக்கின்றன என்ற இன்னோரன்ன முறையில் துருவித் துருவி, அலசி அலசிப் பார்த்துக் கற்பார்க்குக் கழிபேருவகை யூட்டும் வண்ணம் இவ்வாசிரியர் எழுதியிருக்கின்றனர். இதனால் இவ்வாசிரியர் நுண்மாண் நுழை புல மிக்கவர் என்பதும் கூர்ந்த மதிநுட்ப முடையவர் என்பதும் எப்பாட்டை ஆராய்வதற்கு எடுத்தாலும் அதிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் நுனித்துப் பொருள் காணும் திண்ணியர் என்பதும் நன்கு புலனாகும். இத்தகைய ஆராய்ச்சித்திற னுடன் எழுதும் ஆற்றல் திரு பிள்ளையவர்கட்கே யுண்டு என அறிஞர் பெருமக்கள் போற்றுகின்றனர்.

இந்நூலுக்குப் பெருமதிப்புக்குரிய மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனார் விரிவான 'முன்னுரை' வழங்கியுள்ளனர். அதிலிருந்து ஒருபகுதி மட்டும் இங்கே குறிப்பது ஏற்புடைத்தாகும்.

"குறள் ஒன்றே; அது குறித்த சிந்தனையோ பற்பல; அவற்றை ஒட்டிய ஆய்வும் தெளிவும் பல ஆண்டுகளாக நுண்ணறிவு, உழைத்த உழைப்பின் பயன்கள். அப்பயன்களை இந்நூல் வடிவில் பிறர்க்கு வழங்கிய நோக்கமும் முறையும் போற்றத் தக்கன"

இதற்குத் **'தகுதி நயத்தல்'** என்று திருக்குறள் உரைவளம் தொகுத்து அச்சிட்ட **முதுபெரும் புலவர் ச. தண்டபாணி தேசிகர்** எழுதியதும் படித்துப் போற்றுதற்குரியது. அதிலிருந்து எடுக்கப் பெற்ற ஒரு பகுதியினை அடியிற் கண்டு மகிழ்க.

"முப்பது ஆண்டுகளாக உரைகளைத் தொகுப்பதிலும், வளம் தேடுவதிலும், ஒத்த கருத்துடைய இலக்கியங்களை, ஒத்த கருத்துடைய பாக்களை ஒன்று சேர்ப்பதிலும், உரை நயம் தேடுவதிலும், உரைப்பதிலும், எழுதுவதிலும் ஈடுபட்ட அடிமையாகிய எனக்குக் குறிக்கொள்ள வேண்டிய பல கருத்துக்கள் இவ்வுரைநடைகளில் இடமிடங்கள்தோறும் ஒளிர்கின்றன என்ற அளவில் அமைகின்றேன்"

இதற்கு இராவ்பகதூர் டாக்டர் **தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.,** யவர்கள் **'வாழ்த்துரை'** அளித்துள்ளனர். அதிலிருந்து ஒரு பகுதி படித்து இன்புறுதற்குரியது.

"அரிய கருத்துக்கள் பூதக் கண்ணாடியிற் காட்டுவது போலத் தெளிவு பெற விளக்கப்பட்டுள. 'தொட்டனைத்தூறு மணற் கேணி' என்னும் திருக்குறளுக்கு இலக்காக இவர் முதற் குறளின் எழுத்தையும் சொல்லையும் பொருளையும், உவமை நயத்தையும் அலசி அலசி ஆய்ந்து ஆய்ந்து எடுத்து விளக்குந் திறம், 'என்னே இவர் தம் நுண்ணறிவு! என்னே இவர்தம் கல்வித்திறம்!' என வியக்கச் செய்கின்றது."

இத்தகைய சீரிய நூலின் பெருமையினை மறைத்திரு மறைமலையடிகளார் தாம் எழுதிய 'முல்லைப்பாட்டாராய்ச்சி யுரை நூலின்கண் 'பாட்டின் இயல்பு' என்ற தலைப்பில் 8 பக்க அளவில் எழுதியுள்ள ஆய்வுரையினைப் படிப்பின் நன்கு உணரலாம்.

"புலவனுடைய திறமை யெல்லாஞ் சில்வகை யெழுத்திற் பல் வகைப் பொருளைக் காட்டுகின்ற அரும் பெருஞ் செய்கையினாலே தான் அறியப்படும். இங்ஙனம் பாட்டுவழக்கின் நுட்ப முணர்ந்து நஞ் செந்தமிழில் நூலியற்றியவர் 'திருவள்ளுவர்', 'நக்கீரனார்', 'இளங்கோவடிகள்', 'கபிலர்', 'சேக்கிழார்' முதலானோருமாவர்."

எனக்கு மைத்துனக் கிழமையுடைய தவத்திரு தி. செ. முருகதாச அடிகள் தம் தவப் பாட்டனார் அருட்டிரு தண்டபாணி அடிகளார் அருளிய **'பழனித் திருவாயிரம்'** என்ற நூலைப் பழனி யாண்டவர் திருக்கோயில் வெளியீடாகத் திருக்குட முழுக்கிற்கு முன் அச்சிட்டுக் கொண்டுபோகும் பொருட்டு, சென்னையில்

என்னேடு தங்கியிருந்தனர். அவர்கள் 'முதற்குறள் உவமை' யைப் படித்துவிட்டு அதன்கண் எத்தனை எத்தனை இலக்கிய நயங்கள், இலக்கணத் திறன்கள், உவமை நுட்பங்கள், மெய்ப் பொருள் விளக்கங்கள் காணப்படுகின்றன என்றும் ஒவ்வொன்றும் வேண்டா கூறலாய் இல்லை என்றும் கூறி இந் நூலை ஆக்கிய ஆசிரியரது மதிநுட்பத்தைப் பற்றி வியந்து வியந்து பாராட்டி யுரைத்தனர்.

இந்நூலாசிரியர் முன்பே பத்துப்பாட்டுள் தெய்வப் புலவர் நக்கீரனுர் இயற்றிய 'நெடுநல்வாடை' என்ற நூலை ஆய்ந்து முதற்கண் 'பொருள் நலன்' என்ற ஆய்வு நூலையும், அதனை அடுத்துப் 'பா நலன்' என்ற ஆய்வு நூலையும் எழுதிப் புகழ் பெற்றனர். பொருள் நலன் மட்டும் சென்னைத் தமிழ்ச் சங்கத் தின் வெளியீடாக 1943 இல் முதற் பதிப்பாகவும் 1946 இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளியிடப் பெற்றது. அதற்கு டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், பேராசிரி யர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் ஆங்கிலத்தில் பாராட்டுரை வழங்கியுள்ளனர். டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் எழுதிய அணிந்துரை நூலுக்கு அழகூட்டுகின்றது.

'நெடுநல்வாடை பா நலன்' என்ற ஆய்வு நூல் 1947 இல் சென்னைத் தமிழ்ச் சங்க வெளியீடாகவே வெளியிடப் பெற்றுள்ளது. அதற்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனுர் விரிந்ததோர் அணிந்துரை அளித்துள் ளனர். அது மிகவும் போற்றிப் படித்து இன்புறுதற்குரியது. மேலும் டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியாரவர்கள் ஆங்கி லத்திலும், தூத்துக்குடி வழக்குரைஞர் ஏ. சி. பால் நாடார் தமிழிலும் பாராட்டுரைகள் வழங்கியுள்ளனர். இவ்விரண்டு நூல்களின் ஊதியத்தைச் சென்னைத் தமிழ்ச் சங்கத்திற்கே இவ் வாசிரியர் அளித்துள்ளனர் என்பது அவர்களின் அறப் பண்பினை நன்கு உணர்த்துகின்றது. இவ்விரண்டு நூல்களும் கழகப் பதிப்பாக 1957 இலும் 1965 இலும் முறையே வெளியிடப் பெற் றுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு இராவ்சாகேப் பிள்ளை யவர்கள் 1961 இல் எழுதிய 'ஈரடி இருநூறு' திரு இளவழகனுர் ஆற்றிய உரையுடன் மாம்பாக்கம் குருகுல வெளியீடாக வெளியிடப் பெற்றது. அதைப் பற்றிய குறிப்பினைச் சிலம்பு 47 பரல் 7இல் காண்க.

திரு பிள்ளை யவர்கள் பல்கலைப் புலவர் என்றதற் கேற்பத் தமிழ்இசை வளத்திலும் அதன் தனித்தன்மையிலும் ஆராய்ச்சி

மிக்குடையவர்களாவர். தமிழிசைச் சங்கம்தொடங்கிய காலமுதல் ஆண்டுதோறும் பண்ணாராய்ச்சிக் கூட்டத்திற் கலந்து இசைப் புலவர்கட்குத் தம் சீர்மிகு ஆய்வுரைகளை வழங்கி வருவாராயினர். 'பழந்தமிழிசை' என்ற நூலையும் அவர்கள் எழுதித் தரவே கழகம் 1959 இல் வெளியிட்டுள்ளது.

1970 திசம்பரில் நடைபெற்ற கழகப் பொன் விழாவிலே தவயோகி சுத்தானந்த பாரதியார் ஆங்கில உரை நடையில் எழுதிய சேக்கிழார் பெரிய புராணம் 'Grand Epic of Saivism' என்ற தலைப்பில் அழகிய நூலாக அச்சிட்டு வெளியிடப் பெற்றது. அதன் கையெழுத்துப் படியினை இராவ் சாகேப் திரு பிள்ளையவர்கள் சேக்கிழார் எழுதிய மூல நூலோடு ஒப்பிட்டுச் சிறிதும் கருத்து மாறுபாடு நேராவண்ணஞ் சரிபார்த்தும் உரை நடையிலும் சிற்சில இடங்களில் தவயோகி சுத்தானந்த பாரதியார் உள்ள வுவகையோடு ஏற்றுக் கொள்ளும் வகையில் திருத்தங்கள் செய்தும் அந்நூலுக்குச் சீரும் சிறப்பும் நல்கின ரெனின் அது மிகையாகாது.

அண்மையில் நடைபெற்ற பவள விழா மலருக்குக் கழக ஆட்சியாளர் வரலாற்றை ஆங்கிலத்திலே செவ்விய நடையிலே எழுதி யுதவியதற்குக் கழகம் நன்றி பாராட்டுகின்றது.

திரு பிள்ளையவர்கள் கழகத்தின் 1008 ஆவது வெளியீட்டு மலருக்கு வழங்கிய 'அறத்தாறு எது?' என்ற கட்டுரையும், கழகப் பொன்விழா மலருக்கு வழங்கிய 'பழந்தமிழிசை' என்ற ஆய்வுக் கட்டுரையும், பவளவிழா மலருக்கு அளித்த 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல் திறன் பற்றிய கட்டுரையும் அறிஞர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப் பெறுகின்றன.

இவர்கள் செந்தமிழ்ச் செல்விக்கு எழுதிய 'தொல்காப்பிய மும் சைவசித்தாந்தமும்', 'ஐயனரிதனரின் கல் தோன்ரு மண் தோன்ருக் காலமும் இக்கால விஞ்ஞானமும்', 'ஆய்தப்புள்ளி— ஓர் ஆய்வுரை' என்ற மூன்று கட்டுரைகளும் அறிஞர்களின் சிந்தனைக்குச் சிறந்த நல் விருந்தாகும்.

திரு பிள்ளையவர்கள் குடந்தை வட்டத்திலுள்ள திருச் சேறையருகே செம்மங்குடியிலே ஒரு நற்குடியிற் பிறந்து அவ் வூர்த் திண்ணைப் பள்ளியிற் பயின்று, பின் குடந்தை உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் பயின்று இளங்கலைப் பட்டம் பெற்றனர். பின்பு குடந்தை உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரி யரும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருன நற்றிணை உரை யாசிரியருமான பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்களிடம்

முறையாகத் தமிழ்ப்பாடங் கேட்கும் வாய்ப்புத் திரு பிள்ளை யவர்கட்குக் கிடைத்தது.

இளங்கலைப் பட்டம் பெற்றபின் மதுரையில் முதற்கண் துணைத் தாசில்தாராகவும் பின் தாசில்தாராகவும் பணியாற்றிய காலத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் தொடர்பும் நட்பும் கிடைத்தன. மேலும் தமிழ் அறிஞர் சிலர் தொடர்பு கிடைக்கப்பெற்றதனுல் அவர்கள் தமிழறிவு பெரிதும் வளர்ச்சி யுற்றது. பிறகு உதவி மாவட்ட ஆட்சியாளராகவும், சென்னையில் தொழிற்றுறை ஆணையாளரின் நேர்முக உதவி யாளராகவும் பணியாற்றியபின் வெளிநாடு செல்வோரின் காப்பாளர், கட்டுப்பாட்டாளர் என்னும் பதவிகளையும் பெற்றனர். அதன் பின் இரயில்வே அலுவலர் தேர்வுக்குழு உறுப்பினராகவும் பணி புரிந்தனர்.

இரண்டாம் உலகப் போரின்போது அயல்நாடுகளிலிருந்து தாய்நாடு திரும்பியவர்களைப் பாதுகாக்கும் பொறுப்புத் திரு பிள்ளை யவர்களிடம் ஒப்படைக்கப்பெற்றது. அப் பணியினைத் திறம்படவும் நேர்மையாகவும் செய்தமையினைப் பாராட்டி அவர் கட்கு இந்திய அரசினரால் 'இராவ் சாகேப்' என்னும் பட்டம் வழங்கப் பெற்றது. மேலும் மாவட்ட ஆட்சியாளர் தகுதிக்கு அவர்கள் உயர்த்தப் பெற்று அதற்கேற்ற உயர் ஊதியமும் வழங்கப் பெற்றனர்.

மதுரையில் முதன் முதல் துணைத் தாசில்தாராக விருந்த போது சிறுகதைகளையும், பங்கயச் செல்வி, மங்கையர்க்கரசி என்ற நூல்களையும் எழுதித் திரு இ. மா. கோபாலகிருட்டிணக் கோனுர் அவர்களிடம் கொடுத்தனர். அவை சில பள்ளிகளில் பாடமாக வைக்கப் பெற்றபோதிலும் தாம் கணக்குப் பார்த்து ஊதியம் ஒன்றும் பெற்றுக் கொள்ளவில்லையாம். பின்னர்த் தாம் எழுதிய ஈரடி இருநூறு என்ற நூலுரிமையினை மாம்பாக்கம் குருகுலத்துக்கே வழங்கியுள்ளனர். தாம் எழுதிய 'நெடுநல் வாடை பொருள் நலன்' முதல் இரண்டு பதிப்புகளின் ஊதியத்தையும் 'பா நலன்' முதற் பதிப்பு ஊதியத்தையும் சென்னைத் தமிழ்ச் சங்கத்துக்கே அளித்துள்ளனர். இவற்றுல் திரு பிள்ளை யவர்களின் அறப் பண்பு நன்கு விளங்குகிற தன்றோ! உயர் பதவிகளைப் பெற்றிருந்த போதிலும் நேர்மை யாகவும் உண்மையாகவும் பணி புரிந்தனர் என்பது யாவரும் நன்கு அறிவர். 'நெடுநல்வாடை பொருள் நலன்,' 'பா நலன்' பின் பதிப்புகளை இராயல்டி முறையில் கழகம் வெளி யிட்டுள்ளது.

இவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக்க புலமையுடையவராய் நூல்களை எழுதுவது மட்டுமன்றிச் சொற்பொழிவாற்றுந் திறமும் படைத்தவர்களாவர்; செய்யுளியற்றுந் திறமும் மிக்குடையவர். சென்னைப் பல்கலைக் கழகத்திலே டாக்டர் சேதுப்பிள்ளை தம் அன்னையார் பேரில் நிறுவிய சொர்ணம்மாள் அறக் கட்டளையின் சார்பில் 1961-62இல் 'திருக்குறள் காமத்துப்பால்' என்னும் பொருள் பற்றிப் பல்கலைக்கழக நூற்றுண்டு விழா மண்டபத்திலே மூன்று நாள்கள் ஒவ்வொரு மணிநேரம் ஆங்கிலத்திலே சொற்பொழிவாற்றினர். அச் சொற்பொழிவு நூலாக அச்சிடப்பெற்று வெளிவந்திருக்கிறது.

திருப்பனந்தாள் அறக்கட்டளையின் சார்பில் வடகாசி, அலகாபாத் பல்கலைக் கழகங்களில் 'சைவ சித்தாந்தம்' பற்றி மூன்று சொற்பொழிவுகள் ஆற்றி ஆங்குள்ள அறிஞர் பெருமக்கள் பாராட்டினைப் பெற்றுள்ளனர்.

அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே மூன்று ஆண்டுகள் பணிசெய்யும் வாய்ப்புக் கிடைத்தபோது '**கீழை மேலை நாடுகளில் மெய்ப் பொருளின் வரலாறு**' என்ற ஆங்கில நூலைத் தமிழாக்கிக் கொடுத்தனர். அஃது இதுவரை அச்சிடப் பெற்றதாகத் தெரியவில்லை. அங்கிருந்த காலத்திலே திரு பிள்ளையவர்கள் 'கம்பரும் மெய்ப்பாட்டியலும்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவுகள் மட்டும் நூல் வடிவிலே வெளிவந்திருக்கின்றன.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் முன்னுள் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் திரு பிள்ளையவர்கள்பால் அன்பு மீக்கூர்ந்த இராசா சர் முத்தையா செட்டியாரவர்களால் '**கேடயம்**' வழங்கப்பெற்றது.

கழக ஆட்சியாளர் பவள விழாவிலே டாக்டர் பா. நடராசன் அவர்கள் தலைமையில் முதுபெரும்புலவர் இராவ்சாகேப் திரு பிள்ளையவர்களின் அருந் தொண்டுகளைப் பாராட்டு முகத்தான் கழகச் சார்பிலே வள்ளல் நா. மகாலிங்கம் அவர்களாலே சால்வை போர்த்தி அம்பலவாணர் திருவுருவமைக்கப் பெற்ற கவின்மிகு தட்டம் பரிசளிக்கப் பெற்றது.

திருமுருகாற்றுப்படைத் திறன் :

இச் சீரிய நூல் அவர்களால் அண்மையில் எழுதப் பெற்றுக் கழகவழி 1467 ஆவது வெளியீடாக அச்சிடப் பெற்றுள்ளது. அதன்கண் முதல் பதினெரு வரிகட்கு மட்டுமே விரிந்ததோர் ஆராய்ச்சியுரை எழுதப் பெற்றுள்ளது. 'திருமுருகாற்றுப்

படையும் தமிழிலக்கியமும்' என்ற தலைப்பினை முதலாவதாகவும், 'நிறைவுறுகின்றது நீடிய ஆய்திறன்' என்ற தலைப்பினை 12ஆவது இறுதியாகவும் அமைத்து எழுதப் பெற்ற இவ்வாய்வு நூல் 18×12 செ.மீ. அளவில் 204 பக்கங்களில் அழகொழுக அச்சிடப் பெற்றிருக்கிறது. அதனை அச்சிடுவதற்கு முன் திருமுருக கிருபானந்தவாரியாரவர்கள் திரு பிள்ளையவர்களைத் தம் இல்லத்திலே இருக்கச் செய்து விருந்தூட்டிக் கையெழுத்துப் படியினைப் படிக்குமாறு கேட்டுப் பெருமகிழ்வுற்று 'இன் மொழி வாழ்த்து' எழுதியருளிப் பரிசளித்துப் பாராட்டியுள்ளனர் என்ருல் அந்நூலின் பெருமையைப் பற்றி வேறு விளக்குதலும் வேண்டுமோ! திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் அருளிய 'இன்முறை வாழ்த்தும்' தவத்திரு அழகரடிகள் அளித்துள்ள 'அணிந்துரை'யும் நூலின் அருமை பெருமைகளைப் பெரிதெடுத்து விளக்குவனவாகும்.

முத்து விழாக் காண விருக்கும் பல்கலைப் புலவரவர்களின் ஒரே திருமகனுர் மீனுட்சி சுந்தரம் என்பவர் சில ஆண்டுகளாக உள நோயினுல் துன்புறுவதால் திரு பிள்ளையவர்கள் பெரும் பொருள் செலவிட்டும் பயன் காணுமல் குறைந்த ஓய்வுகால ஊதியம் (பென்ஷன்) பெற வேண்டிய நிலை ஏற்பட்டு மிகுந்த கவலையோடு குடும்பபாரத்தை ஏற்று நடத்த வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

திரு பிள்ளையவர்கள்பால் அன்பும் மதிப்பும் கொண்ட இராசா சர் முத்தையா செட்டியாரவர்கள் தலைமையில் அவர் கட்கு அண்மையில் முத்து விழாவினைக் கொண்டாட வேண்டு மென்று குடந்தை நன்மக்கள் திட்டமிட்டு வருகின்றனர். மாட் சிமைமிகு இராசா அவர்களும் அவ் விழாவைப் பற்றித் திரு பிள்ளையவர்களிடமே உசாவியதாகவும் அறிந்து மகிழ்கின்றேன்.

எனவே, இராவ் சாகேப் திரு பிள்ளை அவர்களின் முத்து விழாவை அறிஞர் பெருமக்கள் சிறப்பாக நடத்தி அவர்கட்குப் போதுமான அளவு பொன்னும் பொருளும் வழங்குதல் வேண்டு மென்பது எனது அவா. மேலும் அவர்களுடைய பலதுறைப் பெரும் புலமையினைப் போற்றி அண்ணுமலைப் பல்கலைக் கழகத் திலே டாக்டர் பட்டம் (D. Litt) வழங்கிப் பாராட்டுவது அரசுக்கும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்கும் உரிய கடமை யாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு திரு பிள்ளை யவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென அம்மை அம்பல வாணர் பொன்னுர் திருவடிகளை வாழ்த்தி வணங்கி வேண்டு வோம். (தொடரும்)

—வ. சு.

இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

(முன் சிலம்பு ௭௯, ௫௬௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயன் கருதாப் பணி

*பற்று இன்றிக் கடமைகளை எப்பொழுதும் ஆற்றுபவன்
உற்ற நிலையெய்தி உயர்வடைகின்றான்.*

—*கீதை. அத். 3-19*

செயல்களின் பயனில் சிந்தனையின்றி சீரிய முறையில்
கடமை யாற்றுவோர்தாம் நூறாண்டு வாழ்வார்கள்.

—ஈச உபநிடதம்

புகழ்பெற்ற அறுவை வைத்தியர் ஒருவர் இருக்கிறார். அறுவை சிகிச்சை செய்வதில் தமக்கு நிகரானவர் எவருமில்லை என்ற அளவுக்குப் பெயரெடுத்தவர் அவர். அப்படிப்பட்ட வைத்தியரின் அருமைப் புதல்விக்கு நோய் கண்டுவிடுகிறது. ஆபத்தான அறுவை சிகிச்சை செய்வது கட்டாயமாகின்றது. இந்நிலையில் அந்த வைத்தியர் என்ன செய்கின்றார்? தம் புதல்விக்கு அறுவை சிகிச்சை செய்யும் பொறுப்பினைத் தம் நண்பரான வேறொரு வைத்தியரிடம் ஒப்படைக்கின்றார்! தம் மகளுக்குத் தாமே அறுவை சிகிச்சை செய்ய அவர் மனம் ஒப்புவதில்லை. ஏன்?

எவ்வளவு ஆபத்தான அறுவை சிகிச்சையையும் எளிதாக வெற்றியுடன் செய்து முடிக்கும் திறமைபெற்ற அவ்வைத்தியர் தம் மகளுக்கு அச்சிகிச்சை செய்யும் பொறுப்பினை ஏன் வேறொருவரிடம் ஒப்படைக்கின்றார்?

தாம் அறுவை சிகிச்சை செய்து, அதில் ஏதாவது தவறிப் போய், தம் புதல்வியின் உயிருக்கு ஊறு நேர்ந்துவிடக் கூடாதே என்ற அச்சமும் கவலையும் அவருக்குத் தோன்றுகின்றன. இதனால், அறுவை சிகிச்சையில் தமக்குள்ள திறனும், ஆற்றலும் தம் புதல்விக்குச் சிகிச்சை செய்யும்பொழுது தவறிப்போய் விடுமோ என்ற ஐயப்பாடு அவர் மனத்திலே எழுகின்றது. அவருக்குத் தம் திறமை பற்றிய நம்பிக்கை குலைந்து விடுகின்றது. ஆதலால், தம்முடைய புதல்விக்குச் சிகிச்சை செய்யும் பொறுப்பினை அவர் வேறொரு வைத்தியரிடம் ஒப்படைத்து விடுகின்றார்!

பொதுவாக, அவர், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும் பொழுது அவர்கள் நலமுற வேண்டுமென்ற ஆர்வத்துடனும் அக்கறையுடனுந்தான் பணியாற்றுகின்றார். அதில் வெற்றியும் பெறுகின்றார். ஆனால், தம் புதல்வியைப் பொறுத்தவரை அவள் நலம்பெற வேண்டுமென்ற ஆர்வத்துடனும் அக்கறையுடனும் மட்டும் அவர் நிற்கவில்லை. சிகிச்சையின் பயனாகத் தம் புதல்வி பிழைக்க வேண்டுமே என்ற கவலை அவருக்குப் பிறக்கின்றது. அவருக்குத் தம் மகள்மீதுள்ள பற்றும் பாசமும் சிகிச்சையின் பயன்மீதான பற்றாகவும் பாசமாகவும் மாறிவிடுகின்றன! தமது பணியினது பலனைப்பற்றிக் கவலை பிறந்தவுடன் தமது பணியினைக் கவனத்துடனும் திறமையுடனும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை அவர் இழந்து விடுகின்றார். தமது பணித் திறனிலே நம்பிக்கை இழந்ததால் அவருக்குப் பதற்றம் மேலிடுகின்றது! எனவே, தம் புதல்விக்குச் சிகிச்சை செய்ய அவரால் இயல்வதில்லை!

நீதிபதி ஒருவர் குற்றவழக்கு ஒன்றை விசாரிக்கின்றார். ஆனால், அவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு நிற்பவர் நீதிபதியின் உறவினர் அல்லது நண்பர் என்று வைத்துக் கொள்வோம். இந்நிலையில் நடுநிலை தவறாமல் நீதிபதியால் தீர்ப்புக் கூற இயலுமா? இயலாது. குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்துத் தண்டித்தால் அதனால் பாதிக்கப்படுபவர் தம் உறவினர் அல்லது நண்பர்தாமே என்ற எண்ணம் நீதிபதியின் மனத்திலே எழுகின்றது. எனவே, நடுவுநிலையோடு தீர்ப்பளிக்கும் திறன் மறைந்து விடுகின்றது. தாம் கூற விருக்கும் தீர்ப்பின் பயன்மீது எண்ணத்தை வைத்ததும், தமக்கு இருக்க வேண்டிய நடுவுநிலைப் பண்பினை நீதிபதி இழந்து விடுகின்றார்; தீர்ப்பளிப்பதற்கான தகுதி அவருக்கு இல்லாமல் போய்விடுகின்றது. இவ்வாறு தீர்ப்பின் பயன்மீது எண்ணம் பதிந்ததும் தீர்ப்பளிக்கும் திறனும் தகுதியும் மறைந்து விடுகின்றன. அதனால்தான் தமக்கு உற்றார் உறவினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நீதிபதிகள் விசாரிப்பதில்லை; அவ் வழக்குகள் வேறு நீதிபதிகளுக்கு மாற்றப்படுகின்றன.

அறுவை சிகிச்சையின் பயன்மீது பற்று வைத்த வைத்தியராலும், தீர்ப்பின் பயன்மீது எண்ணம் வைத்த நீதிபதியாலும் தங்கள் கடமைகளை ஆற்ற இயலவில்லை. இவ்வாறு எந்தப் பணியினைச் செய்ய முற்பட்டாலும், அந்தப் பணியின் பயனிலே பற்றும் பாசமும் நாம் வைத்தால் அப்பணியினைப் பதற்றமின்றியும் முறையாகவும் செய்ய இயலாமல் போய்விடுகின்றது.

இது நம் அன்றுட வாழ்விலே அனுபவித்துக் காணும் உண்மையாகும்.

* * * *

எதிர்பார்த்த பயனின்றேல் ஏமாற்றம்:

பொதுவாக, நம் வாழ்வில் நாம் எந்த முயற்சியை மேற் கொண்டாலும் அதனுல் விளையும் பலனை எதிர்பார்த்தே அதில் நாம் இறங்குகிறோம். அம் முயற்சியின் பயனுய் நமக்கு ஏற்பட விருக்கும் நன்மை அல்லது இன்பத்தின்மீது நமக்குள்ள நாட்டமே நம் முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக இருக்கின்றது. நாம் செய்யும் செயல்களால் தோன்றும் விளைவுகளின்மீது நமக்குள்ள விருப்புத்தான் அச் செயல்களைச் செய்யும்படி நம்மை உந்துகின்றது.

"நான் என் மகனைப் படிக்க வைக்கிறேன். அவன் படித்துப் பட்டம் பெற்ருல் என் மகன் பட்டம் பெற்றுவிட்டான் என்ற பெருமை எனக்கு. அவனும் என்மீது நன்றியுடையவனுக இருப்பான்; என் வயது காலத்தில் அவன் எனக்குப் பாதுகாப் பாக இருப்பான்"—இந்த நோக்குடன்தான் பலரும் தம் மக்களைப் படிக்க வைக்கின்றனர். தன் மகன் தேர்வில் வெற்றி பெறவில்லையெனில் மகனைவிடத் தகப்பனுக்குத்தான் ஏமாற்ற மும் கவலையும் ஏற்படுகின்றன. தேர்விலே நல்ல முறையில் வெற்றியடைந்து பட்டமும் பெற்று நல்ல பதவியிலும் மகன் அமர்ந்துவிடுகிருன் என்று வைத்துக் கொள்வோம். அந் நிலையில் மகன் தந்தைமீது நன்றியுடையவனுக இல்லை யென்ருலோ, தந்தை ஏதிர்பார்த்தபடி பொருளுதவி செய்ய வில்லையென்ருலோ, தந்தைக்கு மிகுந்த துயரமும் ஏமாற்றமும் விளைகின்றன.

இவ்வாறு, பயன் கருதிச் செய்யப்படும் முயற்சிகள் பலவும் கருதிய பலனை அளிக்காமல் கவலையையே தருகின்றன முயற்சி யாளர்களுக்கு.

நமக்கு ஏற்படும் பெரும்பாலான கவலைகளும் துயரங்களும், நம் முயற்சிகளால் நாம் எதிர்பார்த்த பயன்கள் கிடைக்காத நிலையில்தான் தோன்றுகின்றன. பொருள் கிடைக்கவில்லையே என்ற கவலை வணிகனுக்கு, புகழ் எய்தவில்லையே என்ற ஏக்கம் கலைஞனுக்கு; தேர்வில் வெற்றி பெறவில்லையே என்ற துயரம் மாணவனுக்கு; தேர்தலிலே தோல்வியடைந்ததால் ஏமாற்றம் அரசியல்வாதிக்கு; ஒரு பயனை நாடி முயற்சியில் இறங்குகிருேம், அப்பயன் கிட்டவில்லை என்றவுடன் துயரப்படுகின்ருேம்.

இன்பத்தை எதிர்பார்த்து நாம் செய்யும் முயற்சிகளால் பெரும்பாலும் நாம் துன்பத்தையே அடைகின்றோம்.

இவ்வகைத் துன்பத்தை நாம் போக்கிக்கொள்ளுவது எவ்வாறு?

முயற்சிகள் இன்றி வாழ்வு இல்லை:

முயற்சிகளே செய்யாமல் நாம் இருப்பது இயலாது. நம்முடைய வாழ்வே பலப் பல முயற்சிகளின் தொகுப்புத்தான். முயற்சிகள் இன்றி வாழ்வு இல்லை. எனவே, முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கில்லை. ஆனால், இம்முயற்சிகளால் துன்பமும் விளைகின்றனவே? முயற்சிகளிலும் முனைந்து ஈடுபட்டுக்கொண்டு அவற்றால் வரும் துன்பங்களைத் தவிர்ப்பதற்கு என்ன வழி? ஏமாற்றமும் துயரமும் இன்றி ஏற்ற முயற்சிகளில் நாம் ஈடுபடுவது எவ்வாறு? இதற்கு நாம் விடை கண்டோமானால் இன்ப வாழ்விற்கு வழிகண்டவர்களென ஆகிவிடுகின்றோம்.

பயன் கருதாப் பணி:

இன்ப வாழ்விற்கு இன்றியமையாத இப்பிரச்சினைபற்றி உலக ஞானிகள் எண்ணியெண்ணிப் பார்த்துள்ளனர். இதற்கான விடையையும் கண்டுள்ளனர்.

கைதேர்ந்த அறுவை வைத்தியரின் திறமை அவர் மகளின் சிகிச்சைக்குப் பயன்படாமல் போவதன் காரணம், தம் பணியின் பயனிலே வைத்தியருக்குள்ள பற்றும் பாசமுந்தானே! நீதிபதி நடுவுநிலை தவறும் நிலை ஏற்படும் காரணம் தமது தீர்ப்பின் பயன்பற்றி எண்ணுவதால்தானே! தன் மகனைப் படிக்கவைத்த தகப்பன் துயரப்படுவதன் காரணம் மகனுடைய படிப்பால் தனக்குப் பயன் விளையும் என்று தகப்பன் எதிர்பார்ப்பதுதானே! இவ்வாறு, தம் கடமையை ஆற்றுவோர் அக்கடமையின் பயனிலே பற்று வைத்துச் செயல்படுவதால்தான் அவர்களுக்குத் துன்பம் விளைகின்றது. எனவே, எவரும் தம் கடமையை ஆற்றும்பொழுது அக்கடமையின் பயனிலே பற்று வைக்காமல் இருந்தால் அவருக்குத் துன்பம் வருவதில்லை, துயரம் வருவதில்லை.

ஆதலால், பயன் கருதாது பணியாற்றும் பண்பினை நாம் பெறுதல் வேண்டும். பயன் கருதாப் பணியே நமக்குத் துன்பத்தைக் கொடுக்காமல் இன்பத்தை நல்குகின்றது. இதுவே, மெய்யுணர்ந்தோர் ஓர்ந்து கண்ட உண்மை.

"பயனெண்ணுமல் உழைக்கச் சொன்னுள்,
பக்திசெய்து பிழைக்கச் சொன்னுள்;
துயரியலாதெனேச் செய்து விட்டாள்,
துன்பமென்பதைக் கொய்து விட்டாள்" —பாரதியார்

என்ற பாட்டு பழைய வேதாந்தக் கருத்தினேக் கூறுவது மட்டு மன்று. பயனே எண்ணுமல் உழைத்தால் நமக்குத் துயரம் இல்லே. துன்பம் இல்லே என்ற உண்மை நமது அன்ருட வாழ்விற்கு நலம் பயக்கும் கோட்பாடாகும்.

ஆனுல், பயன் கருதாது முயற்சியில் இறங்குவது என்பது எளிதில் இயலுவதா? இல்லே. நாம் நாடும் பயன்தான் ஒரு முயற்சியில் நாம் முனேந்து பாடுபடுவதற்கு உந்துதலாக உள்ளது. விளேயும் பயிரை நாடித்தான் உழுகின்றனர் உழவர்கள். தேர்வில் வெற்றியை எண்ணித்தான் முனேந்து படிக்கின்றனர் மாணவர்கள். அழியாத புகழை அடையும் முயற்சியில்தான் அயராது உழைக்கின்றனர் விஞ்ஞானிகளும் வித்தகர்களும். பின் எவ்வாறு பயன் கருதாது பணி புரிவது?

இந்த இடத்தில் நாம் சிறிது சிந்திப்போமானுல் ஒரு பேருண்மை விளங்கும்.

உழைத்துப் பயிரிடுகின்றவர் உழவர்கள்; ஆனுலும் வானம் பொய்த்துவிடில் பஞ்சம் ஏற்படுகின்றதே, பயிர் விளேவ தில்லேயே? அயராது படித்த மாணவன் அடுத்து வரும் தேர்வு நாள்களில் நோயால் படுத்துத் தேர்வில் தவறி விடுவதும் உண்டுதானே? ஓயாது உழைக்கும் விஞ்ஞானிகள், வித்தகர்கள் அனேவருமே உயர்ந்த புகழை எய்திவிடுகின்றனரா? ஒரு சிலருக்கே பேரும் புகழும் கிடைக்கின்றன. இதிலிருந்து தெரிவது என்ன? நாம் முயற்சிகள் செய்கின்ருேம். ஆனுலும், அம்முயற்சிகளால் விளேயும் பயன்கள் நம் கையில் இல்லே என்பதுதான். முயற்சி செய்வது நம்மைப் பொறுத்தது. ஆனுல், அம்முயற்சியின் பயன் நமக்கு அப்பாற்பட்டது.

முயற்சியும் அதன் பயனும் :

முயற்சி என்பது ஒன்று, அதன் பயன் என்பது மற்ருென்று. முயற்சியும் பயனும் ஒன்ருேடொன்று இணேந்தவை அல்ல. முயற்சி வேறு, பயன் வேறு.

எனவே, முயற்சியும் அதன் பயனும் முன்னும் பின்னுமாக வருகின்றன என்று நாம் கொண்டால் அது தவருனதாகும்.

முயற்சியும் அதன் பயனும் காரணகாரியத் தொடர்புடையவைதாமே; அவ்வாறிருக்க முயற்சி வேறு, பயன் வேறு என்று கூறுவது பொருந்துமா என்ற ஐயப்பாடு நம் மனத்திலே எழலாம். காரணத்திலிருந்து காரியம் வந்துதானே ஆக வேண்டும்? மணி அடித்தால் ஒலி பிறப்பதுபோல், விளக்கை ஏற்றினல் இருள் அகல்வதுபோல் முயற்சி என்ருல் அதற்குப் பயன் இருக்கத்தானே வேண்டும்? முயற்சி என்ற காரணத்திலிருந்து பயன் என்ற காரியம் பிறக்கத்தானே வேண்டும்? பின் முயற்சி வேறு பயன் வேறு என்று கொள்ளுவது சரியா என்ற வினு எழுகின்றது.

உண்மைதான். முயற்சி காரணமாக இருந்தால், அதன் காரியமான பயன் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். பயன் என்ற காரியத்திற்கு முயற்சிதான் காரணமாகும் என்ருல், முயற்சியிலிருந்து பயன் தோன்றியே தீரவேண்டும். இதற்கு ஏதும் ஐயமில்லே.

இங்கு நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது, பயன் என்ற காரியத்திற்கு நமது முயற்சி ஒன்றே காரணமா என்பதுதான். பயன் என்ற காரியம் விளேவதற்கு நமது முயற்சி மட்டுமே போதுமானதா என்பதைத்தான் நாம் ஓர்ந்து காணல் வேண்டும்.

காரணம் எது? காரியம் எது?

வித்திலிருந்து முளே எழுகின்றது. வித்தின்றி முளேயில்லே. எனவே, முளேக்குக் காரணம் வித்து என்கிருேம். ஆனல், இஃது ஓரளவுதான் உண்மை. வித்து அதுவாகவே முளேயாகி விடுகின்றதா? இல்லேயே! அதற்கு ஏற்ற மண் வேண்டும். மண் மட்டும் போதுமா? ஈரமும் வேண்டும். மண்ணும் ஈரமும் இருந்தால் மட்டும் போதுமா? ஞாயிற்றின் ஒளியுமல்லவா வேண்டும்? ஒளியின் இளஞ்சூடும் முளேயிலிருந்து இலே விடுவதற்குத் தேவைப்படுகின்றதே? இவ்வாறு, மண்ணும் நீரும் ஒளியும் சூடும் சேர்ந்த சூழ்நிலேயில்தானே வித்து முளேயாகி இலே விடுகின்றது? இப்பொழுது, வித்து முளேத்ததற்கு மண்தான் காரணம் என்பதா, நீர்தான் காரணம் என்பதா, ஒளிதான் காரணம் என்பதா அல்லது வித்து ஒன்றேதான் காரணம் என்று கூறுவதா?

மின்விசைப் பொத்தானே அழுத்துகிருேம். மின் விளக்கு எரிகின்றது. மின் விளக்கு எரிவதற்குக் காரணம் விசையை அழுத்தியதுதான் என்று மேலெழுந்த வாரியாகக் கூறி

விடலாம். ஆனால், அஃது உண்மையா? இல்லை. 'பல்பு' நல்ல நிலையில் இல்லையெனில் விசையை அழுத்தினாலும் விளக்கெரிவதில்லை. 'பல்பு'ம் நன்றாக இருந்து விசையையும் அழுத்தினாலும் மின்சாரம் இல்லையென்றால் விளக்கு ஏது? மின்சார நிலையத்தில் மின் உற்பத்தி நிகழ்வதற்கு எத்தனை எத்தனை செயல்கள் நடைபெற வேண்டியுள்ளன! அத்தனை செயல்களும் விசையினை அழுத்தியதும் சேர்ந்தால்தானே விளக்கு எரிகின்றது? இந்நிலையில், மின்விளக்கு எரிவதற்கு எதைத்தான் காரணம் என்று கூறுவது?

இம்மாதிரியாக, நாம் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அக்காரியத்துக்கான காரணம் இதுதான் என்று வரையறுத்துக் கூறுவது இயலாது. இஃது ஓர் அடிப்படை உண்மை.

இந்த உண்மையினை நாம் உணராததால்தான் ஒன்றைக் காரணம் என்றும் அதையொட்டி விளைவதைக் காரியம் என்றும் கூறி விடுகின்றோம். நமது முயற்சியைக் காரணம் என்கின்றோம். அதன் பயனைக் காரியம் என்கின்றோம். 'முயற்சி' என்ற காரணத்திலிருந்து 'பயன்' என்ற 'காரியம்' விளைந்து விடுகிறது என்று தவறாகக் கருதுகின்றோம்.

முளை விடுவதற்கு வித்து எந்த அளவுக்குக் காரணமாக இருக்கிறதோ, மின் விளக்கு எரிவதற்கு விசையை அழுத்தியது எந்த அளவுக்குக் காரணமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் பயன் விளைவதற்கு நமது முயற்சி காரணமாகின்றது. முயற்சியிலிருந்து நேரடியாகப் பயன் விளைந்து விடுவதில்லை. பயன் என்ற காரியம் நிகழ்வதற்கு முயற்சியும் ஒரு காரணம். ஆனால், அது மட்டுமே காரணமன்று. எத்தனையெத்தனையோ காரணங்கள் கூடித்தான் முயற்சியின் பயன் விளைகின்றது. எனவே, ஒரு முயற்சியில் ஈடுபடும்பொழுது அதன் பயனை, நாம் விரும்பும் பயனை, ஆர்வத்துடன் எதிர்நோக்குவது நமக்குப் பெரும்பாலும் ஏமாற்றத்தையே அளிப்பதாகும்.

இந்த உண்மையினை நாம் உணராததால்தான் தனி மனித முயற்சியால் மட்டுமே பல காரியங்கள் நிகழ்கின்றன என்று கருதுகின்றோம். தனி மனிதன் ஒருவனது முயற்சியால் மகத்தான காரியங்கள் நிகழ்ந்துவிடுகின்றன என்று கருதுவது எவ்வளவு தவறானது என்பதை ருஷ்யஞானி டால்ஸ்டாய் உலகப் புகழ்பெற்ற ''போரும் அமைதியும்'' என்ற நெடுங் கதையிலே தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்:

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏறத்தாழ ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் தன் படைவலியால் வென்று வெற்றி கண்டவன் பிரஞ்சு நாட்டு வீரன் நெப்போலியன். அன்றைய ஐரோப்பிய நாடுகளின் இராணுவத் தளபதிகள் பலரும் அவனது பெயரைக் கேட்டவுடனேயே அஞ்சினுர்கள். முடி மன்னர்கள் நடுங்கினுர்கள்.

இவ்வாறு, நெப்போலியன் பெற்ற இராணுவ வெற்றிகளுக்கு அவனுடைய வீரமும் முயற்சியும்தாம் காரணங்களா என்ற வினுவினை எழுப்புகின்றுர் டால்ஸ்டாய்.

பிரஞ்சு நாட்டுத் தளபதிகளனைவரும் நெப்போலியனுடன் ஒத்துழைக்க வில்லையெனில் அவனுக்கு வெற்றி கிட்டியிருக்குமா? தளபதிகள் என்ன, இலட்சக்கணக்கான பிரஞ்சு நாட்டுப் படை வீரர்கள் ஒவ்வொருவரும் தீரமாகப் போரிடாவிடில் வெற்றியேது? போர் முனைகளுக்குத் தளவாடங்கள் ஒழுங்காகக் கொண்டுபோய்ச் சேர்க்கப்படாவிடிலோ, ஆயுதங்கள் நல்ல நிலையில் இல்லாவிடிலோ, இது போன்ற எத்தனையோ சூழ்நிலைகள் சாதகமாக இல்லாவிடிலோ நெப்போலியனுல் எதைச் சாதித்திருக்க முடியும்?

ருஷ்ய நாட்டின்மீது மாபெரும் படையெடுப்பை நடத்திய நெப்போலியன் ஆகட்டும், அப்படையெடுப்பை முரியடித்த ருஷ்யச் சக்கரவர்த்தி அலெக்சாண்டர் ஆகட்டும், இவ்விருவரின் செயல்களால் மட்டுமா போர்க்களங்களில் வெற்றியும் தோல்வியும் நிகழ்ந்தன?

எண்ணிலடங்கா வீரர்களும் அவர்கள் எண்ணங்களும் இயற்கை எழுப்பிய சூழல்களும் இன்னும் எத்தனையோ காரணங்களும் இணைந்ததால் ஏற்பட்ட விளைவுதான் நெப்போலியனுக்கு முதலில் கிடைத்த வெற்றியும் பிறகு அவன் அடைந்த தோல்வியும்.

கனிந்த ஆப்பிள் பழம் மரத்திலிருந்து விழுகின்றது. அஃது ஏன் விழ வேண்டும்? அப்பழம் விழுந்தது பூமியின் ஈர்ப்புச் சக்தியால் எனலாம்; அப்பழத்தின் காம்பு உலர்ந்து விட்டதால் எனலாம்; வெயிலில் பழம் காய்ந்து விட்டதால் எனலாம்; பழம் பருத்துக் கனமாகி விட்டதால் எனலாம்; அப்பழத்தினைக் காற்று அசைத்ததால் எனலாம். இவையெல்லாம் அன்றி, மரத்தின் கீழே நின்று கொண்டிருந்த சிறுவன் அப்பழத்தைத் தின்ன விரும்பியதால் என்றும் கூறலாம். இவ்வாறு பழம் கீழே விழுந்ததற்குக் காரணங்கள் எத்தனை எத்தனையோ கூறலாம். இவற்றுள் ஒன்றுமே காரணம் இல்லை யென்றும் கொள்ளலாம்; அனைத்துமே காரணங்கள் தாம் என்றும் கொள்ளலாம்.

கனிந்த பழத்தின் காம்பு உலர்ந்ததால்தான் பழம் கீழே விழுந்தது என்று தாவர இயல் அறிஞர் கூறுவதும் தவறில்லை. "நான் தின்ன வேண்டுமென விரும்பினேன். அதனுல்தான் பழம் விழுந்தது" என்று மரத்தடியில் நிற்கும் சிறுவன் கூறுவதும் தவறில்லை. இதே போன்றுதான் நெப்போலியன் தனது தனித்திறனுல் வெற்றி பெற்றுன் என்பதும், ருஷ்ய மன்னன் அலெக்ஸாண்டர் தனது தனித் திறனுல் நெப்போலியனை முரியடித்தான் என்பதும்

உலக வரலாற்றின் மகத்தான நிகழ்வுகளுக்குக் காரணமெனப் பெரிய மனிதர்கள் கருதப்படுகின்றனர். ஆனால், அப்பெரிய மனிதர்களின் பெயர்கள் மகத்தான நிகழ்வுகளின் மேல் ஒட்டப்படுகின்றன என்பதுதான் உண்மை. பெட்டியின்மீது ஒட்டப்பட்டிருக்கும் சீட்டிற்கும் பெட்டிக்குள் இருக்கும் பொருளுக்கும் தொடர்பு ஏதும் எவ்வாறு இல்லையோ அவ்வாறே மகத்தான வரலாற்று நிகழ்வுகளுக்கும் அந்நிகழ்வுகளுக்குக் காரணங்களெனக் கருதப்படும் பெரிய மனிதர்களுக்கும் தொடர்பு ஏதும் இல்லை. மாபெரும் இயக்கங்கள் ஏதோ முன்னமைக்கப்பட்ட முறைப்படி நிகழ்கின்றன. அந்நிகழ்வுகளோடு சிலரின் பெயர்கள் சேர்ந்து விடுகின்றன. அவ்வளவு தான். அந்நிகழ்வுகளுக்கும் அவற்றுக்குப் பெயரளித்த பெரிய மனிதர்களுக்கும் வேறு தொடர்பு எதுவுமில்லை.

அப்பெரிய மனிதர்கள், வரலாற்று நாயகர்கள், அவர்களாக விரும்பிச் செயல்படுவதாகத் தோன்றினாலுங்கூட, உண்மையில் அவர்கள் தன்னிச்சையாகச் செயல்படுவதில்லை. ஊழின் பெருவலியால் உந்தப்பட்டு ஊழின் கருவிகளாகவே அவர்கள் செயல்படுகின்றனர்.

* * * *

நம் வாழ்வில் உணர்ந்து கொள்ள வேண்டிய இந்த அரிய உண்மையை, ''போரும் அமைதியும்'' என்ற நெடுங்கதையின் வாயிலாக ஞானி டால்ஸ்டாய் இவ்வாறு நயம்பட எடுத்துக் கூறுகின்றார். இந்த உண்மையை நமக்கு உணர்த்துவதற்கு வரலாற்றுப் புகழ்பெற்ற நெப்போலியனின் போர்க்களமே பின்னணியாக உதவுகின்றது.

இதுபோன்ற மாபெரும் பாரதப் போர்க்களத்திலே இந்த உண்மையை உணராத நிலையில் உழன்று நிற்கின்றான் வில் வீரனான பார்த்தன். பார்த்தனுக்குச் சாரதியாக இருக்கும் ஞானி இவ்வுண்மையைத்தான் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

பகைவர்களைக் கொன்று வெற்றிவாகை சூட வேண்டிய கடமை கொண்ட வில்வீரன் விசயன், ''உற்றார் உறவினரான இவர்களை நான் கொல்லவா!'' என்று மறுகுகிறான், மனம் மயங்குகிறான். காண்டீபம் என்ற வில் அவன் கையிலிருந்து நழுவுகின்றது. இவ்வாறு கடமையை மறந்து களத்திலே நிற்கும் காண்டீபனுக்குப் பயன் கருதாது கடமையாற்றும் பாங்கு என்ன என்பது போதிக்கப்படுகின்றது. இப்போதனையே கீதையின் சாரமாகும் :

''போர்க்களத்தின் நடுவில் நிற்கும் வில் விசயனே; இப்பொழுது உன் கடமை என்ன? போர்க்கோலம் பூண்ட வீரனுக்குற்ற கடமை தீரமாகப் போரிடுவது தான். போரினால் இன்ன

விளையுமே என்று எண்ணித் தயங்கினுல் நீ கடமை தவறியவஞ கிருய். எனவே,

"வில்லினை யெடடா; கையில்
வில்லினை யெடடா;—அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா;"

போர்க்களத்தில் வில்லேந்தி நிற்கும் வீரனின் கடமை. அறக் கடமை, போர் செய்வது ஒன்றேயாகும். அதனுல் எழும் விளைவில் எண்ணம் வைப்பது கூடாது. எனவே,

செய்தலுன் கடனே—அறஞ்
செய்தலுன் கடனே—அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே!

"நானல்லவா எதிரிகளைக் கொல்லப் போகிறேன்" என்று இறுமாந்து எண்ணுகின்ருய் நீ, ஓ அர்ச்சுனு! இஃதுஉன் அகந்தை யால் எழும் எண்ணம். அவர்களைக் கொல்லுவது நீயன்று, உனது வில்லுமன்று. அவர்கள் ஊழின் வழிச்செல்லும் காலச் சக்கரத் திலே சிக்குண்டு நைந்து சிதைந்து மடிகின்றனர், மறைகின்றனர். இதோ பார் அக்காட்சியை! கால வெள்ளத்தில் அவர்கள் கரைந்து மறையும் காட்சியின் மாட்சியை மனத்திலே கொள்வாயாக! அவ்வாறு அவர்கள் மடிந்து மறைவதற்கு நீ அற்பமான கருவி யாகத்தான் உள்ளாய். முதலும் முடிவுமற்ற ஆதிமூலத்தின், எல்லாவற்றையும் இயல்புற நடத்தும் இறைமையின், கருவி யாகவே நீ செயல்படுகிருய்.

பார்த்திபனே! போரிடுவது நான் தான் என்ற எண்ணத்தை மறந்துவிடு. நான் என்ற தன்முனைப்பினை அகற்றி, போரின் விளைவிலே புத்தியைச் செலுத்தாமல், இறைமையின் கருவியாகவே இயங்குகிருய் என்பதை மனத்திலே கொண்டு போர் செய்தலே உனது புனிதக் கடமையாகும்.

இக்கடமையை நீ ஆற்று. அதனுல் விளையும் பயனை உன்னைக் கருவியாக இயக்கும் இறைமைக்கு அர்ப்பணித்து விடு. இவ்வாறு, விளையும் பயனைக் கருதாமல் உற்ற கடமையை ஒழுங்காக ஆற்று வதுதான் உயர்ந்தோர் போற்றும் 'கருமயோகம்' என்பது.—"

பயன் கருதாது பணிசெய்து கடமையாற்றும் கரும யோகத்தினைப் பார்த்தனுக்குச் சாரதியாக வந்த பரம்பொருள் போதித்த பாங்கினைக் கூறுகின்றது பாரதக் கதை.

வில்வீரன் பார்த்தனுக்குச் சாரதியாக, பார்த்தசாரதியாக, வந்தது பரம்பொருளா இல்லையா என்பதுபற்றி நாம் அக்கறை கொள்ளவேண்டா. கீதை கூறும் போதனையில் பொதிந்து கிடக்கும் ஒப்பற்ற உண்மையினை ஓர்ந்து உணர்தல் மெய்ப் பொருள் காணும் மேன்மைப் பண்பாகும்.

எந்த முயற்சியில் நாம் இறங்கினுலும் இறைமையின் கருவியாகத்தான் நாம் இயங்குகின்ருேம் என்று உணர்த்தும்

அதே நேரத்தில், இறைமையின் கருவி என்று எண்ணிக் கொண்டு கண்மூடிக் கற்சிலையாக நாம் இருந்துவிடவும் கூடாது என்பதும் இடித்துக் கூறப்படுகிறது.

நாம் நமது கடமையை ஆற்ற வேண்டும். கடமைக் கேற்றபடி தொழிற்பட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். முயற்சிகளிலே முனைந்து இறங்க வேண்டும். அதனால் விளையும் பயனிலே பற்று வைக்க வேண்டா. பயனிலே பற்று வைக்காமல் கடமையை ஆற்றும்பொழுது, பயனைப் பற்றிய கவலை இருப்ப தில்லை, பதற்றம் இருப்பதில்லை.

பயன்கருதாப் பணியினால் தீமை மறைகின்றது :

பிறர் பொருளை அடைய வேண்டும் என்ற பேராசையாலும் பிறருக்குக் கேடு விளைக்க வேண்டும் என்ற தீயெண்ணத் தாலுமே தீமையான பல செயல்கள் செய்யப்படுகின்றன. பயனிலே பற்றின்றி நாம் செயல்படும்பொழுது, தீச்செயல்களைப் புரிவதற்கு இடமே இல்லை. எனவே, பயனில் பற்றில்லாமல் செய்யப்படுபவை எதுவும் தீமையற்ற செயல்களாகவே இருக் கின்றன. மேலும், ஒரு கடமையினை ஆற்ற வேண்டியபொழுது அதன் பயனை எண்ணினால் அக்கடமையினைச் செய்யாது தவறும் நிலையும் ஏற்படலாம். எனவே, பயன் கருதிச் செயல்படுவோர் தம் கடமைகளில் தவறி விடுகின்றனர். தீமை ஏதும் செய்யாமல் கடமை எதிலும் தவறாமல் ஒருவர் வாழவேண்டுமெனில் பயன் கருதாது பணிபுரியும் மனநிலை அவருக்கு வேண்டும் சமுதாயத்தி லுள்ள ஒவ்வொருவரும் தத்தமக்குற்ற கடமைகளைத் தவறாது ஆற்றி, தீமைகள் அகன்றால்தான், சமுதாய வாழ்வு ஒழுங்கான உயர் வாழ்வாக இருத்தல் இயலும். இத்தகைய சமுதாய நல் வாழ்விற்கு வழிவகுப்பது பயன் கருதாது பணியாற்றும் பண்பே யாகும். இறைமையில் தோய்ந்த இதயத்தில் இப்பண்பு இயல்பாக எழுகின்றது.

இரத்த அழுத்தமும் இதய நோயும் :

எந்த முயற்சியில் நாம் இறங்கினாலும் இறைமையின் கருவியாகவே நாம் இயங்குகிறோம் என்ற எண்ணத்தை மறவாமல், முயற்சி வேறு பயன் வேறு என்ற உண்மையை உள்ளத்திலே கொண்டு, பயனிலே பற்று வைக்காமல், பதறாமல், பொறுமையுடன் உழைத்தால்தான் நாம் உயருகின்றோம்.

பக்தியுடையார் காரியத்திற்
பதறார், மிகுந்த பொறுமையுடன்

வித்து முளைக்குந் தன்மை போல்
மெல்லச் செய்து பயனடைவார்.

இறைமையுணர்வோடு நாம் செயல்படும் பொழுது.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" —நாவுக்கரசர்

என்ற உண்மையுணரும் உள்ளத்துடன், பொறுமையாக. வித்து முளைப்பது போல் பதருமல் மெல்லச் செயல்படுகிறோம். வித்து முளைப்பதுபோல் கடமைகள் மெல்லச் செய்யப்பட்டால் உணர்ச்சி வேகத்திற்கு இடமில்லை. உணர்ச்சி வேகமும் கவலையுந்தாம் இரத்த அழுத்தத்திற்கும் இதய நோய்களுக்கும் காரணங்கள் ஆகின்றன. உணர்ச்சி வேகமும் ஓயாத கவலையும் கூடா. இவையே இதய நோய்களுக்கு மூலங்கள் என்பதை இன்றைய வைத்திய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. எனவே, இரத்த அழுத்தத்தையும் இதய நோய்களையும் தடுப்பதற்காக வாவது பயனிலே பற்றுக் கொள்ளாது, காரியத்திற் பதருமல் பொறுமையுடன் செயல்படும் சீரிய பண்பினை நாம் பெறுதல் வேண்டும்.

"இந்தச் செயலை நான் செய்கின்றேன்" என்று எண்ணுவது அகந்தை.

"இந்தச் செயலின் காரணமாக இந்தப் பயன் விளைகின்றது", என்று கருதுவது அறியாமை.

அந்தப் பயன்மீது பற்று வைப்பது ஆசை.

"நான் செய்கின்றேன்" என்ற அகந்தை இன்றி, 'இச்செயலால்தான் இது விளைந்தது' என்ற அறியாமை இன்றி, 'பயன்மீது பற்று' என்ற ஆசையின்றிச் செயல்படுபவனே உயர்ந்த ஞானத்தை உணர்ந்தவன் என்று பகருகின்றது பகவத்கீதை.

அகந்தை, அறியாமை, ஆசை என்ற மூன்றுமின்றிக் கடமையாற்றும் "கரும யோகி"களாக நம் அனைவரையும் உயர்த்துவதற்கென எழுந்த உன்னதப் படைப்பான கீதை, வாழ்க்கை என்ற இருண்ட போர்க்களத்தில் வகையறியாது தடுமாறும் நமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகும்.

இறைமையில் இசைந்த இதயமும், பயன் கருதாப் பணியும்:

பயன் கருதாது பணியாற்றும் அரிய திறனைப் பெறுவது எளிதன்று. ஆனால், இறையுணர்வு நம் இதயத்திலே இசைந்துவிட்டால் இத்திறன் இயல்பாகவே நமக்கு வந்து விடுகின்றது.

அகிலாண்டங்களிலும் எங்கும் எல்லாமாய் நிற்பது இறைமை, அந்த இறைமையே நம்மையும் இயக்கி நடத்துகின்றது என்ற உணர்வே இறையுணர்வு என்று கண்டோம். இறைமையன்றி எதுவுமில்லை. இறைமை இயக்கமன்றி எச்செயலும் இல்லை. அண்டங்கள் சுழல்வதும், ஆதவன் எரிவதும், கடலடங்கி நிற்பதும், கருமேகம் பொழிவதும் இறைமையின் இயக்கம் என்ருல், மக்களின் முயற்சிகளும் அம்முயற்சிகளின் பலன்களும் இறைமையின் இயக்கத்திற்கு உட்பட்டுத் தானே இருத்தல் வேண்டும்? இந்த உண்மையினை உணர்த்தும் வகையில்,

"கருமமும் கரும பலனுமாகிய காரணன் தன்னை"

—திருவாய்மொழி

என்று இறைமையினை ஏத்துகின்றனர் அடியார்கள். நாம் செய்யும் கருமங்கள், அக்கருமங்களின் பலன்கள், அவற்றுக்கான காரணம் அனைத்துமே இறைமைதான் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றனர் மெய்யடியார்கள்.

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகை நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே"

(—திருத்தொண்டர் புராணம்—சாக்கிய நாயனர்)

வினை, வினையைச் செய்பவன், வினையின் பயன், அப்பயனுக்குக் காரணம் எல்லாமே இறைமைதான் என்பதே உண்மையென உறுதியாகக் கூறுகின்றனர்.

சிந்தனை, செயல் இரண்டுமே இறைமையின் இயக்கந்தான் என்ற அறிவின்றி, ஆசை, கோபம் என்ற மயக்கமான பொய்யிலே சுழலும் புன்மையினைக் கடிந்து விலக்குகின்றனர் அடியார்கள்:

"செய்யுஞ் செய்கையும் சிந்திக்கும் சிந்தையும்
ஐய நின்னதென் றெண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யிலே சுழன் றேனென்ன புன்மையே"

—தாயுமானவர்.

"நான் என்ன செய்தாலும், அச்செயலால் என்ன பயனைப்பெற்ருலும், இறைமையே, அஃது உன் செயல்தான் என்ற நினைவு என் மனத்திலே இருக்கவேண்டும்" என்று வேண்டுகின்றனர்.

"என்செயினும் என்பெறினும் என்னிறைவா ஏழையேன் யான்
நின்செயலென் று உன்னும் நினைவுவரக் காண்பேனே"

—தாயுமானவர்.

சமுதாய ஒழுக்கம் :

அரசாங்கத்தில் பணிபுரியும் அலுவலர்கள் அரசாங்கத்தின் கருவிகளாகவே செயல்படுகின்றனர். அவரவர்களின் பதவி நிலைக்கேற்ப அவர்களுக்கு அதிகாரங்கள் உண்டு. சட்டப் படியான அதிகார வரம்புகளுக்கு உட்பட்டே அவர்கள் பணி யாற்ற வேண்டும். இந்தச் சட்டத்தின் இந்தப் பிரிவுப்படி இவ்வுத்தரவு இடப்படுகின்றது என்று அவர்கள் பிறப்பிக்கும் முக்கியமான உத்தரவுகள் ஒவ்வொன்றிலும் எழுதப்படுவ துண்டு. பொதுப்பணி புரியும் அதிகாரிகள் அரசாங்கம் என்ற பெரியதோர் அமைப்பின் கருவிகளாகவே செயலாற்றுவதால், தங்களுக்குள்ள அதிகார வரம்புகளுக்கு உட்பட்டே அவர்கள் இயங்குகின்றனர். இவ்வாறு, இயங்கினுல்தான் நாட்டின் நிர்வாகம் ஒழுங்கு தவருமல் நடைபெற முடியும்.

இதுபோன்றே, நம் வாழ்வில் இறைமையின் கருவிக ளாகவே நாம் இயங்குகின்ரேம் என்ற உண்மையினை உறுதி யாக மனத்திலே கொண்டோமானுல், நாமும் வரம்புகளுக்கு அடங்கியே செயலாற்றுவோம். அங்கே சட்டம் விதிக்கும் வரம்புகள்போல், இங்கே மனச்சான்று என்ற இறையுணர்வு நமக்குற்ற ஒழுக்க வரம்புகளைக் காட்டிக்கொண்டே இருக்கிறது. இறைமையின் கருவிதான் என்ற எண்ணம் இருக்கும்பொழுது, எவருமே மனச்சான்று உணர்த்தும் நன்மை தீமை என்ற வரம் பினை மீறுவதில்லை. இவ்வாறு, நன்மை தீமை என்று மனச் சான்று காட்டும் வரம்புகளுக்கு உட்பட்டு நாம் அனைவரும் செயல்படும்பொழுது, சமுதாய வாழ்வு சீரடைகின்றது. சமுதாய ஒழுக்கம் நிலைபெறுகின்றது.

"நான்" என்ற அகந்தையும், "நான் விளைத்த பயன்" என்ற அறியாமையும், "பயன்மீது பற்று" என்ற ஆசையும் இன்றிக் கடமை ஆற்றவேண்டும் என்ற கீதைமொழி இறை யுணர்வில் இசைந்த மொழியேயாகும். இடைவிடாது செய லாற்றி, அச்செயல்கள் விளைக்கும் பயன்களால் துன்பம் ஏதும் அடையாமல் இருக்கும் உபாயந்தான் "கரும யோகம்" என்ற வாழ்க்கை முறை. "பயன் கருதாப் பணி" என்ற இந்த வாழ்க்கை முறையினைப் பற்றியொழுகும் திறனை இறையுணர் வால் நாம் எளிதிலே எய்துகிரேம். இறைமையில் இசைந்த வாழ்வே பயன் கருதாது பணி புரியும் வாழ்வாக மலர்கின்றது, மணங் கமழ்கின்றது.

———

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

நுல்[4] நெகிழ்ச்சிக் கருத்து வேர்ச்சொல்

துளைக்கப்பட்ட பொருள்கள் உளுத்தமரம்போற் கட்டு விட்டுப் போவதனாலும்; கையினாலும் கோலினாலும் எளிதாய்த் துளைக்கப்படும் அல்லது ஊடுருவப்படும் பொருள்களெல்லாம், நீருங் கூழும்போல் நெகிழ்ச்சிப் பொருள்களாகவே யிருப்பதனாலும், துளைத்தற் கருத்தினின்று நெகிழ்ச்சி அல்லது தளர்ச்சிக் கருத்துத் தோன்றிற்று.

உளு=புழு. உளுத்தல்=புழுத்துளைத்தல்.

ஒ. நோ: துள்—தொள்—தொள—தொளர்—தளர்.

நுல்—நல்—நலி. நலிதல்=1. மெலிதல். 2. சரிதல். 3. தோற்றல் (தோல்வி யடைதல்). 4. அழிதல். ''நண்ணா வசுரர் நலியவே'' (திவ். திருவாய். 10 : 7 : 4).

நலி — நலிவு — நலிபு = மெலிந்த ககரமாகிய ஆய்தம். ''நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்'' (தொல். செய். 221).

நல் — நால். நாலுதல் = சரிந்து அல்லது தளர்ந்து தொங்குதல். ''நான்ற முலைத்தலை நஞ்சுண்டு'' (திவ். இயற். 1 : 18). 2. கழுத்திற் சுருக்கிட்டுத் தொங்கிச் சாதல். ''நான்றி யான் சாவலன்றே'' (சீவக. 2513).

நால்வாய் = 1. தொங்கும் வாய். ''நால்வாய்க் கரி'' (திருக்கோ. 55). 2. தொங்கும் வாயுள்ள யானை.

நால் — நாலி = கோலுங் கொடுக்குமாய்த் தொங்குங் கந்தைத் துணி.

நுல்—நுள்—நொள்—நொள்கு, நொள்குதல்=1. சுருங்குதல். ''நூல் நொள்கிற்று'' (நன். 454, மயிலை). 2. இளைத்தல். (யாழ். அக).

நொள்கு—ஞொள்கு. ஞொள்குதல்=1. மெலிதல். (திவா) 2. குறைவு படுதல். ''புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி'' (அகம். 31). 3 சோம்புதல். (திவா). 4. அஞ்சுதல். (திவா). 5. குலைதல். (பிங்). 6. அலைதல். (பிங்).

தொள்கெனல்—அச்சக் குறிப்பு.

நொள்—நெள்—ஞெள். ஞெள்ளல்=சோர்வு.

நொள்—நொள. நொளநொளத்தல்=1. குழைதல். 2. வழுவழுப்பாதல்.

நொள்—நொளு. நொளுநொளுத்தல்=குழைதல்.

நுள்—நள். நளு நொளுத்தல்=குழைதல்.

நொள்—நொளில்=சேறு. (பிங்).

ஒ. நோ : தொள் — தொள்ளி = சேறு. தொள்ளி — தொளி=சேறு.

நொளில்—நொறில்=1. நுடக்கம். ''நொறிலியற் புரவி யுதியர் கோமான்'' (தொல். சொல். 396, உரை). 2. ஒடுக்கம். (பிங்). 3. சேறு. ''செருநில நொறிற்செந் நீரினுள்'' (சூளா. அரசி. 274).

நொளு—நொளுப்பு=வேலை கழப்புகை.

நொள் — நொடு — நொடி. நொடித்தல் = 1. கட்டுக் குலைதல். சக்கரம் நொடிக்கும். (உ. வ.).

2. வணிகத்தில் இழப்படைதல். 3. செல்வநிலை தாழ்ந்து வறுமை யடைதல்.

நொடு—நொது. நொதுத்தல்=1. தளர்தல். 2. அழிதல். நொது—நொந்து. நொந்துதல்=அழிதல். ''நூறுகோடி பிரமர்கள் நொந்தினர்'' (தேவா. 1218). 3. நொந்து—நந்து. நந்துதல்=1. கெடுதல். ''நாடற்கரிய நலத்தை நந்தாத் தேனை'' (திருவாச. 9 : 15). 2. மறைதல். ''இடையுறு திரு வென வந்து நந்தினன்'' (கம்பரா. உண்டாட். 67) 3. சாதல். ''திருமைந்தன் நந்தநீர்ந்தது மாயுளைப் பெற்றதும்'' (பிர மோத். 21 : 61). 4. அவிதல்.

நந்து = 1. மெல்லிய சதையுள்ள நீருயிரி. 2 அது இருக்கும் சங்கு. ''நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே''. (தொல். மர. 64).

நந்து — நத்து — நத்தை = 1. மெல்லிய சதையுள்ள ஊமைச்சி. 2. அது இருக்கும் கூடு.

நத்து=சங்கு. ''நத்தொடு நள்ளி'' (பரிபா. 10 : 85). நொது—நொதி=சேறு.

நந்து — நத்தம் = 1. சங்கு. (சீவக. 547, உரை). 2. ஊமைச்சி. நெள்—நெழு—நெகு. நெகுதல் = 1. கழலுதல். ''எனவளை நெகவிருந் தேனை'' (திவ். பெரியதி 8:5:9) 2. மனமிரங்குதல். 3. காதலால் உருகுதல். ''என்புநெகப் பிரிந்தோன்'' (தொல். கள. 23). 4. கரைதல். 5. பொடியாதல். 6. கெடுதல். ''மாறுபட மலைந்தாய்ப்படை நெக்கது'' (சீவக. 426).

நெகு—நெக்கு=நெகிழ்ச்சி.

நெக்குவிடுதல்=1. பொருத்துவாய் விடுதல். 2. பிளத்தல்.

> ''—நெட்டிருப்புப்
> பாருக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
> வேருக்கு நெக்கு விடும்.'' —நல்வழி, 33.

நெகு—நெக்கல்=1. தளர்ந்தது. 2. அளிந்த பழம்.

நெகு—நெகிழ். நெகிழ்தல் = 1. பிணிப்புத் தளர்தல். ''கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி'' (அகம். 26). 2. நழுவுதல். ''எல்வளை நெகிழ் போடும்மே'' (ஐங்குறு. 20). 3. நிலைகுலைதல். ''நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ'' (கலித். 17). 4. பூமலர்தல். ''காவியுங் குவளையு நெகிழ்ந்து'' (சூளா. நாட். 5). 5. குழைதல். (சூடா). 6. இளகுதல். ''சேவடி நோக்கி விரும்பி யுண்ணெகிழ'' (கூர்மபு. பிரமவிஷ்ணு. 16). 7. மனமிரங்குதல். 8. மெலிதல். ''மென்றோள் நெகிழவிடல்'' (கலித். 86). 9. வெட்டிற்குப் பதமாதல். 10. விட்டு நீங்குதல்.

நெகு — நகு — நங்கு—நாங்கு. நாங்குதல்=1. திடங்குன்றுதல். தாங்கி நாங்கிப்போக. (உ. வ. யாழ்ப்). 2. தளர்தல்.

நாங்குளு — நாங்குழு = தளர்ந்து நீண்டு இயங்கும் புழு. ''நாங்குழுவை வள்ளுகிரா லெற்றுமல்'' (பணவிடு. 265). நாங்குழு—நாங்கூழ். ''எறும்பிடை நாங்கூழெனப் புலனு லரிப்புண்டு'' (திருவாச. 6:25). நால்—நால்கு—நாகு—நாக்கு = 1. வாய்க்குள் தொங்கும் உறுப்பு. 2. படகு வலிக்குந் துடுப்பின் பலகை. 3. தீக்கொழுந்து.

நாகு—நாவு.

நாவு—நா=1. ''யாகாவா ராயினும் நாகாக்க'' (குறள். 127). 2. சொல். ''நம்பி நாவினு ளுலகமெல்லாம் நடக்கும்'' (சீவக. 316). 3. துலைநா. ''துலைநா வன்ன சமநிலை யுளப்பட'' (ஆத். பேரா. பொதுப்பாயிரம்) 4. மணிநா. ''வாயிற்

கடைமணி நடுநா நடுங்க'' (சிலப். 20 : 53). 5. தீக்கொழுந்து ''எழுநா'' (பிங்). 6. திறவு கோலின் நாக்கு. 7. இசைக் குழலின் ஊதுவாய்.

தெ. நாலுக, க. நாலகெ(g), து. நாளாயீ, ம. நாக்கு.

நொள்—நொய். ஒ. நோ : தொள்—தொய். நொய்ம்மை = 1. தளர்ச்சி. 2. உறுதியின்மை. 3. கனமின்மை. ''மெய்ம்மை சீர்மை நொய்ம்மை வடிவம்'' (மணி. 27 : 254). 4. மென்மை. 5. மனத்திடமின்மை. 6. மனவுருக்கம். 7. வறுமை. 8. சிறுமை. 9. இழிவு.

நொய்ய = 1. மென்மையான ''அனிச்சப்போதி னதிகமு நொய்ய'' (கம்பரா. கோலங். 14). 2. வலியற்ற. நொய்ய மதி. 3. புன்மையான. ''நொய்தி னொய்ய சொல்'' (கம்பரா. பாயி. 5). 4. வசையான நொய்ய சொற் பொருதவன்.

நொய்யவன் = புல்லன் (அற்பன்). ''நொய்யவ ரென் பவர் வெய்யவ ராவர்.'' (கொ. வே. 57). நொய்து = 1. மெல் லியது. 2. கனமில்லாதது. ''விண்ணி னொய்தால்'' (ஞானவா. வீதக. 76). ''நொய்தாந் திரணத்தின் நொய்தாகும் வெண் பஞ்சின்'' (நீதி வெண்பா, 8). 3. இழிவானது. ''நொய்தி னொய்ய சொல்'' (கம்பரா. பாயி. 5). 4. விரைவு. ''ஆயிழை நொய்தினுரை'' (சீவக. 1767).

நொய்—நொசு. நொசு—நொச. நொசநொசத்தல் = சோறுங் கஞ்சியும் கட்டு விட்டு நொந்து போதல்.

நொசநொச வெனல் = சோறு நொந்துபோன நிலை யடைதல்.

நொய்—நொ. நொதல் = சோறு நொந்துபோதல்.

நொசு—நசு. நசுநசுத்தல் = 1. குழைதல். 2. தடு மாறுதல். 3. விடாது தூறுதல். நசுநசுத்த மழை. (உ. வ.). 4. ஈரமாயிருத்தல்.

நசுநசெனல் = 1. கட்டு நெகிழ்தற் குறிப்பு. 2. மெதுவா யிருத்தற் குறிப்பு. 3. விடாது மழை தூறற்குறிப்பு. 4. ஈரமா யிருத்தற் குறிப்பு.

நொசு—நொசி. நொசிதல் = 1. நைதல். ''நொசிந்த துகில்'' (தொல். சொல். 330, உரை). 2. குறைவுறுதல். ''நொசிவிலாத பூசனை'' (விநாயகபு. 36 : 37).

நசு — நச்சு. நச்சுமழை=விடாத சிறு தூறல். நச்சுவாயன்=விடாது பேசும் அலப்புவாயன்.

நொய்—நை. ஒ நோ:பொய் (உட்டுளை)—பை. நைதல்= 1. நசுங்குதல். 2. தளர்தல். ''இடை நைவது கண்டு'' (திருக்கோ. 134). 3. வாடுதல். 4 மனம் வருந்துதல். ''நைந்து சாமவர்க்கே'' (திருநூற். 43). 5. இரங்குதல். ''நீநல் காமையின் நைவரச் சாஅய்'' (புறம். 146). 6 தன்வயமிழத்தல். ''அரிவை நய'' (சீவக. 492). 7. சுருங்குதல். ''நையாத வாயுளுஞ் செல்வமும்'' (அருட்பா, 5, பொது 2). 8. மாத்திரை குறைதல். ''வன்மையே லுகர முறுவது நையும்'' (வீரசோ. சந்தி. 2). 9. நிலைகெடுதல். 10. கெடுதல்.

நைய நறுங்கத் தட்டுதல்=மிக நொறுங்கச் சதைத்தல். ஒ. நோ: நெகவரைத்தல்=மாவாக அரைத்தல்.

நைச்சாந்து = மைப்பதச் சன்னக்காரை. நையப்புடைத்தல்=உடம்பு தளர அடித்தல். நைபவர்=வறியவர், நிலைமை தாழ்ந்தவர். ''நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்'' (தொ. வே. 56).

நைவு=1. மிகப் பழுத்தது. 2. வாடினது. நைவருதல்= இரங்குதல். (புறம். 146).

நை—நயி—நசி. ஒ. நோ : மொய்—மொயி — மொசி. நசிதல்=1. நசுங்குதல். 2. சுருங்குதல். 3. நிலைமை கெடுதல். 4. அழிதல்.

நசி—வ. நச். (Nas).

நசித்தல் = (செ. குன்றிய வி.) 1. நிலைமை தாழ்தல். அந்தக் குடும்பம் நசித்துக்கொண்டு வருகிறது. (உ வ.). 2. அழிதல். ''நசியா வுலகிற் பாவமும் நசிக்கும்'' (காஞ்சிப்பு. மணிக. 61). 3. சாதல். ''நசித்தவரை யெழுப்பியருள்'' (அருட்பா, 6, அருள்விளக்க 4).

(செ. குன்று வி). 1. அரைத்தல். 2. அழித்தல். ம. நசிக்க. நசியல்=1. நெரிந்தது. 2. துவள்வது. நசியலன்=கழப்புணி நழுவி.

நசிவு=1. நெரிவு, 2. பழி, 3. கேடு. நசிவு காணுதல்= நைந்து சேதப்படுதல்.

நசி — நசுங்கு. நசுங்குதல்=1. நைந்து போதல். 2. பழம் நசுங்கி விட்டது. (உ. வ.). கசங்குதல். 3. நிலை குலைதல்.

நசுங்கச் சப்பி=பிசினறி.

நசுங்கு—நசுக்கு. நசுக்குதல்=1. நசுங்கச் செய்தல். 2. சிரங்குக் கொப்புளத்தைத் தேய்த்துப் பிதுக்குதல். 3. மூட்டைப் பூச்சி பேன் முதலியவற்றை அழுத்தி அல்லது குத்திக் கொல்லுதல். 4. யானை உயிரிகளை மிதித்துக் கொல்லுதல். 5. எதிரிகளை அடக்கி யொடுக்குதல். 6. குடற்காற்றை அடக்கி வெளிவிடுதல்.

க. நசிக்கு.

நசுங்கல்=1. நைந்த காயம். 2. மெலிந்தது. 3. சிறியது.

நசுங்கலான்=1. உறுதியற்றவன். 2. சிறியது. நசுங்கலாண்டி=உறுதியற்றவன்.

நசுக்கு=1. நெரிவு. 2. சிறியது. தெ நலுசு.

நசுக்குணி=1. சிறியது. 2. கூழையன். நசுக்குணி—நசுகுணி.

நசுக்கான்=1. சிறியது. 2. சிறுபையன். நசுக்கான் பையன். (உ. வ.).

நசுவல்=1. ஊக்கமற்ற—வன்—வள். 2. மெலிந்த—வன்—வள்—து.

நை—நைஞ்சு—நஞ்சு. ஒ. நோ: பை—பைஞ்சு—பஞ்சு, மை—மைஞ்சு—மஞ்சு. பைம்மை=மென்மை. பைஞ்சு=மெல்லியது, நொய்யது. நஞ்சு=1. உட்கொண்ட வுயிரிகளை நைவிக்கும் அல்லது கொல்லும் பொருள். "பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர்" (குறள். 580). 2 தீயது. "அளவிற்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு," அவன் வாயிலிருந்து வருவதெல்லாம் நஞ்சு. (உ. வ). 3. நஞ்சுக்கொடி. குழந்தை பிறந்து விட்டது; ஆனுல், நஞ்சு இன்னும் விழவில்லை. (உ. வ.).

நஞ்சு—நஞ்சன்=தீயவன்.

நைந்தான்=மெலிந்தவன். நைந்தான்—நஞ்சான்.

நஞ்சானும் குஞ்சும்=மெலிந்த குழந்தை குட்டிகள்.

நைந்து=மனமிரங்கி. நைந்து—நஞ்சு.

ஒ. நோ: ஐந்து—அஞ்சு.

நஞ்சுறுதல்=மனமுருகுதல், உளங்கனிதல். "நஞ்சுற்ற காம நனிநாகரிற் றுய்த்த வாறும்" (சீவக. 11).

தமிழில் எழுதுவோம்

[கி. இராமலிங்கனார், எம். ஏ.]

1. அரியணையில் அன்னை

ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டு வந்தபோது நம் தமிழ் மொழியாம் அன்னை அரசியலில் ஒரு பணிப்பெண்போல இருந்து வந்தாள். 15-8-1947-ல் நம் நாடு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. பெற்றதே தவிர, ஆட்சி முறையும், ஆட்சி மொழியும், முன்பு இருந்தபடியே இருந்தன. ஆளும் அலுவலர்களுள் மேல் நிலையிலுள்ளவர்கள் நம்மவர்களாக மாறினர். மேதகு இராசாசி அவர்கள் தலைமை ஆளுநர் ஆனார்கள். மாண்புமிகு சவகர்லால் நேரு அவர்கள் நாட்டின் முதல்வர் ஆனார். ஆங்கிலமே அரசாண்டு வந்தது.

நமக்கென ஆட்சிமுறை ஒன்றை அமைக்கவும், நம் நாட்டின் ஆட்சி மொழியைத் திட்டம் செய்யவும், இந்திய அரசியல் அமைப்பு மாமன்றம் (Indian Constituent Assembly) ஒன்று நிறுவப்பெற்றது. மாநிலச்சட்ட மன்றங்கள் தெரிந்தெடுத்தவர்கள் பலரும், பிறர் சிலரும் அதன் உறுப்பினராயினர். அதன் தலைவராகத் திருமிகு. இராசேந்திரப் பிரசாத் அவர்கள் அமர்ந்தார்கள். 1950 ஆம் ஆண்டு இறுதி வரையில் கூடி ஆராய்ந்து, இம் மாமன்றம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியது.

மக்களாட்சி முறையை அமைக்க அச்சட்டம் வகை செய்தது அனைவருக்கும் தெரிந்ததே. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று நம் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் அவர்கள், எதிர்கால ஞானத்தோடு, பல ஆண்டுகளுக்கு முன்பே பாடி வைத்தபடி, இந்நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஒரு மன்னர் ஆயினர். நாட்டை ஆளும் மன்னத்தன்மை (Sovereignty) வயது வந்த ஒவ்வோர் ஆணிடமும் பெண்ணிடமும் ஒப்படைக்கப் பட்டுவிட்டது. அவர்கள் அளிக்கும் வாக்கை வைத்துக் கொண்டே, அமைச்சர்கள், மக்களுக்காக நாட்டை ஆளும் நிலைமை பெற்றனர் என்பதையும், எல்லாரும் அறிவர்.

ஆட்சி மொழியைப்பற்றி அரசியல் அமைப்பு மாமன்றம் செய்த முடிபு, நாட்டின் பல்லோருக்கு ஏமாற்றத்தைத் தந்தது.

இம் முடிபுகள் அரசியல் அமைப்புச் சட்டம் பாகம் xviiல் 'ஆட்சிமொழி' என்னும் தலைப்பில் இடம் பெற்றிருக்கின்றன.

நம் நாடு ஒரு கண்டம் போன்றது. இதில், பல மாநிலங்கள், தனித்தனி நாடுகள் போன்று இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மொழி, பெரும்பாலான மக்களால் பேசும் மொழியாக உள்ளது. அந்த அந்த மொழியை ஆதாரமாக வைத்தே, இப்போது இம்மாநிலங்கள் பெயரிடப் பெற்றிருப்பதை நாம் அறிவோம். ஒரு மாநிலத்திலோ அல்லது சில மாநிலங்களிலோ வழங்கும் ஒரு மொழியை நாட்டின் பொது மொழியாக்கினுல், மற்ற மாநில மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகி விடுவர்.

இந்தச் சிக்கலை, அரசியல் அமைப்பு மாமன்ற உறுப்பினர்களுள் பெரும்பாலோர் நன்கு உணர்ந்திருந்தனர். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆட்சி மொழியைப் பற்றிக் குறிப்பது, ஆட்சி முறையை மக்களாட்சியாக அமைத்ததைப் போல அவ்வளவு எளிதாக இல்லை. எப்படியோ, முனைந்து முயன்று இந்தி பேசும் மாநிலத்தவர்கள் தங்கள் கருத்தைப் பிறர் ஏற்கச் செய்வது என்னும் முடிவை உள்ளத்திற் கொண்டனர். 'இந்தியே இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகும்' என்னும் 343 ஆம் உறுப்பு (Article) அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பிடித்துக் கொண்டது.

உறுப்பு 345-ல், மாநில ஆட்சி மொழியைப் பற்றிய செய்தி வருகிறது. ஒரு மாநிலம், அங்கு வழங்கும் மொழியொன்றையோ பலவற்றையோ அந்த மாநிலத்தின் ஆட்சித் தேவைகளில் எதற்காவது அல்லது எல்லாவற்றுக்குமாவது ஆட்சிமொழியாக ஆக்கிக் கொள்ள இவ்வாறு அம் மாநிலத்தின் சட்ட மன்றங்கள் சட்டம் இயற்ற வேண்டும்.

1950-ல் உருவான அரசியல் அமைப்புச் சட்டத்தில், இந்த 345 ஆம் உறுப்பில் பின்வரும் கருத்துள்ள ஒரு பகுதியுமிருந்தது :

1950ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச்சட்டம் செலாவணிக்கு வந்த பதினைந்து ஆண்டுக்குள் ஆட்சிமொழி பற்றி ஒரு மாநிலம் இவ்வாறு சட்டம் செய்து கொள்ளாவிட்டால், அம் மாநிலத்தின் ஆட்சிமொழி, ஆட்சிமுறை ஆணையோ வேறு சட்டமோ ஏதும் இல்லாமல், தானுகவே, இந்தியாகிவிடும்.

இது மிகவும் அச்சமும் கலக்கமும் தரும் பகுதியாக இருந்தது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், ஆட்சிமொழி பற்றிய, பாகத்தை அரசியல் அமைப்பு மாமன்றம் நிறைவேற்றியபோது நடந்த ஒரு நிகழ்ச்சி இங்கே நினைக்க வேண்டியதாகும். இந்தப் பகுதி அரசியல் அமைப்பு மாமன்றத்தின் ஆய்வுக்கு வந்தபோது, அவையில் கூடியிருந்த உறுப்பினர்களை மாமன்றத்தின் தலைவர் கவனித்தார். இந்தி மொழிக்கு, நாட்டின் ஆட்சி அரியணையளிப்பதில் தயக்கங் கொண்டவர்கள் பலராக இருந்ததைப் பார்த்தார். அது நேரம், இப்பகுதி முடிவு செய்யப்பெற நேர்ந்தால் 'இந்தி' தோற்றுவிடும் என்னும் ஐயம் மேற்கொண்டார். "இது சிக்கலான பகுதி; பிறகு எடுத்துக் கொள்வோம் இதைத் தள்ளி வைத்து விட்டு மேலுள்ள பகுதிகளுக்குச் செல்லலாம்" என்று பக்குவமாகச் சொல்லி மேற்சென்று விட்டார். மறுநாள் கூடுவதற்கு முன்பு என்ன நடந்திருக்கும் என்று கூறத் தேவையில்லை அவையில் இந்தியை ஆதரிப்போர் பலராக இருந்தனர். இப்பாகம் வாக்குக்கு விடப்பெற்றது. வந்திருந்தவர்களுள் ஒரு பாதி உறுப்பினர்களே ஆதரித்தனர் சரி பாதி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். தலைவர் பெரிதும் இக்கட்டான நிலையில் சிக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். துணிந்து. தமது தலைவர் பதவிக்குரிய வாக்கை ஆதரவாளர்கள் பக்கம் இட்டார்! இப்பகுதி ஒரே ஒரு வாக்கால் நிறைவேற்றப் பெற்று விட்டது! எதிர்த்தவர்கள் ஏமாற்ற முற்றனர். இந்திமொழி இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக அமர்ந்துகொண்டு விட்டது!

இச் செய்தியை, அப்போது அவையில் இருந்த அரசியல் அமைப்பு மாமன்ற உறுப்பினர்களுள் ஒருவரான திரு எல். கிருஷ்ணசாமி பாரதியார் எம். ஏ., பி எல். அவர்கள் பேசியும் எழுதியும் தம் உள்ளத்தில் அடர்ந்திருந்த துயரத்தை ஆற்றிக் கொண்டதைப் பலரும் அறிவர். இப்பெருந்தகையார் நாட்டுப் பற்றுடன் காங்கிரசில் பணிபுரிந்ததற்காகச் சிறைப் படுத்தப் பெற்றவர். இவர் வாழ்வரசியாரும் மக்களுங்கூட சிறை புகுத்தல் பெற்றவர்கள்.

இனி நமது மாநில மொழியாவது தமிழாகி நிலைபெற வேண்டுமே என்னும் கவலை தமிழக மக்களுக்கு மிருந்தது. காலந்தாழ்த்தால், 345 ஆம் உறுப்பின் பின்பகுதியில் வகை செய்திருந்தபடி, நமது மாநில மொழியும் 'இந்தி'யாகிவிடுமோ என்னும் அச்சம் வளர்ந்தது. அரசியல் அமைப்பு மாமன்றத்

தின் தலைவராக வீற்றிருந்த திருமிகு இராசேந்திரப் பிரசாத் அவர்களின் மாநிலமான பீகாரில் 1950ஆம் ஆண்டிலேயே இந்தியை அம்மாநில ஆட்சி மொழியாக்கும் சட்டம் நிறைவேற்றப் பெற்று விட்டது. தொடர்ந்து 1951-ல் உத்தரப் பிரதேசம், 1954-ல் ஒரிசா முதலிய வடபுல மாநிலங்களும் சட்டத்தின் மூலம் இந்தியை ஆட்சி மொழியாக்கிக் கொண்டன. பதினைந்து ஆண்டு என்பது எப்படியோ விரைந்து ஓடிவிடுமே. விழிப்பின்றி இருந்துவிடக் கூடாதே என்று எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்த அறிஞர்களும் சிந்திக்கலாயினர். அண்ணாமலை மன்றத்தில் ஓர் அனைத்துக் கட்சி மாநாடு நடந்தது. அன்றைய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். உடனடியாகத் தமிழை ஆட்சி மொழியாக்கும் சட்டம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினர்.

தொடர்ந்து, அப்போது சட்டமன்ற உறுப்பினராயிருந்த திரு கசபதி நாயகர் பீ ஏ., பி.எல் அவர்கள் ஆட்சி மொழிச் சட்ட வரைவு ஒன்று சட்ட மன்றத்திற்கு அனுப்பினர். அரசும் தமிழை ஆட்சி மொழியாக்கும் சட்டம் செய்வதற்கு எதிர்ப்பாக இல்லையென்றாலும், அரசின் சார்பிலேயே சட்டம் கொணர விரும்பிற்று. மக்கள் ஆவலுடன் எதிர்நோக்கும் இச்சட்டத்தை, வெளியார் ஒருவர் கொண்டு வந்து பெருமையடைய விட்டு விடுவதற்கு அரசு மனமில்லாமல் இருப்பது இயல்பே. எனவே, திரு. கசபதி நாயகர் சட்ட மன்றத்திற்கு அனுப்பிய சட்ட வரைவு, பணச்செலவு உண்டாக்கும் சட்டமாகும் என்னும் காரணத்தைக் கூறிக்கொண்டு மேதகு ஆளுநர் அவர்களுடைய முன்னிசைவு பெறுவதற்காக அவர்களுக்கு அனுப்பினர்கள். அப்போது முதல் அமைச்சராக இருந்தவர்கள் மாண்புமிகு சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் ஆவார்கள். இச்சட்ட வரைவை ஆராய்வதற்கு இசைவு மறுத்துவிட்டார்.

எனினும் தொட்டாற்போல் கல்வி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் சட்ட மன்றத்தில் 1956 ஆம் ஆண்டின் XXXiX எண் சட்டமாகத் தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றுவித்து விட்டார்.

அன்னை தமிழ்மொழி அரியணையில் அமர்ந்தாள்.

அலுவலகங்களில் அது வரையில் கடிதப் போக்குவரவுக்கு ஆங்கிலமே பயன்படுத்தி வந்ததை மாற்றித் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கு முன்னணியான வேலைகள் நடக்கலாயின.

திருநெல்வேலித் தமிழ் மாகாணச் சங்கத் தலைவர் திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பலதுறை அரசலுவலர்களை ஒன்று கூட்டி ஆயத்தம் செய்து பெற்ற ஆட்சிச் சொல் அகராதியைத் தமிழக அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு கு. காமராசர் அவர்களிடம் வழங்கினர். வழங்குவதற்கென, ஆரவாரத்துடன் இராசாசி மண்டபத்தில் ஒரு விழாவும் நடந்தது. முதலமைச்சர் அகராதியைக் கையில் ஏற்றுக் கொள்ளும் நிழற்படம் ஒன்றும் எல்லா நாள் தாள்களையும் அழகு செய்தது. மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

திரு. எசு. வேங்கடேசுவரன் ஐ. சி. எசு., அவர்கள் தலைமையில் ஆட்சி மொழிக்குழு ஒன்று 1957 ல் அமைக்கப் பெற்றது, அக்குழுவில் திரு டி. கே. சங்கரவடிவேல் பிள்ளை ஐ. ஏ. எசு., அவர்களும் உறுப்பினராக அமர்ந்து, தமிழை விரைவில் அலுவலகங்களில் செயலாக்க ஆணை புரிந்தார்கள். முதலில் அகராதியைச் செப்பஞ் செய்தனர். இப்போது அவ்வகராதியின் நான்காவது பதிப்புப் பல புதிய சொற்களுடன் வெளிவர இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு துறைக்கும் ஓர் அகராதியாகச் சிறப்புச் சொல் அகராதிகள் 46 துறைகளுக்கு வெளியாகி யிருக்கின்றன. இவை யாவும் பொது மக்களுக்கு அரசினர் அச்சகத்தில் விலைக்குக் கிடைக்கும். மக்களும் தனி நிறுவனங்களும் இவற்றை வாங்கி அரசினரிடமிருந்து வரும் கடிதங்களை எளிதில் தெரிந்து கொள்ளவும் அரசினருக்கும் பிறருக்கும் எழுதவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

14-1-1958 பொங்கல் நாள் முதல், தமிழில் கடிதப் போக்கு வரவு செய்ய வேண்டுமென்று. தமிழ் ஆட்சிமொழிச் சட்டம், 4-ஆம் பிரிவின்படி அறிவிக்கை (Notification) ஒன்று வெளியிடப்பெற்றது. இவ் அறிக்கையில் முதற்படியாக ஆங்கிலத்தில் கையினல் கடிதங்கள் எழுதி யனுப்புவதை, தமிழில் எழுதியனுப்புமாறு; வேளாண் துறை முதல் வருவாய்த் துறை ஈருக மாநிலம் முழுதும் உள்ள பத்தொன்பது துறையின் அலுவலகங்களுக்கு ஆணை பிறப்பிக்கப் பெற்றது. பின்னர் படிப்படியாகப் பெரிய அலுவலகங்களிலும் தமிழ் செயற்படப் பெற்றது. அவ்வப்போது அரசு ஆட்சிமொழிச் சட்டத்தின்படி அறிவிக்கை வெளியிட்டு வந்தது.

அப்போது பயன்பட்டு வந்த தமிழ்த் தட்டச்சுப்பொறி (Typewriting Machine)யில் பல குறைகள் இருந்தன. அதைக் கொண்டு விரைவாகத் தட்டச்சு செய்ய முடியாமல் இருந்தது.

அக்குறைகளை ஆராய்ந்து சீர்செய்ய ஒரு குழு அமைக்கப் பெற்றது. அக்குழுவின் வேலை வெற்றியுடன் முடிவதற்கு அது நேரம் சட்டக் கல்லூரி இயக்குநராக இருந்த திரு. எம். அநந்த நாராயணன் அவர்களின் இத்துறையறிவும் பெரிதும் துணை புரிந்தது. தமிழ்த் தட்டச்சுப்பொறி, நம் நாட்டு மற்ற மொழி களில் இதுவரை வந்துள்ள தட்டச்சுப் பொறிகளைக் காட்டிலும், மிகத் திறம்பெற அமைந்தது என்று மற்ற மொழியாளர்களே போற்றலாயினர்.

தட்டச்சுப் பொறி சீர்திருத்தப் பெற்றதும், கடிதங்களைத் தட்டச்சு செய்து அனுப்பும் அலுவலகங்களிலும், தமிழ் அன்னை ஆங்கிலத்தின் இடத்தைப் பெற்றாள்.

மாநிலம் முற்றும் உள்ள அலுவலகங்களில், தமிழில் எங்ஙனம் அலுவல்கள் நடந்து வருகின்றன என்பதை நேரில் ஆய்வு செய்து, அறிவுரை கூறவும் தமிழில் கடிதப் போக்குவரவு நடத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு ஆவன செய்யவும் ஆட்சிமொழி அகராதியை வளம்படுத்தவும் முதன் முதலில் கீ. இராமலிங்கனார் இருந்து அடிப்படை பணிபுரிந்தார். 11—11—1958 முதல் ஒரு தனி அலுவலகத்தை அரசினர் அமர்த்தினர். 1972 தொடக்கத்திலிருந்து அலுவலர்கள் அலுவலகங்களின் தமிழ்ப் பணியை ஆய்வு செய்து வருகின்றனர் என்பது மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும்.

சட்டங்கள், விதிகள் முதலியவற்றைத் தமிழில் பெயர்த்து எழுதும் வேலை தொடங்கப் பெற்றது. மொழி பெயர்ப்புகளைச் சரிபார்க்க முதலில் திரு. கோ. முத்துசாமிப் பிள்ளை ஐ. ஏ. எசு (ஓய்வு) அமர்த்தப்பெற்றார். இப்போதும் இவ் வேலை தனி வேறு அலுவலர்களால் இனிது நடந்து வருகிறது. தமிழ்ச் சுருக்கெழுத்து நூலைக்கொண்டு தாமே சுருக்கெழுத்துப் பயின்று கொள்ளும் வகையில் இந்நூலை எளிதாக அமைத்து அரசினர் வெளியிட்டனர். இன்று தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் பலரால் நூல் பெருகியுள்ளது.

1970 சூலை முதல் தமிழில் எழுதப்பெறும் நல்லவரைவுகள் குறிப்புகளுக்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முயற்சியால் அரசினர் ஆண்டுதோறும் 500/ ரூபாய் பரிசுகள் நாற்பதுக்கு மேற்பட்டு வழங்கி ஊக்கி வருகின்றனர்.

நீதி மன்றங்களில் தமிழை எல்லாச் செயல்களுக்கும் பயன்படுத்த வசதியாகும் பொருட்டுச் சட்டச்சொல் அகராதி

தொகுக்கவும் சட்டங்களைத் தமிழாக்கவும் சட்டச்சொல் ஆட்சிக் குழு ஒன்றை அரசு நிறுவி விரைந்து பணியாற்றி வருகிறது. அறமன்ற நிகழ்ச்சிகள் அவ்வளவும் தமிழிலேயே நடத்தும் நாளைப் பொது மக்கள் அவாவி எதிர்நோக்கியுள்ளனர்.

முதற்படியாகப் பொதுமக்கள் தமிழில் எழுதும் கடிதங்களுக்குத் தமிழிலேயே விடையனுப்ப வேண்டும் என்னும் திட்டத்தை அரசு அமைத்தது. இத்திட்டம் அமைச்சகம் (Secretariat) உள்பட எல்லா அலுவலகங்களிலும் செயற்படுத்தப்படுகின்றது. இரண்டாவது படியாக மாவட்ட நிலையில் ஓர் அலுவலகம் மற்ற அலுவலங்களுக்குத் தமிழில் எழுத வேண்டும் என்பது. மூன்றாவதுபடி துறைத் தலைமை அலுவலங்களுக்கும் தமிழில் வரைய வகுத்தது. நான்காவதாக எல்லாச் செயல்களுக்குமே தமிழைப் பயன்படுத்துவது. நான்கு படிகளிலும் தமிழைப பயன்படுத்தும் அலுவலகங்கள் பலவாக இருக்கின்றன. பொதுமக்கள் நம் அன்னை மொழியைப் போற்றும் உள்ளம் பூண்டால் இந்நான்கு படிகளுமே எல்லா அரசு அலுவலகங்களிலும் விரைந்து செயலாகும் என்பது திண்ணம்.

இன்று தமிழகத்திலுள்ள, எந்த அலுவலகத்துக்கும் பெரும்பாலும் எந்தச் செய்தியையும் பொதுமக்கள் தமிழிலேயே எழுதலாம். அவர்களுக்குத் தமிழிலேயே விடைகள் கிடைக்கும். இந்த உண்மையைப் பொது மக்கள் இன்னமும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆங்கிலத்தில் எழுதினால்தான் கவனிக்கப்பெறும் என்னும் தப்பெண்ணம் இன்னும் இருந்து வருகிறது. இந்தக் கருத்து மாறவேண்டும். ஆட்சிமொழிச் சட்டத்தை முழு அளவு செயலாக்குவதில் பொது மக்கள் விழிப்பாக இல்லையென்றே சொல்ல வேண்டும்.

அரசு அலுவலகங்களிலும் இன்னும் சிலரது மனம் தமிழில் ஈடுபாடு கொள்ளாமல் இருப்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அரசாளும் அமைச்சர் பெருந்தகைகளுக்கு இருக்கும் தமிழார்வத்தை, அலுவலர்களில் சிலர் இன்னமும் உணராமலே இருந்து வருவது உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும். நம் அன்னையை அரியணையில் அமர்த்தும் இனிய பணியில் எவருக்கும் எந்த அளவும் மனக்கசப்பு உண்டாக்கக் கூடாதே என்று ஆட்சி புரிபவர்கள் கொள்ளும் அருட்கருத்தை, அலுவலர்கள் தவருகப் புரிந்து கொள்ளக்கூடாது.

தமிழைத் தம் தாய் மொழியாகக் கொண்டிராத அலுவலர்களும் இவ்வாறு எண்ண வேண்டும். "தமிழகத்தில் பணிபுரிகின்ருேம், தமிழருக்காகப் பணிபுரிகின்ருேம். தமிழர்களின்

விருப்பத்தை நிறைவேற்றவே பணிபுரிகின்ரும்' தமிழ் தெரியாத பிறர் சிலரும் இம் மாநிலத்தின் குடிமக்களாக இருந்தாலும், அவர்களும் "இது தமிழ் மாநிலம், பெரு வாரியான மக்கள் தமிழர்கள், அவர்களோடு நாமும் தமிழர் களாகக் கலந்து உறவாடி, தமிழ் நலம் வளர்வதற்கு இடைஞ் சலாக இருக்கக் கூடாது" என்னும் எண்ணம் மிகப்பெற வேண்டும். இப்படியே பிறமொழி மாநிலங்களிலுள்ள சிறு பான்மையரான தமிழர்களும் நினைப்பதே பொருத்தமாகும்.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் நம் அன்னை மொழி அரியணையில் அமர்ந்திருந்தாலும் சில காலத்துக்கு மட்டும் அன்றி, பிற மாநிலங்களோடும் மைய அரசினரோடும் தொடர்பு கொள்வதற்கும் ஆங்கில மொழி நமக்குப் பயன் பட்டு வரவேண்டியிருக்கிறது. ஆங்கில மொழியை அயல் மொழி என்று சொல்வது பொருத்தமாகாது இந்திய மக்களுள் ஒரு பகுதியாரின் தாய்மொழி ஆங்கிலம் என்பதை நாம் மறந்து விடலாமா? ஆங்கிலோ இந்தியர்கள் நம் நாட்டில் எந்த ஒரு பகுதியை மட்டும் தமக்கு உரிய தனிப்பகுதியாக எண்ணுவதில்லை. இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் அவர்கள் வாழ்ந்து வருவதை அறிவோம். மற்ற மொழியார் களைப்போல இந்தியாவின் ஒரு பகுதியை மட்டுமே தமக்கு உரிய பகுதியாக அவர்கள் எண்ண முடியாத நிலையில் இருக்கின்றனர். இந்தியா முழுதும் தம் நாடு என்று இயல்பாக எண்ணும் நிலையிலுள்ள ஒரே இனம் அந்த இனம். அவர்களே உண்மை யான இந்தியர்கள் எனக் கருதத்தக்கவராக விளங்குகின்றனர். அவர்களைப் பிறநாட்டவர்கள் எவரும், ஆங்கில நாட்டவருங் கூட, தம் நாட்டு மக்களாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நம் நாட்டுக்கே உரிய குடிமக்களான அவர்கள் பேசும் மொழி யாகிய ஆங்கிலத்தை நம் நாட்டு மொழிகளுள் ஒன்ருக ஏற்றுக் கொள்ளுவதில் என்ன தடையிருக்க முடியும்? நம்மை அடிமைப் படுத்தியிருந்த ஆங்கிலேயர்கள் பேசும்மொழி ஆயிற்றே அஃது என்பதற்காக ஆங்கிலத்தை அயல்மொழி என்று ஒதுக்கி விடலாமா? உலகத் தொடர்பு கொள்வதற்கும் இம்மொழி போதுமானது.

இரண்டு நூற்ருண்டுகட்கு முன் தான் இம்மொழி இந் நாட்டிற்கு வந்ததாக இருப்பதனுலேயே இது நம் நாட்டு மொழியாக ஆவதற்குத் தடையாக இருக்க முடியாது. நம் நாட்டில் இன்று வழங்கும் பல மொழிகளும் அயல்நாடுகளி லிருந்து வந்தனவேயாகும். வரலாறு இதற்குச் சான்று பகரும். ஆங்கிலம் இங்கு புகுந்ததற்குச் சில பல ஆண்டுகளுக்கு

முன்பு அம்மொழிகள் இந்நாட்டில் புகுந்தனவாக இருக்கும். அவை நம் நாட்டு மொழிகள் ஆகும்போது ஆங்கிலம் மட்டும் ஏன் நம் நாட்டு மொழியாகக் கருதப்பெறக் கூடாது?

எனவே, ஆங்கிலத்தைப் புறப்பயன்பாட்டுக்கும் அந்தந்த மாநிலத்தின் மொழியை அந்தந்த மாநிலத்தின் அகப்பயன் பாட்டுக்கும் வைத்துக் கொள்வதே பொருத்தமாகும். இதை யுணராமல் நாட்டின் ஒரு பகுதியினர் பேசும் ஒரு மொழியை— இந்தியை — மற்றப்பகுதியினர்மீது சுமத்தும் வன்முறையை ஒழித்து விட்டு நம்நாட்டுக்கு மாநிலமொழியும் ஆங்கிலமுமாகிய இரண்டு மொழிகளே சாலும் என்று முடிவு செய்து, 1968 சனவரித் திங்கள் 23ஆம் நாளில் தமிழகச் சட்டப் பேரவையில் நம் மதிப்புக்குப் பெரிதும் உரிய மாண்புமிகு முதல் அமைச்சர் திரு. அண்ணு அவர்கள் முன் நின்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருப்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க முடிபாகும். மைய அரசு ஒருமைப்பாட்டை விளைவிக்கும் உண்மை நிலையை உணரும் நாள் என்ருவது வரவேண்டும் என்று விரும்பி எதிர் நோக்கி யிருப்போமாக!

நமது மாநிலத்திலே நம் அன்னை மொழி அரியணையில் வீற்றிருந்து எல்லாத் துறைகளிலும் எல்லாச் செயல்களுக்கும் பயன்படுத்தப்பெற்று அரசாட்சி புரிவதில் நாம் எல்லாரும் ஒருங்கிணைந்து பணிபுரிவோமாக!

தாய்மொழியைப் பாதுகாத்தல்

நாகரிகமுடைய மக்கள் தமது மொழியை நன்கு பாதுகாத்து வளர்த்தலிற் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டுமென்பது சொல்லாமலே நன்கு விளங்கும். மக்களின் முயற்சியால் ஒரு மொழியானது உரம்பெற்று உயிர்ப்புடையதாய் வழங்குதல் போலவே திருந்திய மொழி வழங்கினுலும் அம்மக்கள் உரம் பெற்று உயிர்ப்புடன் நடைபெறுவர். வலிமையிற் சிறந்த ஒருவனையும், அறிவில் மிக்க மற்ருெருவனையும், நல்லியற்கை வாய்ந்த வேருெருவனையும், அவனவன் சொற்களினுலேயே நாம் அறிந்து கொள்ளலாம். அங்ஙனமே வலிமை இல்லாத ஒருவனையும் அறிவு குறைந்த மற்ருெருவனையும், தீயோனுன வேருெருவனையும் அவனவன் சொற்களினுலேயே அறிந்து கொள்ளலாம்.

—மறைமலையடிகள்

(மறைமலையடிகளார் உரைமணிக்கோவை, பக். 61)

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(சிலம்பு ௭௪, பரல் ௧௧ சடுகூ ஆம் பக்கத் தொடர்ச்சி)

6. டர்பான் வரவேற்பு

விண்வெளியைத் துருவி வீறிட்டுப் பறக்கிறது விமானம். விமானப்பெண் பிஸ்கோத்தும், பழச்சாறும் எனக்காகத் தருகிருள். மற்றவர்களுக்குத் தேநீர்; அதற்குள் சாராயம் வேண்டுவோர் பணந் தந்து குடிக்கின்றனர். விமானத்தில் தென்னுப்பிரிக்க வகுப்பினரின் நடை யுடை பாவனை பண்பாடு களைக் கவனித்தேன். நேடால் மலரில் செய்திகளை அறிந்தேன். நான் வரும் செய்தியும் இருந்தது. மேக மண்டலத்திற்கு மேலே விமானம் செல்லும்போது, கீழே பார்த்தேன். நல்ல மஞ்சள் வெயில் பரவி வழியில் அங்குமிங்கும் திட்டும் திடலும் குன்றும் குவையும் கண்டேன். பண்டைக் குடிகளான பண்டுக் களின் வட்டக் குடில்கள் ஆங்காங்கு குடைக்கும்பல் போலத் தெரிந்தன. எங்கும் கரும்புப்பச்சை.........கடல் வருகிறது; டர்பான் நகரம் நிவந்து நிற்கிறது; குன்றுகள்மேல் அடுக்கு மாளிகைகளும் கடற்கரைகளில் வானளாவிய உண்ணகங்களும் (Hotels)தெரிகின்றன.'மாலை மயங்குகிறது; மேலே நாண்மீன்கள் மினுக்குகின்றன; கீழே மின்விளக்குகள் அணியணியாகப் பளிச்சிடுகின்றன; சரவிளக்குகள் எரிகின்றன. டர்பானில் இறங்குகிருேம்..........ஆம்ஓம்....டடடட்டர்....டட்.

கூட்டம், கூட்டம்:

விமானம் இறங்கி ஓடுகிறது. விமான நிலையத்தில் ஏராள மான கூட்டம். செய்தியர் (Reporters) படக்கருவியுடன் நிற்கின்றனர். சுமார் இரண்டாயிரம் மக்களுக்கிடையே....... சிவநாமம் முழங்கச் சென்றதும் ...மாலைகள் குவிந்தன. சைவ சித்தாந்த சங்கத் தலைவர் சுவாமி சிவானந்த நாவலர் சிறப்பாக வரவேற்றுர். "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" என்ற சேக்கிழார் விருத்தம் பண்ணுடன் முழங்குகிறது. செய்தியர் படம் பிடித்ததும் கேள்வி கேட்டனர். ஆங்கிலத்திற் சொன்ன தைத் தமிழில் தருகிறேன்: முதலில் இந்தப் பாட்டு.

இன்பமே சூழ்கவே எல்லாரும் வாழ்கவே
அன்புச் சிவனருளால்

எங்கும் சிவமயம் எல்லாம் சிவசக்தி
எல்லாரும் ஓர்குலமே
ஓம் சுத்த சிவசக்தி ஓ! சுத்த சிவசக்தி
ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம்

எல்லாரும் இவ்வாறு குரலிணைந்து முழக்கியபிறகு சில வினாடிகள் மௌனத் தியானம்—பிறகு பேச்சு.

மனித சமுதாயம் ஒன்றே:

"நம்மை இங்கே சேர்த்து வைத்த கடவுளுக்கு வணக்கம். டர்பானுக்கும் சென்னைக்கும் இடையே ஒரே இந்துக்கடல் விரிந்துள்ளது. இந்துக் கடலின் அந்தக் கரையிலிருந்து இந்தக் கரைக்குப் பறந்து வந்துள்ளேன். காந்தியடிகள் வாழ்ந்த டர்பான் எனக்குத் திருத்தலமாகும். நாமெல்லாம் ஒருகுலத் தமிழர், ஓரின இந்தியர், ஒருலக மக்கள், எல்லாரும் ஆன்மநேயர். எல்லாரும் உலகான்ம வுறுப்பினர். (All are members of the cosmic soul hood) சீவனிற் சிவமயத்தை எழுப்பவே நாம் இங்கே கூடியிருக்கிறோம். மூன்று மாதங்கள் இந்த அழகான நாட்டில் முப்பொருளுண்மையை எப்போதும் கருதியின்புறுவோமாக....

மனித சமுதாயம் ஒன்றே—அதன்
மன்னவனை மனச்சாட்சி ஒன்றே
இனிய வுலகமும் ஒன்றே—உல
கெங்கும் விளங்கும் இறைவனும் ஒன்றே
எல்லாரும் இன்புற வாரீர்—நாம்
எல்லாரும் எல்லாரும் இன்புற வாழ்வோம்.

ஓம்! ஓம்! ஓம்!

இதழறிக்கை:

என் வருகையும் வரலாறும் வானொலித்தன. இதழ்க ளெல்லாம் என் படம் போட்டு வரலாற்றுக் குறிப்பும் சுற்றுலா விளக்கமும் எழுதின. ஒன்றை இங்கே தருகிறேன்:

YOGI JETS INTO TOWN

Maharshi Shuddhananda Bharati is a modern mystic in whom the spiritual culture of the East finds a congenial synthesis with scientific intellectualism of the West. He has a first-hand knowledge of both Eastern and Western systems

of philosophy, mysticism and religion. He has, at different times of his life, been a practising Christian, Muslim, Jain and Buddhist despite the fact that he was born and brought up as a Hindu.

He is acknowledged in India as the greatest living Tamil poet. He enriched his ideas by reading many of the world's finest poetic works. He is a linguist, a novelist, a dramatist and the author of a thousand books in Tamil, English, Hindi, Telugu, French and Sanskrit.

He has been an educationist, a journalist and editor of eight journals. He was a dynamic politician, working for the independence of India, and an ardent social reformer. Mahatma Gandhi appointed him to do rural reconstruction work and called him "a saint free like the soul and a Silent Helper of Humanity like the Sun".

He is an inspired orator and has been the recipient of many awards including a peace award which he received in Russia.

He has dedicated his whole life to experiments in Yoga. He lived on uncooked food for 50 years, fasted for days together and observed silence for 25 years. The title "Maharshi" indicates his perfection in Yoga, his mastery of meditation.

He is on the Medical Council of India; he has studied naturopathy (curing by natural remedies without recourse to drugs) and written several books on the subject.

He maintains himself by writing, all the proceeds from which are used for social services, especially his Yoga Samaj which, apart from propagating Yoga, treats patients and helps students.

He has been on three world tours but this his first visit to Southern Africa. His purpose is to teach Yoga and to lecture on, and discuss philosophy, mysticism and religion.

He stipulated as a condition for his visit that the public should not be charged for his work and added that he

expected no remuneration from his sponsors, a long established local Indian Yoga association known as the Saiva Sithantha Sangum.

He is seventy seven years young.

He will deliver a lecture on a topic of his choice in the Union Hall on Thursday 12th October, 1972 at 8 p.m.

இதன் சுருக்கம் :

மகரிஷி சுத்தானந்த பாரதியார் பழைமையும் புதுமையும் கிழக்கும் மேற்கும் சேர்ந்த விஞ்ஞானயோகி, பன்மொழிப்புலவர், சிறந்த கவிஞர், நாவலர், ஆயிரம் நூல்களுக்கு ஆசிரியர், எட்டு இதழ்கள் நடத்தியவர் ; நாட்டு விடுதலை வீரர், காந்தியடிகள் "கதிரவன்போல மௌனமாக, ஆன்மாவைப் போலச் சுதந்திர மாக உலகத்தொண்டு செய்யும் உத்தமர்" என்று இவரைப் போற்றினர். அவர் வாழ்வெல்லாம் தியாக வேள்வி. அவர் இயற்கை வழியில் இன்பங் கண்ட யோகி. 25 ஆண்டுகள் மௌனம் வகித்து உள்ளனுபவங்களை உலகிற்கு நூல்களாகத் தந்தார் ; மூன்று முறை உலக நாடுகளைச் சுற்றிச் சமயோக முழக்கம் செய்தவர். அவர் எப்பயனையும் எதிர்பாராமல் வான் மழைபோல மக்கள் பணி பரவுகிறார். எழுபத்தேழு வயது வாலிபர்.

நாட்கடன் நன்று நடந்தது :

சிவானந்தர் வீட்டிலேயே ஒரு தனிப்பகுதியில் நான் மிக வசதியாகத் தியானித்தேன், எழுதினேன். அங்கேயே குளிப் பறை யிருந்ததால் மூன்று வேளை குளிப்பது நடராச வழிபாடு நடத்துவது தியானிப்பது. காலை ஒன்பது முதல் பத்து வரையில் மாலை ஐந்து முதல் ஆறு வரையில் அன்பரைக் காண்பது. அவரவர் வேண்டுவதை எழுதித் தந்தால் அடியில் விடை எழுதி ஆறுதல் கூறுவது. நோயாளிகளுக்கு யோகமுறை அல்லது மூலிகை முறையில் மருந்து அளிப்பது வழக்கம். ஆன்மிகப் பயிற்சி வேண்டுவோர்க்கு உடனுடன் சாதன முறைகளைக் காட்டிப் படம் பிடித்துக் கொள்ளச் செய்வதுண்டு. நாட்டின் நல்லறிஞர் பலர் குறித்த நேரத்தில் வந்து உறவாடி, உரை யாடிச் செல்வர். காலை வழிபாடு முடிந்ததும், எட்டு மணிக்குப் பால், பழம், கடலை உணவு ; மாலை ஆறுமணிக்குக் கஞ்சி, கனி, கடலை உணவு. மற்ற நேரமெல்லாம் தியானம், படிப்பு, எழுத்து

இந்தமாதிரியே காலத்தை யோகக் கலையாக்குவது எனது கட்டுப்பாடான கடமையாகும். நல்ல பணிகளே கருமயோகம்; நடராச வழிபாடு பக்தியோகம்; நன்னூல் படிப்பதும் தியானிப்பதும் ஞானயோகம், யோகப் பயிற்சி காட்டுவது அட—ராசயோகம்; மனவேறுபாடின்றி மக்களுடன் இனிது பழகுவதே சமயோகம். எதிலும் அளவும் அமைவும் உண்டு. எனக்கென ஒரு கார்—தயார்; என் உலாக்களைப் படம்பிடிக்கப் படச்சுருட் கருவி ஆயத்தம்; என் பேச்சையும் பாட்டையும் பதிவு செய்ய உயர்ந்த சோனி—சுக்காய் பதிவுப்பொறி இதோ...அனைத்திலும் மேலாக எனக்கு மிகமிக அருமையான அன்பர் வாய்த்ததே ஆண்டவன் அருள் எனலாகும். என்னை அறிவார் இன்றித் தமிழகத்தில் எத்தனையோ இடர்ப்பட்டேன். என்னை அறிந்து மகிழும் நல்ல அன்பர்களை ஆப்பிரிக்காவிற் கண்டேன். என் பாடல்கள் அங்கே பரவியுள்ளன. வானொலியில் என் பாடல்கள் வருகின்றன; என் நூல்களும் பரவியுள்ளன. நான் அங்கே வருமுன்பே ஆண்டவன் எல்லாம் ஆயத்தம் செய்து வைத்தது போல் இருந்தது.

டர்பான் பெருமக்கள் வரவேற்பு:

12-10-72 என் வாழ்வின் பொன்னாள். மாபெரும் டர்பான் நகர மாளிகையில் நெருங்கிய கூட்டம்; மாடி மேலெல்லாம் மக்கள் கூட்டம். நாடெங்குமிருந்து அறிஞரும், கலைஞரும், அன்பரும் வந்து குழுமியுள்ளனர். என் பாடல்கள் முழங்குகின்றன; மலர் மாரி பொழிகிறது; அலங்கார மேடைக்கு என்னை அழைத்துச் செல்கின்றனர். மேடையில் வீற்றிருந்தவருள் சிலரை நேயர் அறிக: இவர்கள் மிக மிக அரிய அன்பறிவுச் செல்வர்.

(1) சுவாமி சிவானந்த நாவலர்—சைவ சித்தாந்த சங்க குருநாதர். (2) அருணாசலம்—சங்கச் செயலர். (3) பிரமானந்தர் சங்கச்சிங்கம், அற்புதத் தொண்டர். (4) கவண்டர்—சங்கத் தலைவர். (5) J. N. ரெட்டி—கப்பல் வணிகர், பாங்குத் தலைவர். (6) டாக்டர் பி. எம். நாயுடு—சிறந்த அறிஞர், இந்தியக் குழுத் தலைவர். (7) சுவாமி சகசானந்தர், தெய்வநெறிக் கழகர், கருமயோகி. (8) இராம கிருஷ்ணமடத் தலைவர் சுவாமி சிவானந்தர். (9) பூலாபாய்—குசராத்தி வணிகச் செல்வர். (10) பொப்பி நாயுடு, செயலட்சுமி கலைச்செல்வர். (11) V. M. ரெட்டியார். (12) குயில் மாணிக்கம். (13) டாக்டர் சைமன். (14) பிரான்ஸிஸ்கோ. (15) ஆந்தனி. (16) ஓம்தேவி. (17) தார்மா ஆர்மான். (18) யோகினி ரேணுகா. (19) வள்ளல்

வடிவேலு பத்தர். (20) ஆரிய சமாஜ முதல்வர். (21) குஜராத்தி சங்க முதல்வர். (22) டாக்டர் தீனதயாளு. (23) S. V. ஐயர். (24) பாயின்டன்.

தேவார முழக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. டாக்டர் பி. எம். நாயுடு வரவேற்ருர். திரு. கவண்டர், J. N. ரெட்டி முதலியோர் புகழுரைத்தனர். நான் ஒரு மணி நேரம் ஆங்கிலத்தில் "One God, One World, and One Humanity" (ஒரே கடவுள், ஒரே உலகம், ஒரே ஆன்ம நேயர் நாம்) என்ற பொருள் பற்றிப் பேசினேன். அதன் சுருக்கம்:

சேரவாரும் செகத்தீரே:

"மெய்யன்பர்களே, உங்கள் அன்பு சொற்கடந்தது; இம்மன்றில் பல இனத்தினர் கூடி ஒரே மனத்தராய் அமைதியாகப் பழகுகிறீர்கள். இதே ஒருமைப்பாடு உலக வாழ்விலும் இருந்தால், எங்கும் அன்பும் அமைதியும் நிலவும். புதுப்புது ஊர்களில். புதுப்புது மாந்தரைக் கண்டு அவர் உள்ளங்களுடன் கூடிக் குழைய என்னுள்ளம் துள்ளுகிறது. "ஒன்றே உலகம், ஒருவனே தேவன், சேரவாரும் செகத்தீரே" என்று தமிழக முனிவர் நம்மை அழைக்கின்றனர். சாதி மதங்களுக்கு அப்பால் அருட்சோதியிற் கலந்து வாழ இராமலிங்க வள்ளலார் கூவியழைக்கிருர். மானிட வாழ்க்கை உயிர்க்கும் உலகநூல் அதில் எல்லாச் சமயங்களும், யோகங்களும், அறிஞர் அனுபவங்களும் பக்கங்களும் பகுதிகளும் ஆகும். உலக வாழ்வு ஒரு நூலகம்; அதில் அவரவர்க்கு விருப்பமான நூலே அமைதியாக ஓதிப் பயன் பெற உரிமையுண்டு; ஓர் இசையரங்கில் பாடகன், பிடிலன், முழவன், சுதியன், தாளன் அனைவரும் அவரவர் பணியை ஆர்வமுடன் செய்தால், இசைவிருந்து இனிக்கும். அது போலவே அவரவர்க்கு இயல்பான கடமையைக் காத்து, அனைவரும் ஒரே குடும்பமாக வாழ்ந்தால், மனித சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வின் இடர்கள் விலகும். ஒரு போர்களத்தில் ஒவ்வொரு வீரனும் அவனவன் கடமையைச் செய்தாலே வெற்றி விளங்கும். தலைவன் கட்டளையை அனைவரும் பின்பற்றி, முன்சென்று கடமை காத்தால் வெற்றியும் புகழும் எய்தும். சீவனுக்குத் தலைவன் சிவபெருமான். அவன் இமைப்பொழுதும் நீங்காது நெஞ்சில் நிலவுகிருன். அவனே மனச்சாட்சியாகப் பேசுகிருன். மனச்சாட்சி மகிழ நடப்பதே நன்மை; அதற்கு முரணாக நடப்பதே தீமை.

மன்னு மனச்சாட்சி மன்னவன்சொல் என்னவென
உன்னி நடத்தல் உயர்வு.

போதுகாட்டி புகலுகிறது :

பாருங்கள்! நாம் வாழும் உலகம் ஒன்று, மேலே வானம் ஒன்று, உயிர்க்கும் காற்று ஒன்று, ஒளிரும் கதிரவன் ஒன்று, உயிர்த்துடிப்பு ஒன்று, வடக்குத் தெற்கு, கிழக்கு மேற்கு எல்லாம் வட்ட வானில் ஒன்று. இந்த ஒருமையில் உளங்கொண்டு ஒரே ஆன்ம நேயக் குழுவாக நாம் வாழ்வோம். இனமயக்கம் மனமயக்கமே.

இந்தப் போதுகாட்டியைப் பாருங்கள் (கடிகாரம்). இதில் இரு முள்கள் எண்களைக் குறித்துச் சுற்றும்; அவை சுற்ற உள்ளே சக்கரங்கள், அவை சுற்ற இன்னும் உள்ளே நுண்வில் (Air spring) உள்ளது. இவ்வளவும் இருந்தாலும் முள் ஓடாது. ஒருவர் விசை—முடுக்க (கீ தர) வேண்டும். அந்த முடுக்குத் திறனுல் போதுகாட்டி அசைந்து மணி காட்டுகிறது. அது போல நமது பருவுடலுக்குள், நுண் மனம் உள்ளது; அதற்குள் உள்ளம் உள்ளது; உள்ளத்தில் பட் பட் என்றொரு சத்தி நடனமாடுகிறது. இந்த உள்ளாட்டத்தால் உடலாடுகிறது.

உலகில் உயிரான்மா உலாவுகிறது. இம்மணிக் கருவியை *Watch* (வாட்ச்) என்பர். அதிலும் ஐந்தெழுத்துள்ளன—அவற்றை அறிந்தால் அறநெறி புலனுகும். சிந்திப்போம்:

(1) *W=Watch your word*—சொல்லுக சொல்லிற் பயனுடைய.

(2) *A=Watch your action*—வினைத்திட்பமும் நற்செயலும் பூண்க.

(3) *T=Watch your thought*—உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல் உள்ளத் தனையது உயர்வு.

(4) *C=Watch your character*—நன்னடை பேணுக ஒழுக்கம் உயிரினும் நன்று.

(5) *H=Watch your heart*—உள்ளப் பொருளை உணர்க.

உந்து வண்டியில் சித்தாந்தம் :

இந்த மணிக்கருவி நமக்கு வழி காட்டுகிறது. இதேபோல் சமய வாழ்விலும் ஐந்தெழுத்துண்டு—நம: சிவாய—சிவனுக்கு வணக்கம்: சீவன் மனமாசகன்று சிவக்கலப்புற வாழ வேண்டும். சிவம் என்பது இன்பப் பொருள்—எப்போதும் இனியானை என் மனத்துள் வைத்தேனே—உள்ளமே. "உள்ளத்தின் உள்ளே

யுள்ள கருவே'' என்கிறார் அப்பர். அதுவே சீவனுட் சிவமாகும். சிவம் போனால் சவம். சிவனிருந்தாலே சீவன்.

இந்த நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் அப்பனுக்கு ஓர் உந்துவண்டி (கார்) பிள்ளைக்கொரு வண்டியுண்டு. ஊரெல்லாம் உந்து வண்டி; உந்து வண்டி என்பது நான்கு உருளைகளைக் கொண்டது. (அறம் பொருள் இன்பம் வீடு). அதன் மின் பொறி (டயனமோ) உள்ளம் போலும்; அதற்கு வார்க்கும் பெட்ரோல் மூச்சுப் போலும். அதன் விசையைத் திருகி ஒட்டுவோன் சீவன் போலும்; அவனுக்குப் பின்னே அமர்ந்து ஆணையிடும் முதல்வன் சிவன் போலும்—இத்தனையும் இணைந்தே வண்டி ஓடுகிறது—மனித சமுதாயமான உந்து வண்டியை ஆண்டவன் கட்டளைப்படி நல்ல வழியிற் செலுத்தி வீடு சேர்க்க நாயன்மார், ஆழ்வார், அருள் முனிவர் பலர் வந்தனர். அவர்களைச் சுற்றி மதக்கோட்டைகள் எழுந்து நிற்கின்றன. எல்லாக் கோட்டைகளுக்கும் அரசன் ஆண்டவனே. ஒருமையுடன் சீவர் சிவக்கலப்புடன், ஆன்மா இறைக்கலப்புடன் வாழ்வதே சமயோகம்.

எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா வுடலும் இறைவன் ஆலயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்
எல்லார் வாழ்வும் இறைவன் யோகமே.

இதுவே சித்தாந்த முழக்கம் — இதுவே சமயக்கருத்து — அன்பின் வழியது உயிர்நிலை வான்மழை பொழிக!—மலிவளம் சுரக்க—நல்லர சோங்குக, ஞாலம் வாழ்க !

இதழ்கள் போற்றின :

இக் கூட்டம் பற்றிப் பல இதழ்கள் போற்றி எழுதின. ஓர் இதழ்க்குறிப்பைக் காண்க.

''எல்லா இனத்தவரும் நெருங்கிய டர்பான் மாளிகையில் 77-வயது சான்ற முனிவர் சுத்தானந்தர் ஒருமை முழக்கம் செய்தார். இந்த மாளிகையில் பல வகுப்பினர் இணைந்திருப்பதுபோல் உலகிலும் எல்லாரும் இணைந்து வாழலாம். உள்ளத்தில் உண்மை, மனதில் அன்பு, வாழ்வில் ஒப்புரவு, தாளாண்மை, வேளாண்மை யுண்டானால் அவரவர் கடமை செய்து வாழலாம். இந்த அணுயுகத்தில் போர் மேகங்கள் குமுறுகின்றன. ஒரு பொறி தெறித்தால் உலகம் சுடுகாடாகும். மக்கள் மனம்

மாற வேண்டும். சீவர் சிவமயத்தில் மாறிப் பிறக்க வேண்டும்''.

THE GRAPHIC

Kavi Yogi Shuddanandha Bharati, India's leading Tamil poet and scientist, *jetted* into Durban this week with a message of love.

The 77-year-old yogi told a capacity *multi-racial crowd* at the Durban City Hall on Monday evening that although the world had people of many races and religions they were all united together by the common bond of humanity.

"If people realise this than all of us can live amicably. The basic teachings of the religions of the world are truth, love and service to mankind. Let us unite and achieve this unity for the people of the world," he said.

Speaking in English, he said that while science had contributed a great deal to mankind, it had also created things which endangered the very existence of man.

"We know of world tension and the moves of China, Russia and America.

"A spark in their international fueds can well cause a hell fire," the yogi warned.

He said that unless there was a revolution of the human heart, there was very little hope of improving the present world situation.

Quoting several great scientists, scholars and saints, he said that "the seat of life was love alone."

He urged the crowd to look to God for guidance.

13—10—72

காந்தி நிலையம்:

மறுநாள் நாங்கள் ஊரைச்சுற்றி அன்பர் பலரைக் கண்டு காந்தி நிலையம் சென்றோம். அங்கே காந்தியின் நாட்டுப் பெண், மணிலால்காந்தியின் மனைவி, சுசீலா அம்மையார் வர

வேற்றூர். காந்தியின் வரலாறு முழுதும் படமாகக் கண்டோம். காந்தியைப் பற்றிய நூற்குழாங்கள் அடுக்கடுக்காகப் பல மொழிகளில் உள்ளன. காந்தி நடத்திய *Indian Opinion* இரண்டு பேழை நிரம்ப இருந்தன. காந்தி அதை அச்சிட்ட அச்சுப் பொறிகள் இரண்டின் அருகே படம் பிடித்துக் கொண்டோம். சுசீலாவின் மாப்பிள்ளை (இராம கோவிந்தர்) சுற்றிக் காட்டினார். ஏராளமான குசராத்திகள் அங்கிருந்தமையால் அரைமணி நேரம் இந்தியில் ''**நான் கண்ட காந்தி**'' என்பது பற்றிப் பேசினேன்—தமிழில் காந்தித் தாத்தா பாட்டுப் பாடினேன். பழச்சாறு பருகி விடை பெற்றோம். காந்தி நிலையம் ஒரு குழுவின் ஆட்சியில் உள்ளது. அந்தக் குழுவினர் ''**காந்தீயம்**'' பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு செய்ய ஏற்பாடு செய்தனர். காந்தி மன்றத்தில் (*Gandhi Hall*) இச் சொற்பொழிவு மாலையில் நடந்தது. உளமெல்லாம் அன்பு; ஊரெல்லாம் ஆர்வமாக நாள்கள் பறந்தோடின—இனிச் சிறிது நேட்டாலைச் சுற்றிப் பார்த்து நேட்டால் பல்கலைக் கழகத்திற்கு வருவோம்.

(தொடரும்)

மகாத்மா நீ வாழ்க!

*உண்மையின் உரிமை காட்ட உலகினுக் கொருவன் ஆனாய்;
திண்மன உறுதி யாலே தியாகத்தீக் குளித்து நாங்கள்
கண்மனங் களிக்க நாட்டின் கட்டுகள் அவிழ்த்தாய் எங்கள்
புண்மனம் புழுங்கு தையா! காந்திநீ போக லாமோ?*

*தந்தைதாய் இறந்திட் டாலும் தரணியை இழந்திட் டாலும்,
சொந்தநல் லுயிர்போ னாலும் துயர்ப்பட மாட்டோம் ஐயா!
இந்திய நாட்டைக் காத்த இணையிலாக் கருணை வாழ்வே!
இந்தியப் பதகன் சுட்டான்! இதயமும் வெடிக்கு தையா!*

*மறங்கொண்ட மிருக சக்தி வாட்டிடும் உலகைக் காக்கத்
திறங்கொண்ட தெய்வ சக்தி தேர்ந்தெதிர் பகைக்கு லத்தைப்
புறங்கண்டு, பொய்யி லாத பொதுநலம் பொலிய வேநல்
அறங்கண்ட வடிவ மானாய்! அமரநீ வாழ்க! வாழ்க!!*

*மன்னுயி ரெல்லாம் வாழ, மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தாய்! புத்த தருமமே உருவெ டுத்தாய்;
கன்னத்தில் அடித்த வர்க்கும் கருணைசெய் கிறிஸ்து போன்றாய்!
மண்ணுல கெல்லாம் போற்ற மகாத்மாநீ வாழ்க! வாழ்க!!*

—யோகி சுத்தானந்த பாரதியார்
(உரிமையின் பரிசு, பக். 163

தமிழிலக்கியத்தில் மகண்மா

(Slender Loris)

[பி. எல் சாமி, பி.எஸ்ஸி.,]

மகண்மா என்ருேர் உயிரைப்பற்றித் தமிழ் நூல்களில் சில செய்திகள் காணப்படுகின்றன. மா என்பதால் இஃது ஒரு விலங்கு வகையைச் சேர்ந்தது என்பது தெரிகின்றது. இந்த விலங்கு எது என்பதைப் பிற்கால உரையாசிரியர்களும் விளக்க வில்லை. இந்த விலங்கைப்பற்றித் தமிழிலக்கியத்தில் முதலில் சிந்தாமணியில் செய்தி வருகின்றது.

''மைந்தரைப் பார்ப்பன மாமகண் மாக்குழாம்
சந்தன மேய்வன தவழ்மதக் களிற்றினம்
அந்தழைக் காடெலாந் திளைப்பவா மானினம்
சிந்தவால் வெடிப்பன சிங்கமெங் கும்முள''

—சீவகசிந்தாமணி-1902.

மகண்மாக் கூட்டம் மைந்தரைப் பார்ப்பதைக் குறிப்பாகக் கூறியிருப்பதைக் காணலாம். நீலகேசிக்கு சமயதிவாகரர் எழுதிய உரையில் இந்த மகண்மாவைப்பற்றி ஒரு செய்தி காணப்படுகின்றது. 776ஆம் பாடலுக்கு உரையெழுதுங்கால் 'நிறமும் தன் வயப்படுத்தலும் வற்கெனவு முதலாகிய கூட்டுத் தன்மையினல் நிலையுதற்றன்மையும், இங்ஙனமே மானிட விலங்கு, மகண்மா, கோழிப்பாம்பு முதலாயினவும் சொல்லிக் கொள்க' என்று கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். தணிகைப்புராணம் பிற்காலத்திய நூலாயினும் பழைய இலக்கிய மரபை ஒட்டி மரங்கள் விலங்குகள்பற்றிப் பல உண்மைச் செய்திகளைக் கூறியுள்ளது.

''ஆணடி நிழலோம்பி யமர்துயின் மகண்மாவை
ஏணமர் வரைச்சிறுவ ரெயிற்றிய ரெனவண்மிக்
காணுநர் காளுன்இற் கன்னிய ரெனவியவாப்
பூணுறு பாசத்தாற் பூட்டினர் போதருவார்''

—தணிகைப். வீராட்-68.

ஆணென்னும் மரத்தின் நிழலால் பாதுகாக்கப்பெற்று உறங்குகின்ற மகண்மாவை மலையில் வாழும் வேட்டுவச்சிருர்கள் நான்கு கால்களையுடைய வேடப்பெண்களெனக் கருதி வியந்து கயிற்றினுற் கட்டிக்கொண்டு போயினர் என்று தணிகைப் புராணம் கூறியுள்ளது. மகண்மா பெண்முகம்போல அமைந்த

ஒருவகை விலங்கு என்று விளக்கம் கூறப்பட்டுள்ளது. பிற்கால நூலாகிய காஞ்சிப்புராணமும் ''மகண்மா மாக்கள், அம்பொனு லாயத் தூணிஞன் பாவையை யாடவரென...........நோக்கி'' (நகரேற்று-86) என்று கூறியுள்ளது. தமிழ் நூல்களில் மகண் மாவைப்பற்றிக் கூறிய செய்திகளிலிருந்து மகண்மா வென்பது இயற்கையில் வாழும் எந்த விலங்கு என்று கண்டறிய முடியும்? விலங்கு நூலறிவோடு இச் செய்திகளை ஆராய்ந்தால் மகண்மா வென்பது தமிழ்நாட்டுக் காடுகளில் வாழும் ஒருவகை விலங்கே என்பது தெளிவாகும்.

மகண்மா களிறு வாழும் காடுகளில் கூட்டமாகக் காணப் படும் என்று சிந்தாமணி கூறியுள்ளது. இதன் பார்வையில் ஒரு தனித்தன்மையிருந்ததால் ''மைந்தரைப் பார்ப்பன மகண் மாக்குழாம்'' என்று சீவகசிந்தாமணி கூறிற்று. நீலகேசி உரையில் மகண்மாவிற்கு நிறமும் தன்வயப்படுத்தலும் வற்கெனவு முதலாகிய கூட்டுத் தன்மையிருப்பதாகக் கூறப் பட்டுள்ளது. ஆதலின் மகண்மா நல்ல நிறமுடையது, தன் வயப்படுத்தும் சத்தியுடையது, அழகுடையது என்று நீலகேசி உரையாசிரியர் கருதினுர் என்பது விளங்குகின்றது. மகண்மா நிழலை விரும்பி அதையே பாதுகாப்பாகக் கொண்டு ஆண் மரத்தின் நிழலில் உறங்கியதாகவும் அதை நான்கு கால்களை யுடைய வேட்டுவப் பெண் என்று வியந்து வேட்டுவச்சிறுர் நூலால் கட்டிக்கொண்டு போனுர்கள் என்றும் தணிகைப் புராணம் கூறியுள்ளது. இந்தச் செய்திகளிலிருந்து மகண்மா எதுவென்பதை விலங்கு நூலறிவோடு ஆராய்ந்தால் இந்த மகண்மா தற்காலம் தேவாங்கு என்று வழங்கும் சிறு விலங்கே என்பதில் ஐயமில்லை. தேவாங்கு காட்டில் வாழும் விலங் காகும். மரக்கிளைகளில் கூட்டமாகக் காணப்படும். பகற் காலத்தில் மரக்கிளைகளின் நிழலில் உறங்கும். ஞாயிற்றின் ஒளியை, பகல் வெளிச்சத்தை இதன் கண்கள் தாங்கா. ஆனுல், இரவில் நன்கு விழித்துப் பார்க்கக் கூடியது. இரவிலே புழு, பூச்சிகளை வேட்டையாடும். இரவில் தேவாங்கு உற்றுப் பார்ப்பதையே சீவகசிந்தாமணி ''பார்ப்பன மாமகண்மாக் குழாம்'' என்று குறிப்பாகக் கூறியுள்ளது. இந்தச் செய்தி தேவாங்கிற்கு நன்கு பொருந்தும். இரவில் காடுகளில் மரக் கிளையிலிருந்து நன்கு பார்க்கக்கூடிய உயிர்கள் இரண்டே யுள்ளன என்று காட்டியல் அறிஞர்கள் கூறுவர். அவை ஆந்தையும் தேவாங்குமாகும். மகண்மா விலங்கு வகையைச் சேர்ந்தது என்பது தெரிவதால் சிந்தாமணி குறிப்பிட்டது தேவாங்கேயாகும். இரவுக் காலத்தில் காடுகளில் விழித்த

கண்களை மூடாது நெடுநேரம் உற்றுப்பார்க்கக் கூடிய விலங்கு தேவாங்கே என்று பாதுசா என்ற அறிஞர் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். (During the nocturnal virits in forests none are so steady and unflinking as those eyes of slender loris seldom seen..........Its bulging marble-like eyes will hypnotize anyone though his face looks like that of baby—Badshaw.)

இதிலிருந்து 'பார்ப்பன' என்று சிந்தாமணி சுட்டிக் கூறியதின் நுட்பமும் திட்பமும் நன்கு விளங்கும். தற்கால அறிஞர்கள் மகண்மாவின் கண்களுக்கு தன் வயப்படுத்தும் பார்வை இருப்பதாகக் கூறுவர். சமயதிவாகரர் மகண்மாவிற்குத் 'தன் வயப்படுத்தும் தன்மை' (hypnotic) உண்டு என்று கூறி யிருப்பது போற்றத்தக்கதாகும். சமயதிவாகரர் நீலகேசி உரையில் பல அறிவியற் செய்திகளைக் கூறியுள்ளார். ஆங்கிலத்தில் Hypnotic என்ற சொற்கு நேர் மொழி பெயர்ப்பு போன்று தன்வயப்படுத்தும் தன்மை என்ற சொற்றொடர் இருப்பதைக் கவனிக்க வேண்டும். தேவாங்கின் கண்களில் இருக்கும் தன்வயப்படுத்தும் தன்மையைக் கண்ட பாமர மக்கள் இந்த விலங்கிற்கு மந்திர சத்தி யிருப்பதாகக் கருதினர். சிலர் தேவாங்கைக் கூட்டில் வளர்த்து அதன்மேல் கயிற்றைச் சாத்தி அக்கயிற்றை நோயுற்ற குழந்தைகளுக்கு அணியச் சொல்லி விற்று வருகின்றனர். பெண்களுடைய முகம்போல இதன் முகம் இருப்பதாகத் தணிகைப்புராணம் கருதி நான்கு காலுடைய பெண்ணாக உவமித்தது. தேவாங்கின் முகம் மிகவும் மென்மையாகவும் கண்கள் பெரியவையாகவும் இருப்பதால் பெண்ணின் முகத்தோடு ஒப்பிட்டனர். இதன் காரணமாகவே தேவாங்கைப் பெண்ணாகக் கருதிப் 'பெண் விலங்கு' என்ற பொருளில் மகண்மா என்று பெயரிட்டனர். இதன் பெண் தன்மையைச் சுட்டிக் காட்டுவதற்காகவே மானிட விலங்குடன் சேர்த்துச் சமயதிவாகரர் நீலகேசி உரையில் கூறியுள்ளார். ஆண் மரத்தின் நிழலில் பெண் விலங்கான மகண்மா தூங்குவதாகத் தணிகைப்புராணம் முரண்பாடு நயம் தோன்றக் கூறியது. பெண் விலங்கானதால் மகண்மா மைந்தரைப் பார்ப்பதாகச் சிந்தாமணி கூறியது. உயிருடைய மகண்மா தூணில் செதுக்கிய உயிரற்ற ஆண் பாவையை ஆடவரென நோக்கின என்று காஞ்சிப்புராணமும் இந்த முரண்பாடு தோன்றக் கூறியது.

தேவாங்கைத் தமிழ் நாட்டில் சில காடுவாழ் மக்கள் 'காட்டுப்பாப்பா' என்றழைக்கின்றனர். தேவாங்கின் முகம்

குழந்தையின் முகம்போலிருப்பதால் அவ்வாறு அழைக்கின்றனர். கன்னடத்திலும் இப் பெயர் வழங்குகின்றது. ஆப்பிரிக்காவில் ஒரு வகைத் தேவாங்கைப் 'புதர்ப்பாப்பா' (Bush-baby) என்றழைக்கின்றதை இது சார்பாக எண்ணிப் பார்க்கலாம். கன்னட மொழியில் காட்டு மனுஷ்யன், அடவீமனுஷ்யன், மலைமனுஷ்யன் என்று அழைக்கின்றனர். சிங்கள மொழியில் சிங்கக்கூளி என்றழைக்கின்றனர். இதை ஒரு வகைக் கூளிப்பேய் என்று கருதுகின்றனர். மலையாளக் காடுகளில் குறவர்கள் தேவாங்கை 'அரமணைக்குட்டி' யென்று அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன்.

காஞ்சிப்புராணத்தில் பொன்னுலான தூணின் சூழ்நிலையில் மகண்மா கூறப்பட்டிருப்பதால் அரண்மனையில் இது வளர்க்கப்பட்டது தெரிகின்றது. அரசர்கள் அரண்மனையில் வளர்த்ததால் இதற்கு அரமணைக்குட்டி என்று பெயர் வந்தது. தேவாங்கைப்பற்றி வியப்பானதும் அரியதுமான ஒரு செய்தியை வடக்கு மலையாளத்தில் கேள்விப்பட்டேன். மலையாளத்தில் தேவாங்கை 'வடக்கு நோக்கி,' 'குட்டி சிராங்கு,' என்ற பெயர்களால் அழைக்கின்றனர். இதன் காரணத்தை ஆராய்ந்தபோது வியப்புக்குரிய விளக்கம் கிடைத்தது. அரேபிய மாலுமிகள் தேவாங்கைக் கப்பலில் திசை காட்டும் விலங்காகப் பயன்படுத்தினரென்று தெரிகின்றது. நடுக்கடலில் மழைக் காலத்திலும் ஞாயிறு தெரியாத நாள்களிலும் தேவாங்கு நோக்கும் திசையைக் கண்டு திசையை அறிந்தனர். கூட்டில் வளர்த்த தேவாங்கு ஞாயிறு இருக்கும் திசைக்கு எதிராக முகத்தை வைத்துக் கொள்ளுமாம். அதிலிருந்து ஞாயிறு எத்திசையில் உள்ளது என்று கண்டு கொள்வர். திசையைத் தெரிந்து கொள்வதற்குப் பிற்காலத்தில் மாலுமிகள் திசை காட்டிப் பொறியைப் (Mariner's Compass) பயன்படுத்தினர். இதை மலையாளத்தில் வடக்கு நோக்கி என்றழைத்தனர். திசை காட்டிப் பொறியில் காந்த ஊசி வடக்குத் திசையையே காட்டுமாதலால் இதை வடக்கு நோக்கி என்றழைத்தனர். அந்தத் திசை காட்டிப் பொறி போன்றே திசை காட்ட உதவியதால் தேவாங்கையும் 'வடக்கு நோக்கி' என்றழைத்தனரென்று தெரிகின்றது. 'சிராங்கு' என்ற பெயர் அரேபிய மொழியில் மாலுமி என்று பொருள் தரும். இந்தப் பெயர் தமிழிலும் மலையாளத்திலும் மாலுமியைக் குறித்து வழங்கியதுண்டு. திசையைக் காட்டியதால் தேவாங்கையும் 'குட்டி சிராங்கு' என்று மலையாளத்தில் அழைத்தனர்.

கேரளத்தின் தெற்குக் காடுகளில் தேவாங்கை 'நீற்றின் கூட்டுத் தேவாங்கு' என்று கூப்பிடுவதைக் கேட்டிருக்கின்றேன். காடுகளில் பெரிய இலைகளைத் தைத்துக் கூடு செய்து அதனுள் வாழும் சிவப்பு எறும்புகள் கேரளக் காடுகளில் நிறைய உண்டு. இந்த எறும்புகள் கடித்தால் மிகவும் கடுக்கும். கடித்த விடம் தடித்து வீங்கி விடும். நெருப்புப் போலச் சுரீர் என்று கடிக்கும். எறும்புகளின் முட்டைகளையே விரும்பி உண்பதால் நீற்றின் கூட்டுத் தேவாங்கு என்று அழைப்பதாக விளக்கம் கூறினர். தேவாங்கு எறும்புகளையும் எறும்பு முட்டைகளையும் விரும்பித் தின்னும். காட்டில் பந்து போல இலைகளைத் தைத்துக் கூடு கட்டும். எறும்புகளின் முட்டைகள் தேவாங்கிற்கு நிறையக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த எறும்பு பலா மரத்தின் இலைகளைச் சேர்த்துத் தைத்துக் கூடு கட்டுவதைக் கேரளத்தில் கண்டிருக்கின்றேன். இந்த எறும்புக் கூட்டை ஒரு நற்றிணைப் பாடல் கூறியுள்ளது வியப்பிற்கிடமானது.

"பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலிற் செந்நெல்
விரவுவெள் ளரிசியில் தாஅம் ஊரன்" —நற்றிணை-180.

"பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை" —ஐங்குறுநூறு-99.

கழனியில் இருந்த பலா மரத்தில் முயிறு என்ற ஒரு வகை எறும்புகள் கட்டிய கூட்டில் நாரை உட்கார்ந்து தள்ளுவதால் வெள்ளையான அரிசி போன்று எறும்பு முட்டைகள் சிந்திப் பரவின என்று நற்றிணை கூறியுள்ளது. பலா மரத்தில் இந்த எறும்புகள் கூடு கட்டுவதை இன்றும் மலையாள நாட்டில் காணலாம். முயிறு என்பது ஒருவகை எறும்பு என்று கூறியுள்ளனர். இந்த எறும்பே எறும்பு வகைகளில் இலைக்கூடு கட்ட வல்லது. இந்த எறும்புக் கூடுகள் நிறைய இருந்ததால் கொடுங்களூர் என்று அழைக்கப்படும் முசிறி 'முயிறிக்கோடு' என்று தெரேசாப்பள்ளிச் செப்பேட்டில் அழைக்கப்பட்டது. முயிறு, முசுறு என்ற சொற்கள் இந்தச் சிவப்பு எறும்பையே குறிக்கும். முயிறு நிறைந்த ஊர் முயிறி என்றும் முசிறி என்றும் அழைக்கப் பட்டது. தேவாங்கு முயிறி இன எறும்பின் முட்டைகளை விரும்பி உண்பது போல் பறவைகளின் முட்டைகளையும் தின்னும். கூட்டில் வளர்ப்பவர் கோழி முட்டையைத் தருவர்.

தேவாங்கின் கண்ணைத் தோண்டியெடுத்து பில்லி, சூனியத்தில் பயன்படுத்துவர். தெலுங்கு மொழியில் 'தேவாங்க பில்லி' என்று இதை அழைக்கின்றதைக் காணலாம். இதன்

உருண்ட கண்கள் பெண்களை வசியம் செய்ய உதவும் என்று இக் கண்களிலிருந்து மருந்து செய்கின்றனர். தேவாங்கு என்ற பெயர் தெலுங்கு மொழியிலிருந்து தமிழில் வந்திருக்கலாம். தேவாங்கு ஆப்பிரிக்காவிலும் இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிக் காடுகளிலும் காணப்படுவதால் மறைந்துபோன தென் கண்டம் (Lost Continent) லெமூரியாக் கண்டம் என்றழைக்கப்பட்டது. தேவாங்கை இலத்தீன் மொழியில் 'லெமுர்' என்றழைப்பர். தமிழ் நாட்டில் காணப்படும் தேவாங்கை 'Slender Loris' என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இதுவே மகண்மா என்று தமிழிலக்கியத்தில் கூறப்பட்டது. சமய திவாகரர் கூறிய மானிட விலங்கு சிங்கத்தின் முகமும் மனிதனின் உடலும் உடையதென்று கூறப்படுவதால் அஃது இயற்கையில் இல்லாத விலங்காகும். வட மொழியில் 'புருஷமிருகம்' என்றழைப்பர். இது நரசிங்கம் போன்று கற்பனை விலங்காகும். கோழிப் பாம்பு என்று சமயதிவாகரர் குறிப்பிடுவதும் கற்பனையான பாம்பாகும். இந்தப் பாம்பு குறையக் குறையக் கோழி ஆகும் என்பர். குக்குட சர்ப்பம் என்றும் அழைப்பர். கேரளத்தில் அடர்ந்த காடுகளில் கோழிப் பாம்பு இருப்பதாகக் காடு வாழ் மக்கள் கூறினும் இஃது இயற்கையில் வாழும் உண்மையான உயிர் அன்று. ஆகவே, சமயதிவாகரர் கூறிய மூன்று உயிர்களில் மகண்மாவே இயற்கையில் உள்ள விலங்காகும். அந்த மகண்மாவே தேவாங்காகும்.

மனிதன் மனிதனாக வளரும் படிமுறை

மக்களுக்கும் பிற உயிர்களுக்குமுள்ள பெரியதொரு வேற்றுமை யாதெனின், அவர்கள் ஒரு பிறப்பிலேயே மற்றெல்லா உயிர்களின் நிலைகளையும் பெற்று அவற்றிற்கு மேலான நிலைமையை அடைகின்றார்கள். ஒரு மகன் ஒரு பிறப்பிலேயே மரம், விலங்கு, பறவை, குரங்கு ஆகிய இவற்றின் பிறப்புகளை ஊடுருவிச் சென்று மக்கள் நிலையை எய்தி, அதற்கு மேற்பட்ட ஓர் நிலையின் அறிவையும் உடையவனாகிறான். மற்ற உயிர்கள் மக்களைப் போல் வேறு பல உயிர்களின் நிலையைக் கடந்து செல்லமாட்டா. மக்கட் பிறவி ஒன்றுக்குத்தான் அத்தன்மை உண்டு. ஆதலின் மக்களது உணவு தம்மைப் போன்ற பிற உயிர்களைத் தின்னும் நிலையிலிருந்து சிறிது சிறிதாகத் திருந்தி, மரக்கறி யுண்ணும் நிலையை யடைந்திருக்கிறது.

—அறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர், பி. இ.,

(உயிர் வளர்ச்சியிற்கண்ட இறைவடிவம், பக். ௬௭)



மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு அவாய்ப் பல்கலைக் கழகப் பேராசிரியரின் பாராட்டு

அவாய் (Hawai) தீவிலுள்ள அவாய்ப் பல்கலைக் கழகத்தின் இந்தோ - பசிபிக் மொழிகளின் துறையைச் சார்ந்த அறிஞர் திரு. ஜேக். எப். பாமர் (Jack. F. Baumer) மறைமலையடிகள் நூல்நிலையத்திற்குத் தாம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியின் தொடர்பான நூல்களைப் படிப்பதற்காக வந்திருந்தார். அவர் பதிற்றுப்பத்திலுள்ள பதிகங்களை மொழியியல் அடிப்படையில் ஆய்ந்து வருகிறார். அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற அவர் அவாய்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்கின்றார். நூலகத்தைப் பாராட்டி அவர் எழுதியுள்ளது வருமாறு :

"தமிழ்ப் படிப்பின் பல்வேறு துறைகளில் ஆய்வு செய்வதில் உள்ள பல சிக்கல்களை மேனாட்டறிஞர்கள் உணர்ந்து வருகின்ற இக் காலத்தில் மிகச் சிறந்த இம் மறைமலையடிகள் நூல்நிலையத்தை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்த திரு. முத்துக்குமாரசாமிக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி. ஆற்றல் திறன் மிக்கதும் இவ்வகையில் தனியொரு நூலகமாகத் தன்னிகரற்றதுமாகத் திகழும் இந் நூலகம் அளவிடற்கரிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பாட வேறுபாடுகளை ஆய்வதற்கு வேண்டிய நூல்களை வழங்குவதோடு தமிழறிஞர்களை மேனாட்டறிஞர்கள் கண்டு கலந்து பழகுவதற்கு ஏற்ற சூழ்நிலையிலும் இந்நூலகம் அமைந்துள்ளது."

"My sincere and appreciative thanks to Mr. Muthukumaraswamy for his introduction to the very fine Maraimalai Adigal Library, at this time when western scholars approach the

problems of carrying out research in the various areas of Tamil studies, a library of this calibre, and the only one of its kind is of immense importance, not only giving textual research material, but also providing an atmosphere where the western scholars may meet with the Tamil scholars."

Jack F. BAUMER
Dept. of Indo-Pacific languages
University of Hawai.

கழக ஆட்சியாளர் பவளவிழாவுக்கு ஆவியுலகுவாழ் மறைமலையடிகள் குழுவினர், தொடர்பாளர்

திரு. குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள்வழி அனுப்பிய வாழ்த்துரை

"திருவருள் கூட்டுவித்தலாலும், ஆவியுலகுவாழ் பெருமக்களின் உளங்கனிந்த வாழ்த்துதலாலும், இயல்பிலே கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அறிவதறிந்து அதன்கண் நின்று அயராதுழைக்குந் தம் வலிமையினாலும், தமிழன்னை ஈந்த செந்தமிழ்க் கருவூலங்களை உலகறியச் செய்யுந் தஞ்சீரிய திறத்தாலும் ஆற்றுந் தமிழ்த் தொண்டினைப் புகழ்ந்து அன்னாரைப் பெருமைப்படுத்திப் புகழ்மாலை ஏற்றுதல் தங்கடனென வுணர்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்கள் பவளவிழா அமைத்துச் சிறப்புச் செய்தமை சாலப் பொருத்தமேயாம்.

கழகத்தைத் தோற்றுவித்த திரு. திருவரங்கம் பிள்ளை, எவ்வழியில் தமிழன்னையின் பெருமையை உலகு அறிய, செயல்பட விழைந்தனரோ அதனினும் சிறப்புறுவிதத்து, அன்பு, அறிவு, தேற்றம், அவா இன்மை கிளர்ந்தெழத் தமிழ்த் தொண்டாற்றுந் தம் இளவல், திரு. வ. சுப்பையா பிள்ளையின் புகழ்கண்டு, தம்பின்புறு சுற்றமொடு, உருகி மகிழ்ந்தும், உளங்கனிந்தும், மெய்சிலிர்த்துச் செயலற்றிருப்பர்.

உலக இயல்பறிந்து, மகிநுட்பொடு உழைத்து உயர்வெய்தும் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையை எம்மனோர் வாழ்த்துதலென்பது அத்துணைச் சிறப்பாகாவென நினைந்து, எம்மவர் செய்யுங் கடப்பாடு, தமிழ்த்தொண்டர், திரு. வ. சுப்பையா பிள்ளை பல்வளம் பெற்று, ஆக்கும் வினைத்திட்பம் சிறந்து, பைந்தமிழ் மொழிக்குப் பல்கால் தொண்டாற்றி வாழ்ந்திட அருள, அம்மை அம்பலவாணர் அருளடி இறைஞ்சுதலே.

இறைஞ்சினோம், இறைஞ்சுகின்றோம், இறைஞ்சுவோம். தமிழ் வாழ்க. தமிழன்னையின் தவச்செல்வர் திரு வ. சு. வாழ்கவென"

'விரும்பிய குழுவினர்'

குறிப்பு : தங்களின் விருப்பப்படி மதிப்பிற்குரிய அடிகள் முதலியோரிடம் வேண்டியதில் மேலே கண்டவற்றைத் 'தங்களுக்கு எழுதப் பணித்தார்கள்.

—இரா. ந. கு.
27—8—'73

செய்தி மடலில் ஓர் இனிய காட்சி

[பேராசிரியர் ஔவை துரைசாமி, மதுரை.]

"செய்தி மடல்" என்பது சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து வெளி வரும் திங்கள் வெளியீடு. இவ்வாண்டு சூலைத் திங்கள் வெளியீட்டில் பல காட்சிகள் தோன்றிக் காண்பார்க்கும் படிப்பவர்க்கும் இன்பம் செய்கின்றன. அவற்றுள் ஒன்று ஆலைத் தொழிலாளர் ஒருவர்க்கு நடந்த திருமணக் காட்சி. அது, பார்த்து மகிழ்ந்த என் மனத்தைப் பரவசப் படுத்தியதுடன் நல்ல பல எண்ணங்களைத் தூண்டி விட்டது. ஆலை முதல்வர், அருள்வள்ளல் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் மணமகனுக்குப் பரிசு வழங்கும் அரிய காட்சி. மணமக்களின் பெற்றோர்கள் கீழே அமர்ந்திருக்க, வள்ளலவர்கள் ஒருதட்டில் பரிசுகளை வைத்து நின்று அன்பு நிறைந்த முகமும் அருள் தவழும் முகிழ் நகையும் கொண்டு வழங்குகிறார். பரிசு வழங்குவதும் பெறுவதுமாகிய நிகழ்ச்சி காட்டும் நிழற் படங்களில் இருவரும் படமெடுக்கும் கருவியை நோக்குவதுதான் பெரும்பான்மை; இங்கே, வழங்குவோரும் பெறுவோரும் ஒருவரை யொருவர் பார்த்து மகிழ்ந்த வண்ண முள்ளனர். இதனால், இருதிறத்தார்க்கும் பட மெடுப்பதில் கருத்தில்லாமை இனிது விளங்குகிறது. பரிசு பெறுவோர் வழங்குபவரின் பெருந்தன்மையை வியக்கின்றார்கள். வழங்குகிற வள்ளல் பெறுவோரின் இன்முகம் கண்டு உவகை நிறைந்த உள்ளத்தராய் அகம் மலர்கின்றார்.

பரிசு வழங்கும் வள்ளல் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் உலகப் புகழ் பெற்ற ஒரு பெருந் தொழிலதிபர். பரிசு பெறுவோர் அவ் வள்ளலின் தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர் பல்லாயிரவருள் ஒருவர். எளிய தொழிலாளி யொருவரின் திருமணத்தில் பெறலரும் புகழால் பாரத நாட்டுப் பண்புடைச் செல்வர் பலரும் நன்கறிந்து பாராட்டப் பெறும் தொழிலதிபர் கலந்து கொண்டு பரிசு தந்து சிறப்பிப்பது காண்டற் கரிய காட்சியாகும். இந்தக் காட்சியின் உள்ளீடாக இருப்பது பெரிய தொழிலதிபர்க்கும் எளிய தொழிலாளிக்கும் இடையே நிலவும் உண்மையன்புத் தொடர்பாகும். இத்தகைய இனிய தொடர்பு நாட்டில் உள்ள தொழில் நிறுவன முதல்வர் எல்லார்பாலும் உளதாயின் நம் நாடு எத்துணைச் சிறந்த தொழில் வளம் பெற்றிருக்கும் என நினைந்த என் மனம், இக் காட்சியால் குளிர்ப் பெய்தி இறும்பூது கொண்டது.

எங்கோ அடித்த புயல் எங்கள் வீட்டுக் கூரையைப் பிய்த்துக் கெடுத்தது என்பதுபோல, மேலை நாட்டில் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்க்கும் உண்டான வேறுபாடு நம் நாட்டுத் தொழில் வளர்ச்சியைக்

கெடுத்து விட்டது. மேலை நாட்டுத் தொழிலதிபர்கள் தொடக்கத்தில் பொருளாசைப் பேய் பிடித்துத் தொழிலாளர்களை விலங்கினும் கீழாக மதித்துக் கொடுமை செய்தனர். அதனால், தொழிலாளர் உள்ளத்தில் தொழிலதிபர் முதல்வர் ஆகியோர் மேல் உண்டான வெறுப்புப் பின்னர்ப் பகைமையாய்க் கேடு செய்ய லுற்றது. நம் நாட்டுத் தொழிலதிபர்கள் தொழில் வளர்க்கத் தொடங்கியபோது அத்தகைய தீமைக்கு இடமில்லாமல் இருந்தது. தொழிலதிபரும் தொழிலாளர்பால் அருளுள்ளமும் தொழிலாளர் அறவுணர்வும் கொண்டு பொருட் பெருக்கத்துக்குப் பாடு பட்டனர். இருபாலாரிடத்தும் முகிழ்த்து மலர்ந்து நறுமணம் கமழ்ந்தது தொழில் வளம். அரைகுறை நூலறிவு படைத்து வாய்ப்பறை கொட்டும் தீய சக்திகள் தொழிலாளர் சூழலிற் புகுந்து அவர்களது அறியாமையைத் துணைக்கொண்டு பொருளுற்பத்தி பெருகா வண்ணம் கேடு சூழ்ந்தன. வேலை நிறுத்த வுருவிலும் அரசியற் கட்சிப் பூசலுருவிலும் உற்பத்திப் பெருக்கத்துக்கு அத்தீய சக்திகள் தீது புரிகின்றன. அவை தொழிலாள ரினத்தையும் சாராமல், தொழில் முதல்வரினத்தையும் சாராமல், வாழ்தல் வேண்டி இடை நுழைந்து தொழிலாளரை உறிஞ்சி யுண்ணும் வம்பர் இனமாகும். அந்த இனத்தின் சொல்வழித் தொழிலாளர் இயங்குவது அரிசன முன்னேற்றப் பணி, நாட்டு மக்களை அரிசனங்களாக்கி யொதுக்கிய இனத்தின் தலைமையில் இயங்கச் செய்வது போலாம். அத்தீய சக்திகள் நுழையாதபடி தொழிலாளரும் தொழிலதிபரும் கூடிக் கலந்து நிலைமையை ஆய்ந்து செய்வன தவிர்வன தெளிந்து கொள்ளும் நன்னாள் தோன்றி நலம் புரியத் தொடங்குமாயின் தொழிலாளர் நலம் பெறுவர்; தொழிலதிபர் வளமுறுவர்; பொருள் உற்பத்தி மிகப் பெருகும்; நம் நாடும் பொன்னுடாகும்.

திரு ஜி. ஏ. நடேசன் நூற்றாண்டு விழா

இந்திய விடுதலைக்குப் பதிப்புத் துறைவழி பாடுபட்டவர்களுள் குறிப்பிடத் தக்கவர் திரு ஜி. ஏ. நடேசன் அவர்கள். நாட்டுப் பற்றை யூட்டும் நல்ல கருத்துக்களை முதன் முதல் ஆங்கிலத்தில் நூல் வடிவில் வெளியிட்டுப் படித்தவர் உள்ளங்களைக் கவர்ந்தவர் அவர். ஆண்டு தோறும் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டின் பேருரைகளை யெல்லாம் தொகுத்துத் தொகுதி தொகுதியாக வெளியிட்ட பெருமை அவரையே சாரும். பதிப்பாளராக மட்டுமன்றி அவர் ஓர் இதழாசிரியராகவும் திகழ்ந்தார். 'இந்தியன் ரெவியூ' என்ற ஆங்கில இதழை அவர் தாம் மறையும்வரை நடத்தினார். அவர் மறைவுக்குப் பின்னும் அவ்விதழ் பிறரால் தொடர்ந்து நடத்தப் பெறுவது அவருக்குப் பெருமையும் புகழும் சேர்ப்பதாகும். இத்தனைக்கும் மேலாக அவர் நம் நாட்டு மக்கள் எல்லாருடைய உள்ளங்களையும் கவர்ந்த பெரியார்; நமக்கு விடுதலை வாங்கித் தந்த அண்ணல், மகாத்மா காந்தி அடிகளின் நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்தார். அருங் குணங்கள் அனைத்தும் ஒருங்கு கொண்டு

திகழ்ந்த இப் பெரியார் தமிழகத்தில் தோன்றியது தமிழர்தம் தவப் பயனே யாகும்.

நடேசன் அவர்கள் தள்ளா விளையுளுந் தக்காரும் சேர்ந்திலங்கும் தஞ்சைத் தரணியில் 1873 ஆகஸ்ட்டு 24 அன்று பிறந்தார். கும்ப கோணத்திலுள்ள நகர் உயர்நிலைப் பள்ளியில் பயின்றபின், திருச்சி தூய சோசேப்பு கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்று பட்டம் பெற்றார். கல்லூரியில் பயிலும்போதே சங்கச் செயலாளராக இருந்து பல கூட்டங்களை நடத்தினார். பதிப்புத் துறையில் ஏற்பட்ட ஆர்வத்தால் சட்டப் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டார்.



முதலில் 'மெட்ராஸ் டைம்ஸ்' என்ற இதழில் நடேசன் பணி புரியத் தொடங்கினார். ஆனால், ஓராண்டுக்குள் அதை விட்டுவிட்டுத் தாமே ஓர் அச்சகத்தை நிறுவினார்.

சுவாமி விவேகானந்தர் தமிழகத்திற்கு வந்தபோது நடேசனும் அவருடன் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். முதன் முதலில் அவருடைய சமயச் சொற்பொழிவுகளையே தம் அச்சகத்தின் வழி நூல் வடிவில் வெளியிட்டார். பின்னர் விடுதலைக்குழைத்த பெரியார்களின் பேச்சுகளையும் அவர்தம் வாழ்க்கை வரலாறுகளையும் குறைந்த விலைக்கு வெளியிட்டார். சுருங்கக் கூறின் அவர்தம் புத்தக வெளியீட்டகமே இந்தியாவின் முதல் அரசியல் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்ததெனலாம் என்று பேரறிஞர் கே. எம். பணிக்கர் பாராட்டுகிறார்.

பதிப்புத் துறையில் ஈடுபட்ட ஈராண்டுகட்குள் திரு. நடேசன் 'இந்தியன் ரெவியூ' என்ற இதழைத் தொடங்கினார். அதில் அவர் விடுதலை இயக்கத்தை ஆதரிக்கும் வகையில் கட்டுரைகள் வெளியிட்டாலும் வெள்ளையரோடு போராடும் எண்ணத்தைக் காட்டவில்லை. நாட்டு நலனுக்கு ஏற்ற கட்டுரைகளையும் வெளியிட்டார். அந்த இதழும் இளையர், முதியர் என்ற வேறுபாடு பாராது எல்லாருடைய பாராட்டையும் பெற்றிருந்தது.

காந்தி யடிகட்கும் நடேசன் அவர்கட்கும் நெருங்கிய நட்பு நிலவியது. தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் திரு. நடேசன் அவர்கள் இல்லத்திலேயே தங்கினார். இருவர்க்கும் பிற்காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்தது.

இவ்வாறு சிறந்த பதிப்பாளராகவும் இதழாசிரியராகவும் நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவராகவும் திகழ்ந்த பெரியார் ஜி. ஏ. நடேசன் அவர்களின் நூற்றுண்டு விழா அண்மையில் கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் இலக்குவனர் மறைவு

தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் அவர்கள் கடந்த 3—9—73இல் தம் 64ஆம் அகவையில், மதுரையில் தமதில்லத்தில் காலமானர்கள் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம். இவர் தமிழ்ப்பற்று மிக்கவர். 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றவர். நம் கழகத்தோடு நீண்டகாலத் தொடர்பு கொண்டவர். இப்பேராசிரியரின் பிரிவால் வருந்தும் இவருடைய குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர் தம் வாழ்க்கை வரலாறு பின்னர் விரிவாக வெளியிடப்பெறும்.

—ஆசிரியர்

"நாவலராம் இலக்குவனர் நமைப் பிரிந்தார்!"

[நெல்லை ந. சொக்கலிங்கம், எம்.ஏ.,]

"படிப்படியாய்ப் பணியுயர்வு பெற்று யர்ந்த
பைந்தமிழின் நற்றொண்டர்; பண்பு மிக்கார்;
விடாப்பிடியாய்ப் புகுந்திட்ட இந்திக் குத்தான்
வேங்கையெனப் பாய்ந்திட்ட கொள்கைக் குன்றம்!
அடாதசெயல் அரசேதான் செய்துவிட்டால்,
ஆர்த்தெழுந்து முழக்கிடுவார்; துணிவு மிக்கார்;
படாததொல்லை பலவேற்றார்; பைந்தமிழ் காக்கப்
பணியிழந்தார்; சிறைபுகுந்தார்; துன்பம் ஏற்றார்!

வையத்துப் பழந்தமிழின் பண்பாட் டிற்கே
வாழ்வெல்லாம் உழைத்திட்ட தூய தொண்டர்;
ஐயத்திற் கிடமின்றிப் பேசும் பேச்சில்
அவருக்கே இணையாவார் இல்லை என்பேன்!
நையப்பார் கண்ணீரால் சிந்து மாறே
நாவலராம் இலக்குவனர் நமைப்பி ரிந்தார்!
கையற்றுத் தவிக்கின்றோம்; கதறு கின்றோம்!
கனிதமிழின் அருந்தொண்டர் தமையி ழந்தே!

அஞ்சுவதை அவர்வாழ்விற் கண்ட தில்லை;
ஆண்மைக்கோர் எடுத்துக்காட் டாவார்; அன்பால்
நெஞ்சுருகப் பழகிடுவார்; பகைவ ருக்கும்
நண்பரெனத் திகழ்ந்திடுவார்; தமிழைக் காக்கத்
துஞ்சாது தறுகண்மைத் தலைமை ஏற்றார்!
துடிக்கின்ற துயர்ச்செய்தி கேட்ட போதே
நெஞ்சுறுதி இழந்துவிட்டோம்! குறள்வ ழங்கும்
நெறிக்காட்டிச் சென்றவரை என்று காண்போம்?

இரங்கல்

[பேராசிரியர் ஆ. சிவலிங்கனர், மயிலம்]

பேரா சிரியர் இலக்குவ னர்நம்மை
ஆராத் துயரில் அமிழ்த்தியே—பேரா
இயற்கை யடைந்தார் இனியார் தமிழ்க்கா
வியப்போர் புரிவார் விழைந்து.

செய்திகளும் குறிப்புகளும்

'இனியவை இருபது' வெளியீட்டு விழா

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இயற்றிய 'இனியவை இருபது' என்னும் நூல் வெளியீட்டு விழா 20-8-73 இல் சென்னை மாவட்ட மைய நூலகக் கட்டிடத்தில் சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் நூலினை வெளியிட்டு அரிய உரையாற்றினர்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி., எஸ். எஸ். மாரிசாமி எம். பி., மாண்புமிகு அமைச்சர் அன்பில் தருமலிங்கம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் நூலின் சிறப்பினைப் பாராட்டிச் சொற்பொழி வாற்றினர். நூலினை உருவாக்கிய புத்தகச் சோலை சார்பிலும் விற்பனை உரிமை பெற்ற இன்ப நிலையத்தார் சார்பிலும் திரு. பெரியண்ணன் நன்றி கூறினர்.

நாமக்கல் கவிஞர் நினைவுநாள்

தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் முதலாண்டு நினைவு விழா 21-9-73 இல் மயிலை கற்பகாம்பாள் மண்டபத்தில் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர், பேராசிரியர் ம. கி. தசரதன், நாவலாசிரியர் திரு. அகிலன், மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகம். மா. கிருஷ்ணமூர்த்தி, ஈழத்து அறிஞர் லட்சுமணன் ஆகியோர் உரையாற்றினர். முதல்வர் கலைஞர் அவர்கள் உரை யாற்றுகையில், ''தமிழன் என்றோர் இனமுண்டு, தனியாய் அவர்க்கொரு குணமுண்டு'' என்னும் நாமக்கல் கவிஞரின் பாடலுக்கு விளக்கந் தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைக் கருத்தரங்கு

தமிழ்த் தென்றல் - தமிழ்ப் பெரியார் - தமிழ் முனிவர் திரு. வி. க. வின் 91 ஆவது பிறந்தநாள் 26—8—73 ஆம் நாள். மறைந்த நாள் 17 - 9 - 53 ஆம் நாள். இவற்றை முன்னிட்டுச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சார்பில் புலவர் மணி திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் தலைமையில் 29—8—73 அன்று ஒரு சிறப்பு ஆய்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. திரு. வி. க. வின் நூல்கள் பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் திரு. அ. நாகலிங்கம், எம். ஏ. அவர்கள், திரு. வி. க. வின் ''தேசபக்தன்'' என்னும் பொருள் பற்றி ஓர் அரிய ஆய்வுக் கட்டுரையினைப் படித்தார். அதில் சிறப்பாகத் திரு. வி. க. வின் இதழாசிரியர் பணியின் சிறப்புகளை எடுத்து விளக்கினர். திரு. வி. க. வின் தலையங்கங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை என்றும், அத்தகைய தலையங்கங்களை மேலைநாட்டார் தனியாராய்ச்சிக்கு உட்படுத்துகின்றனர் என்றும் எடுத்துக் காட்டினர்.

இக் கருத்தரங்கில் டாக்டர் சி. பால சுப்பிரமணியம். இ. சுந்தர மூர்த்தி, வ. செயதேவன், கவிஞர் மா செல்வராசன், கு. மோகனராசு, வீ. ஞானசிகாமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் பேசும்போது திரு. வி. க. வின் நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டும் என்றார். திரு. வி. க. வின் பல்துறை ஆற்றல்கள் பற்றியும், தமிழ்ப் பேராசிரியர் களின் பிறமொழி ஆற்றல் பற்றியும் விரிவாகப் பேசினார்.

டாக்டர் சாலை இளந்திரையன்,
டாக்டர் சாலினி இளந்திரையன் வேண்டுகோள்

தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களான டாக்டர் சாலை அவர் அவர்களும் சாலினி அவர்களும் தமிழகக் கல்லூரிகளின் தமிழாசிரியப் பெருமக்கட்குக் கீழ்க் காணும் அறிக்கையினை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு :

“வாழ்வின் ஒரே ஒரு துறைக்கு மட்டும் அளவுக்கு அதிகமான முதன்மை ஏற்பட்டு விடுவதால் சிறந்த ஆட்சியில் சிந்தனையாளர்கள் தோன்ற வழியில்லாமற் போகிறது. எனவே, ஒவ்வொரு கல்லூரியின் தமிழ்த் துறையும் ஒரு மன்றமாக உருவாக வேண்டும். அதில் பிற துறை ஆசிரியர்களும் பங்கு கொள்ள வாய்ப்பு வேண்டும். ஓர் ஊரில் உள்ள பல கல்லூரிகளின் மன்றங்கள் இணைந்து ஒரு பேரவை உருவாக வேண்டும். இந்த மன்றம் அல்லது பேரவை திங்களுக்கொருமுறை அல்லது இருமுறை கூடி தாம் தம்முடைய ஆய்வுகளைப் பிறருக்குச் சொல்ல வேண்டும். பிறருடைய கருத்தாடல்கட்குச் செவி தர வேண்டும். நாம் ஒதுங்கி நிற்பதால் கல்லாதவர்களே எல்லாத் துறை களிலும் தொற்றிக் கிடக்கின்றனர்.

இந்த நலிவைப் போக்க, ஒரு துறையினராகிய நாம் பலர் ஆங்காங்கே கூடியிருக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு சமுதாயத்திற்கு ஆக்கப் பணிகள் ஆற்றுவதில் ஈடுபட வேண்டும். அன்பு கூர்ந்து சிந்தியுங்கள்”.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

சென்னை நக்கீரர் கழகத்தார் நடத்தும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் சார்பில், 15-9-73 மாலை 6-15 மணிக்கு, பவழக்காரத் தெரு 44, ஏ ஆர். சி. உயர்நிலைப் பள்ளியில் திரு. நடன காசிநாதன், எம்.ஏ., அவர்கள் ‘கல்வெட்டியல்’ இரண்டாவது சொற்பொழிவினை நிகழ்த்துவார். இச் சொற்பொழிவுகள் ஒவ்வொரு திங்களும் மூன்றுவது சனிக்கிழமை யன்று நடைபெறு மெனவும், சொற்பொழிவுகளின் முடிவில், தேர்வில் முதலாவதாக வெற்றி பெறுவோருக்குத் திரு. வி. க. வெள்ளிப் பதக்கமும், தவறாது வருபவர்கட்குச் சான்றிதழ்களும் வழங்கப் பெறும் எனவும் நக்கீரர் கழகத்தார் அறிவிக்கின்றனர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

மார்ட்டின் ராட்லர் (Martin Rattler)

—சுருக்கத் தமிழாக்கம்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.

இக் கதை மார்ட்டின் என்னும் பள்ளிச் சிறுவனைப் பற்றியது. அவன் தன் அத்தையின் அன்பில் வாழ்முறை—கடற் பயணம் சென்று வெளிநாட்டில் பட்ட துன்பங்கள்—வைரச் சுரங்கம் கண்ட விந்தை இன்னபிறச் செய்திகளைக் காணலாம். பள்ளிச் சிறுர் படித்தின்புறத்தக்க வகையில் இனிய எளிய தமிழில் எழுதப் பட்டுள்ளது. பள்ளி நூலகங்களிலும் பொது நூலகங்களிலும் இருக்க வேண்டிய நூல். படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு.

விலை ரூ. 4 50

ஒரே ஒரு பிள்ளை

—புலவர் ச. தமிழ்வேலன், க.மு.

இஃது அரசினர் பரிசு பெற்ற நூல். தமிழிலக்கியச் சுவை, குடும்பவாழ்க்கை, கடமை உணர்வு ஆகியவற்றை உணர்த்தும் வகையில் கதைவடிவில் பள்ளிச் சிருரும், இளமையிற் கல்லாத முதியோரும் கற்றுப் பயனெய்தும் வகையில் படங்களுடன் வெளி வந்திருக்கும் சிறிய — ஆனுல் அரிய நூல். படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு.

விலை ரூ. 2 50

காட்டு வளம்

—திரு. உ. அஞ்சனம் அழகிய பிள்ளை, பி.எசி. (எ.ஜி.)

கல்லூரி மாணவர்கள் கற்றுத் தேறவேண்டிய கலைகள் பல. அவற்றுள் பயிர்த் தொழிலும் ஒன்று. நாட்டில் பயிர் வளர்த்தல் மட்டும் பயிர்த் தொழிலாகாது. காட்டில் மரங்கள் பல்கி வளத்தோடு திகழ்வது எப்படி என்பதை அறிந்து பணியாற்றலும் பயிர்த் தொழிலின்பாற்பட்டதேயாகும். எனவேதான் மரங்களைப் பற்றிய கல்வி வேளாண்மை பயிலும் மாணவர்கட்கு அளிக்கப்படுகின்றது. முன்னர்ப் 'பழவளம்' என்னும் நூலினை எழுதிய அவ்வாசிரியரே இந்தக் 'காட்டு வளத்'தினையும் எழுதியுள்ளார். கல்லூரிகளிலும் பொதுநூலகங்களிலும் இருக்க வேண்டிய நூல். விலை ரூ. 8 00

தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை பவள விழா மலர் (தெ. இ. தமிழ்ச் சங்க வெளியீடு)

சை. சி. நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர், தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்களின் 75 ஆம் ஆண்டு நிறைவினை யொட்டி வெளிவந்திருக்கும் இம்மலரில், சிந்தைக்கினிய கட்டுரைகள் கருத்துக்கினிய கவிதைகள், செம்பொருட் பாமாலைகள், கழக நூலா சிரியர்கள் முதலியோர் கருத்துரைகள் பவளவிழாச் செல்வரின் பணிச்சிறப்பினை உணர்த்தும் படங்கள் ஆகியன நிறைந்து வண்ண முகப்புடன் ஏற்றமும் எழிலும் மிக்க மலராய்-எழுநூறு பக்கங்கட்கு மேற்பட்ட இனிய மலராய் அறிவுமணம் பரப்பும் அறிவுக் கருவூல மாகத் திகழ்கிறது.

பரிசுப் பதிப்பு ரூ. 15 00 அட்டைக் கட்டு ரூ. 12 00

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

கட்டுரைக் களஞ்சியம்—பா. வளனரசு, எம்.ஏ.

உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்கும், கல்லூரி மாணவர் கட்கும், பயன்படக்கூடிய நல்ல தமிழில் எழுதப்பெற்ற 37 அரிய கட்டுரைகளின் தொகுப்பு. 2-00

கலைச் சொல் அகராதி --பாடநூல் நிறுவன வெளியீடு

கணிதம் – பௌதிகம் – வேதியியல் – தாவர இயல் – விலங் கியல் பொருளாதாரம் – அரசியல் – உணவியல் – புவியியல் – வரலாறு ஆகிய துறைகளில் வழங்கும் கலைச் சொற்களின் தொகுப்பு. 10-00

பள்ளிப் பறவைகள்—பெருஞ்சித்திரன்

குழந்தைகளுக்காக எழுதப்பட்ட அழகிய படங்களுடன் கூடிய பாடல் தொகுப்பு. 3-50

எங்கே போகிறோம்—அகிலன்

தற்கால அரசியலில் நாம் எங்கே போகிறோம்; நாடு எங்கே போகிறது என்னும் வினாக்களுக்கு விடை தரும் முறையில் எழுதப்பட்ட புதினம். 7-50

பி. பி. சி. தமிழோசையில் – டாக்டர் பொற்கோ

பி. பி. சி. என்னும் பிரிட்டிஷ் வானொலி நிலையம், தமிழுக்கு இடந்தந்து நம்மை மகிழ்விக்கும் மாண்பினை இந் நூலில் காணலாம். 1-60

இனியவை இருபது—தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

கலைஞர் அவர்கள் வெளிநாடு சென்றபோது கண்ட காட்சி களையும் பெற்ற பட்டறிவினையும் புதிய முறையில் இலக்கியம் தோன்ற எழுதியுள்ள நூல். 5-00

தற்காலத் தமிழ் இலக்கியம்—இரா. தண்டாயுதம்

அண்மையில் வெளிவந்துள்ள இலக்கியங்கள் பற்றியதோர் ஆய்வு நூல். இலக்கிய ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படத் தக்கது. 4 50

தாமோதரம்—சி. வை. தாமோதரம் பிள்ளை, பி.ஏ.பி.எல்.

காலஞ்சென்ற உயர் திரு சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் எழுதிய உரைநடைப் பகுதிகளின் தொகுப்பே 'தாமோ தரம்' என்னும் இந் நூல். திரு. தாமோதரம் பிள்ளையவர்களின் பதிப்புத்துறைப் பணிச்சிறப்பினை அறிய உதவும் அரிய தொகுப்பு நூல் 4-00

THE SIMILE OF MURUGAN

Tamil Literature of South India

—Dr. Kamil Zvelebil

Very recent Publication containing chapters on various aspects of Tamil Literature ranging from Sangam Classics to Modern "Puthuk Kavithai" The new type of Poetry. Rs. 291-20

அப்பர் அச்சகம், சென்னை-1.